அனைத்துலக தமிழ் சஞ்சிகை

# தமிழ் உலகம் London

இல.19 May 2005

International Tamil Magazine

COMPLIMENTS

'உலகத்தமிழர் பொருளாதார உயர்வை ஊக்கிடுவோம்'



## அமெரிக்கா புலிகளுடன் மென்போக்கில் நடந்து கொள்ளும் என எதிர்பார்ப்பு....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# futture homes

Mortgage Specialist

NEW UTHAYAN PUBLICATION (PVT.) LTD. JAFFNA 14/5/2005 SRI LANKA 392/2, NAVALAR ROAD



- Residential Mortgages
- Remortgages
- Commercial Mortgages
- Secured Loans
- Life Insurance
- Building Insurance
- Public Liability Insurance
- Personal Loans

We also do finance to purchase properties in Sri Lanka, Portugal, Spain, France etc.

குறைந்த வட்டியுடன் 95 வீதத்திற்கும் மேற்பட்ட வீட்டுக் கடன்களை (Mortgage) மிக இலகுவான வழிமுறைகளில் செய்துதரப்படும்,

போதிய வருமானம் குறைவு!
நிரந்தர முகவரி இன்மை!!
நீதிமன்றப் பதிவுகள்!!!
வங்கிகள் கடன் வழங்க மறுப்பு!!!!
அனைத்தையும் இலகுவாக்க காத்திருக்கிறோம்.



வெளிநாடுகளில் இருந்து வந்து பிரித்தானியாவில் வீடுவாங்க விருப்புகிறீர்களா, அனைத்து விடையங்களையும் எங்களிடம் விட்டுவிடுங்கள் : வீடு உங்களது ஆகிவீடும்.

மேலதிக விபரங்களுக்கு:- முரளி
Futture Home
17A Walm Lane, Willesden Green, London NW2 5SJ
T: 0208 830 3457 F : 0208 830 4111 info@futturehome.com

* YOUR HOME IS AT RISK IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON A MORTGAGE OR OTHER LOAN SECURED ON IT. * Futture Home Limited is authorised and regulated by the Financial Services Authority. reg 302431

# Pearl Fashion UK Ltd



உங்கள் மேனியை அழகூட்டும் ஆடம்பரப்பொருட்களையும் மற்றும் நறுமணங்களைத்தரும் வாசனைத்திரவியங்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

உங்கள் அழகை மேலும் ஒருபடி உயர்த்தும் Pearl Fashion நிறுவனத்தின் பொருட்களை ஒருமுறை பாவித்துப்பாருங்கள்.



வியாபார தமிழ் வர்த்தகநிலையங்களுக்கு விலைக்குறைப்புகள் வழங்கப்படும்



Pearl Fashion UK Ltd.
LONDON
020 8905 7203

Cosmetics Woman's & Men's Perfumes

Tel: 077 6676 8433 / 077 1782 7214
E.mail: pearlfashion@hotmail.co.uk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் உலகம்
London
தமிழ் உலகம்
இலண்டன்
அனைத்துலக தமிழ் சஞ்சிகை

Published by
TAMILULAGAM
Global Lanka Publications Ltd.
The United Kingdom

Managing Director / Executive Editor
S.Krishnathasan

Editor-in-chief
V.Tharumalingam

Editorial Contributors
R.Sharmila, S.Pratheepa,
K.Sridevi, T.Alegesan,
P.Loganathan, D.Ananth,
S.Jesuraj, K.W.Selvarajah.

Design
R.Sharmila

Sales & Marketing
K.Chandramohan

Head Office:- TAMILULAGAM
899-901 Finchley Road
London NW11 7PE
The United Kingdom

Tel: 0044 20 8455 9001
Fax: 0044 20 8731 7870
E.Mail: tu@globallanka.co.uk

Sri Lanka Office:-
TAMILULAGAM
50-1/8, Colombo Plaza Complex
Galle Road, Wellawatte,
Colombo - 06, Sri Lanka

Tel: 0094 112 59 1044
Fax: 0094 112 59 1047
E.Mail: tugloballanka@sltnet.lk

Printed by
Vakmee Printers

தமிழ்உலகம் வெளியாகும் நாடுகளுக்கான
வருட சந்தா முற்பண கட்டணங்கள்
(12 இதழ்களுக்கு அஞ்சல் கட்டணம் உட்பட)
(Annual subscription including postage)

FOR 12 ISSUES

| | | |
|---|---|---|
| Australia | : | 35 AUD |
| Canada | : | 35 CAD |
| Denmark | : | 25EUR |
| France | : | 25EUR |
| India | : | 500 INR |
| Germany | : | 25EUR |
| Italy | : | 25EUR |
| Malaysia | : | 100 MYR |
| Netherlands | : | 25EUR |
| New Zeeland | : | 30 NZD |
| Norway | : | 180 NOK |
| Singapore | : | 45 SGD |
| Sri Lanka | : | 500LKR |
| Sweden | : | 200 SEK |
| Switzerland | : | 35 CHF |
| United Kingdom | : | 15GBP |
| USA | : | 30 USD |
| All Other Country | : | 30 USD |

# May 2005



தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்

- குறள் 510

ஆராயாது தெளிதலும், ஆராய்ந்து தெளிந்தவனிடத்து ஐயப்பாடும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

To trust a person whom you have not tried and to suspect a person who has been tried and found worthy will bring alike endless ills.

## சக பக்கங்களில்

அரசியலும் தற்கால நிகழ்வுகளும்
தாயகம் - பேரினவாத போக்கை வளர்த்து ........ 02
புலம்பெயர் மண் - இலண்டனில் சாவகச்சேரி இந்துவின் ........ 05
உலகநோக்கு - ஈராக்கில் மலரும் அமெரிக்கா ........ 06
பொருளாதாரமும் அதன் வலிமையும்
தாயகம் - கடன் பெறக் கற்றுக்கொள்ளவேண்டும் - எஸ். சிறிரஞ்சன் ........ 08
மலையகம் - மலையக வீடமைப்பு திட்டங்கள் ........ 09
உலகம் - உயர்ந்து வரும் பெற்றோலிய ........ 10
கலையும் கலாசாரமும்
இரண்டாம் மொழியாக தமிழை ........ 12
ஒப்புயர்வற்ற தவில் கலைஞன், நூல் விமர்சனம் ........ 13
சமூகமும் சூழலும்
நேர்முகம் - நாடகக்கலைஞர் - வல்வையூரான் ........ 14
மருத்துவம் - டாக்டர் சுவர்ணகுமார் ........ 15
மகளிர் பகுதி - ........ 16
காலமும் மாற்றமும்
இராசி பலன் - சோதிட ஆய்வாளர் த.அழகேசன் ........ 18
விசேட தினங்கள் ........ 19
Woman & Children ........ 20
கருத்தும் கணிப்பும்
வாசகர் எண்ணங்கள் ........ 22
சந்தா, விஞ்ஞானி கலிலியோவை ........ 23
காட்சியும் கானமும்
திரைவலம் ........ 24
எண்ணும் எழுத்தும்
தொடர்கதை - திக்கம் சிவயோகமலர் ........ 26
மழலைகள் மன்றம் ........ 28
கவி வலம் ........ 30
குறுக்கெழுத்துப்போட்டி ........ 31
சிறுகதை - ச.முருகானந்தன் ........ 32
விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் ........ 34
பாடசாலையும் தராதரங்களும் - வடக்கு கிழக்கு கல்வியை ........ 36
பொழுதும் ஓய்வும்
உலக விநோதங்கள் ........ 37
சித்திரத்தொடர்கதை - தாரா - ........ 38
விளையாட்டு ........ 39
விளம்பரமும் வியாபாரமும்
மணமக்கள் தேடல் ........ 40
வர்த்தக விளம்பரங்கள் ........ 41



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரினவாத போக்கை வளர்த்து இனப்பிரச்சினையை தீர்க்க நினைப்பது...!

பிளந்து கிடக்கும் பூமியை பிளாஸ்ரர் போட்டு ஒட்டும் பிரயத்தனம் ஒன்று இலங்கையின் அரசியலார் மட்டத்தில் நடைபெற்று வருகிறது. பேரினவாத நிலைப்பாட்டை கைவிடவும் கூடாது இனப் பிரசசினைக்கு தீர்வு காணவும் வேண்டும் என்ற ஒரு விருப்பும், அரசு பதவியிழக்கவும் விடக்கூடாது, போர் தொடங்குவதை அனுமதிக்கவும் கூடாது என்னும் இன்னுமொரு விருப்பும் தென்னிலங்கையின் ஆட்சித்தலைமையை குடுமியில் பிடித்து ஆட்டி வருகின்றது. அதாவது, ஒன்றுடன் ஒன்றை பிணைத்து செயற்படுத்த முடியாத இரண்டு ஆசைகளை ‘வழுக்கலை’ பொத்திப்பிடித்த குரங்கு போல பிடித்தபடி அங்கலாய்க்கும் நிலை தொடர்கிறது. ‘கேக்’ துண்டை விழுங்கவும் ஆசை வைத்திருக்கவும் ஆசை!

இந்தத்தடுமாற்றத்தில் உதவுவதற்கும் யாருமற்ற நிலைவேறு. நோர்வேயுடன் கூடவே அமெரிக்காவும் இணைந்து கொண்டு விடுதலைப்புலிகளை உள்ளடக்கிய பொதுக்கட்டமைப்பு தேவை என்று ஒரே பிடியாக கூறத்தொடங்கியுள்ளமை ஆட்சித்தரப்பினருக்கு தலையிடியாகி விட்டது. அமெரிக்க பிரதி உதவி வெளிவிவகார அமைச்சர் கிறிஸ்ரீனா றொக்கா ஏப்ரல் பிற்பகுதியில் கொழும்பு சென்று இந்த விவகாரத்திற்கே முக்கியத்துவம் கொடுத்திருந்தார். அவர் ஒரு முக்கிய விடயத்தையும் வலியுறுத்தினார். இலங்கையின் அரசாங்கம் ஒரு குரலில் பேச வேண்டும் என்பது அவரின் வெளிப்பாடு. பொதுக்கட்டமைப்பு தொடர்பில் ஜனாதிபதி ஒரு விதமாகவும், ஜே.வீ.பி வேறு விதமாகவும் கொண்டிருக்கும் நிலைப்பாட்டையே அவர் அவ்விதம் எடுத்துக்காட்டினார். உண்மையில் தென்னிலங்கை முழுவதுமே ஒரு குரலில் பேசவேண்டும் என்பதே தமிழ்த்தரப்பின் நிலைப்பாடு என்பது வேறு விடயம். கிறிஸ்ரீனா றொக்கா முக்கியமான சமிக்ஞை ஒன்றையும் காட்டி சென்றிருக்கிறார். அதாவது விடுதலைப்புலிகள் வன்முறையை கை விடுவார்களானால் அமெரிக்கா அவர்களுடன் தொடர்புகளை வைத்திருப்பதற்கு முன் வரலாம் என்று தமிழர் கூட்டமைப்பின் தலைவர் திரு. சம்பந் தனிடம் தெரிவித்



கிறிஸ்டினா ரொக்கா

திருந்தார். அமெரிக்கா புலிகளுடன் மென்போக்கில் நடந்து கொள்ளும் என்று தெரிவிக்கிறாரா?

இவை ஒரு புறமிருக்க, இரண்டு தசாப்த கால போரில் ஏற்பட்ட அழிவுகளில் அரைவாசியை இரண்டு மணித்தியாலங்களில் செய்து முடித்த சுனாமிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு ஏப்ரல் 26 ஆம் திகதியுடன் நான்கு மாதங்கள் கடந்திருக்கின்றன. இன்னுமே மனிதாபிமான உலகம் வாரி வழங்கிய நிதியை பகிர்ந்து கொள்வதற்கான நியாயமான ஏற்பாடொன்றை முடிவு செய்ய தெரியாமல் அரசாங்கம் திண்டாடுவதன் பின்னணியை வார்த்தைகளால் வர்ணிப்பதில் தான் நூற்றுக்கணக்கான புத்திஜீவிகளின் சக்தி செலவிடப்பட்டு கொண்டிருக்கிறது.

ஏழில் செவ்வாய்க்காரியை மணம் செய்து கொண்டு ‘நித்திய கண்டம் பூரண ஆயுள்’ என்று வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கும் சுதந்திர முன்னணி நடித்துக்காட்டும் நாடகத்தின் முடிவில் மிஞ்சப் போவது என்ன என்று ஆவலுடன் காத்திருப்பதற்கு எதுவும் இல்லை. ஒப்பந்தங்கள் எழுதி ஓட்டாண்டியாகி விட்ட வரலாறுடையது தமிழினம். இதனால் சுனாமி உதவி நிதியை நியாயமாகப்பகிர்ந்து கொள்ளுவதற்கான பொதுக்கட்டமைப்போ, அதனைத் தொடர்ந்து முன்னெடுக்கப் படவுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபையோ, இறுதித்தீர்வு என இது வரை ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சமஷ்டி அமைப்போ ஒப்பந்தங்கள் வழியாக நிறைவேறக்கூடிய மக்கள் தளம் இருக்கிறதா என்பதைப்பார்த்தல் வேண்டும். முரண்பட்டு நிற்கக்கூடிய மக்களின் மத்தியில் ‘பொதுக் கட்டமைப்பையோ’ வேறு எந்தத்தீர்வையோ அடித்துப்பழுக்க வைப்பதினால் நாளடைவில் தனிக்கட்டமைப்புக்களே மிஞ்சலாம். இனங்கள் இந்நாட்டில் சுமுகமாக வாழப்போகின்றன. அதற்கான தளமாக இந்நாடு இருக்க வேண்டும். இதற்கான பணிகளை ஒரு மணிநேரத்தையும் தாமதிக்காமல் ஆரம்பிக்க வேண்டும் என்று விருப்புக்கொண்டுள்ள மக்கள் கூட்டமும், தலைமையும் எது? இத்தகைய ஒரு தலைமை ஆகாயத்திலிருந்து குதித்து ஓடோடி வருமா? நடைமுறையிலுள்ள யதார்த்த நிலை என்ன? முக்கியமாக தென்னிலங்கையின் பேரினவாதம் தனது வேலைத்திட்டத்தை கைவிடத்தயாராகி விட்டதா? அனைத்து சிங்களத்தலைமையிடமும் காணப்படும் இந்த குறைபாட்டை விரட்டியடிக்கும் வேலைத்திட்டம் தயாரா? 2010 ஆம் ஆண்டின் மின்சாரத்தேவை இவ்வளவு என்று கணிப்பிட்டு 2005 ஆம் ஆண்டில் மின் நிலையம் அமைக்கும் வேலைகளை தொடங்க தெரிந்த அரசாங்கம் சமஷ்டி எந்த ஆண்டில் தேவைப் படும் என்று கருதுகின்றது? அதற்கான அடிக்கட்டுமானங்களை தொடங்கி விட்டதா? ‘தமிழர் தாயக பகுதிகளை உள்ளடக்கிய சமஷ்டி இணைப்பாட்சி முறையை ஏற்படுத்தி தமிழர்களுக்கு வழங்கப்போகிறோம். இலங்கை அனைத்து இனங்களுக்கும் சொந்தமான நாடு’ என்ற அடிப்படையை தென்னிலங்கை மக்கள் ஏற்றுக்கொள்ளச்செய்வதற்கான பகிரங்க பிரச்சார நடவடிக்கைகள் ஆரம்பித்து விட்டனவா? குறைந்த பட்சம் இதனை வாய் விட்டு துணிந்து கூறும் சிங்களத் தலைவர் உருவாகி விட்டாரா? இல்லையெனில் நாம் எந்தத்தளத்தில் நின்று இனப்பிரச்சினைக்கு தீர்வை காண ஆயத்தமாகிறோம்?

மே தினத்தன்று சிவப்பு நிற ஆடைகளை அணிந்து ஊர்கோலம் கொள்ளும் ஜே.வி.பி. இன்று நன்கு வளர்ச்சியடைந்த ஒரு பாராளுமன்றக்கட்சி. அடுத்து வரும் ஒரு சந்தர்ப்பத்தில் தனது தலைமையில் ஒரு ஆட்சியை அமைத்து விட வாய்ப்புகளைத்தேடி அலையும் ஒரு கட்சி.

தன்னை கம்யூனிஸ்ட் கட்சியென காட்டிக் கொண்டு அதே வேளை, சிங்கள தேசம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்துயிர் பெற்று எழுந்து மறுமலர்ச்சி பெற்ற பௌத்த மதத்தின் கீழ் ஒற்றுமைப்பட்டு சிங்களக்கொடியின் கீழ் தம்மால் ஆளப்படும் நாடாக இலங்கையை கனவு கண்டு வருவது ஜே.வி.பி. இக்கட்சியின் சித்தாந்த தளம் வெளிப்பார்வைக்கு வர்க்க அரசியல் போலவும் உண்மையில் அதன் உட்கிடக்கை சிங்களப்பௌத்தம் என்பதாகவும் அமைந்துள்ளது. பரந்த மக்கள் விடுதலை என்பது அதன் அடி நாதமான உயிர்ப்புத்தளமாக இல்லை. லெனின் அங்கீகரித்ததும், ஜே.வி.பியின் மறைந்த தலைவர் ரோஹன விஜயவீர ஒரு காலத்தில் (ஏனோ) அங்கீகரித்ததுமான சிறுபான்மை இனங்களுக்கான சுயநிர்ணய உரிமையையே அது அடியொட்ட நிராக்கரிக்கின்றது. அடிப்படையில் கம்யூனிஸ விரோதிகளென ஜே.வி.பியின் ஆரம்ப கால தலைவர்கள் 1966 இல் அன்றைய கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் சண்முகதாசனால் அம்பலப்படுத்தப்பட்டவர்களாவர். முற்றிபழுத்த கம்யூனிஸ வாதியான சண்முகதாசன், ரோஹன விஜயவீர


சம்பந்தன்

உள்ளிட்ட அன்றைய குழுவினரை மாக்சிச விரோதிகள் என இனங்கண்டு தனது கட்சியிலிருந்து வெளியேற்றியிருந்தார். இதன் பின்னர் 1967 இல் மக்கள் விடுதலை முன்னணி என்னும் அமைப்பை தோற்றுவித்து 1971 ஏப்ரலில் ஒன்றும், 1987-89 களில் இன்னொன்றுமாக இரண்டு இளைஞர் ஆயுதக்கிளர்ச்சிகளை நடத்தி தோல்வி கண்டவர்கள். அன்றெல்லாம் எந்த சமூக அமைப்பை எதிர்த்து நின்றார்களோ அதனை தூக்கி நிறுத்தி வைத்திருக்கும் அமைப்புகளில் பங்குகேட்டு சண்டை பிடிக்கும் அமைப்பாக விளங்கும் இவர்கள் சர்வதேச முதலாளித்துவ பக்கபலத்துடன் நிமிர்ந்து நிற்கும் இலங்கையரசின் ஆட்சியை பிடிக்க ஆசைப்பட்டு நிற்கின்றனர். ஜே.வி.பி. தோற்றமெடுப்பதற்கு வெகு முன்னரே 'இலங்கை சிங்கள பௌத்தர்களுக்குரியது' என்பதை அடிநாதமாகக்கொண்ட பேரினவாதம் நிறுவனமயப்படுத்தப்பட்டிருந்தது. இதற்கு 1940 களில் அமரர் பண்டாரநாயக்காவே பிதாமகனாக இருந்தார். ஜே.வி.பியின் தலைமை கூட மார்க்ஸிஸ சித்தாந்தங்களை விடவும் பண்டாரநாயக்கா சிந்தனைகளாலேயே அதிகம் கவரப்பட்டிருந்தது என்று கூறலாம். ரோஹன விஜயவீர 'மக்கள் விடுதலை முன்னணியை' ஆரம்பித்த கால கட்டமான 1967 ஆண்டுப்பகுதிகள் இலங்கையில் டட்லி சேனநாயக்க தலைமையில் தமிழரசுக்கட்சி பங்காளியாக இருந்து ஆட்சி செய்த காலமாகும். அப்போது தமிழரசுக் கட்சி அமைச்சரான திருச்செல்வத்திற்கு அம்பாந்தோட்டை வரை அதிகாரமா? என்ற வகையில் இனவாத சூழல் தென்னிலங்கையில் தீவிரவாத இளைஞர்கள் மத்தியில் பரவியிருந்தது. இத்தகையதொரு புறச்சூழல் தோற்றுவித்த தலைமையே இன்று தமிழர்கள் விடயத்தில் மூர்க்கத்தனமான பகைமையை காட்டுகிறது என்பது உண்மையாகும். பொதுக்கட்டமைப்பை சுதந்திர முன்னணி அரசாங்கம் அமைத்தால் தாம் அதே தினமே அரசிலிருந்து வெளியேறி விடுவதாக ஜே.வீ.பி. பிரகடனம் செய்துள்ளதை இத்தகைய பின்னணியிலிருந்தே நோக்குதல் வேண்டும்.

ஜே.வி.பி. இன்றைய அரசின் பிரதான பங்காளி மட்டுமல்ல அது விலகிய பின் அரசாங்கம் பெரும்பான்மையின்றி கலைந்து விடும் என்ற நிலையே உள்ளது. ஜே.வி.பி.யின் சிங்கள ஆதரவுத்தளம், பேரினவாத சித்தாந்தம் என்பன பொதுக்கட்டமைப்பை ஏற்றுக்கொள்ளாது. தமிழினத்திற்கு இலங்கையில் ஒரு தனியான பாரம்பரிய தாயகம் உண்டு என்பதை அது ஏற்றுக் கொள்ளவில்லை. இந்நிலையில், பொதுக் கட்டமைப்பு, இடைக்கால நிர்வாகம், சமஷ்டி ஆட்சி போன்ற எந்தவொரு யோசனைக்கும் எதிராக அது தென்னிலங்கையில் மக்களியக்கமொன்றை கட்டி வளர்த்து வருகின்றது. 'தேசப்பற்றுள்ள இயக்கம்' என்னும் அமைப்பை பயன்படுத்தி அரசின் அங்கமாக இருந்தபடியே அரசாங்கத்தையும், ஜனாதிபதியையும் விமர்சித்து அது மக்கள் மத்தியில் செல்வாக்கை வளர்த்து வருகின்றது. தென்னிலங்கையில் பொதுக்கட்டமைப்புக்கோ, இடைக் கால நிர்வாகத்திற்கோ, சம்ஷ்டி முறைக்கோ ஆதரவான மக்கள் இயக்கம் என்பதே இல்லாத நிலையில், ஜே.வி.பியின் பேரின வாத இயக்கமே வளர்ச்சி பெற்று வரும்


விமல் வீரவன்ச

நிலையில், இது அதிகாரப்பரவலாக்கலை சாத்தியப்படுத்தும் தளமா என்பதை சிந்தித்துப்பார்ப்பது அவசியமாகும். மேல் மட்டத்து தலைவர்களை அழுத்தம் கொடுத்து ஒப்புதல் பெற்று செய்யப்படக்கூடிய ஒப்பந்தங்களின் ஆயுள் எவ்வளவாக இருக்கும்? உலக நாடுகளின் ஆதரவும் நோர்வேயின் நேரடி அனுசரணையும் பெற்ற போர் நிறுத்த ஒப்பந்தமே இன்றைய நிலையில் கேள்விக்குறி முன் நிற்பதை கிழக்கின் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. மக்களின் மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்தி அதனை நிரந்தரமாக பேணும் பொதுக்கட்டமைப்பு ஒன்றே முதலில் தேவைப்படுவதாகும். தென்னிலங்கையின் சிங்களப்பேரின

**- கலைவாணன்.**

வாதப்போக்குகளில் சாதகமான மாற்றங்களை காணமுடியாத நிலையே இப்பொழுது உள்ளது. இதனால் ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்கள் சம உரிமையுடன் அல்லது சமஷ்டி அமைப்புடன் கூடிய சுய நிர்ணய உரிமை கொண்டவர்களாக வாழ முடியும் என்னும் நம்பிக்கை குதிரைக்கொம்பாக மாறி விட்ட நிலையே உள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனத்தாலும் மனத்தாலும் தமிழர்கள்

-நீரன்

இனத்தால் தமிழர்களாக உள்ளவர்கள் மத்தியில் மனத்தால் தமிழர்களை உருவாக்கிய மகான்கள் தமிழர் வரலாற்றில் மறக்கப்படுவதில்லை. தமிழர்களின் தேசிய உணர்வை வளர்த்து பேணி அதனுடன் தம்மை இரண்டறப்பிணைத்துக் கொண்டு, உணர்வுகளால் தமிழர்களாக கொழும்பில் தமது வாழ்நாளில் பெரும் பகுதியை நடத்தியவர்களுள் ஒருவராகவே தந்தை செல்வாவும் இருந்தார். 1977 ஏப்ரல் 26 ஆம் நாள் தனது 79 வது வயதில் மறைந்தார். பிரபல அரசியல் விமர்சகராக விளங்கி தமிழினத்தின் தேசிய உணர்வை பக்குவமாக பேணி வந்தவர் தில்லைக்கூத்தன் என்னும் இளையதம்பி நடராசா அவர்கள். இவர் கடந்த ஏப்ரல் 08 ஆம் நாள் காலமானார்.

சுதந்திர இலங்கையில் தமிழரின் தேசிய உணர்வை ஊட்டி தமிழன் தன்னைத்தான் ஆளும் நிலை வேண்டும் என்று உறுதியாகவும் சூழுரைத்து மறைந்தவர் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள். தமிழ் தேசியத்தை உருவாக்கும் பணியில் தந்தை செல்வா அவர்கள் அவர் மறையும் வரையிலான 33 வருட அரசியல் வாழ்வில் அரும்பாடு பட வேண்டியிருந்தது. 1949 டிசெம்பர் மாதத்தில் தமிழரசுக்கட்சியை தொடக்கிய இவர் தேசிய உணர்வுக்கு குந்தகமாக இருந்த வற்றை இனங்கண்டு கொண்டு இனத்தை தூய்மைப்படுத்த முனைந்தார். தமிழினத்தை பிரித்து சிந்திக்க வைத்த சாதி முறையை ஒழிப்பதில் பெரும் அக்கறை காட்டினார். பிரதேச சிந்தனையை முறியடிக்கும் விதத்தில் செயற்பட்டார். இஸ்லாமிய மக்களையும் தமிழர்களுடன் ஒன்றுபடுத்தி ஒற்றுமையை முன்னெடுத்து சாதனை புரிந்தவரும் தந்தை செல்வாவே. இந்திய வம்சாவளி மக்களின் குடியுரிமை வாக்குரிமை 1948 இல் பறிக்கப்பட்டபோது அதற்கெதிரான போராட்டத்தை முன்னெடுத்ததுடன் இலங்கைத்தமிழர்களுக்கு எதிர்காலத்தில் நடக்கவிருப்பதற்கான முன்னோடி நடவடிக்கை இது என விமர்சித்தார். இதனால் இவர் ஒரு தீர்க்கதரிசி எனவும் வர்ணிக்கப்பட்டார்.

தமிழர்கள் தமது தாயகப்பகுதிகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்பதில் விடாப்பிடியான தாகம் கொண்டிருந்தவர் தந்தை. அரசாங்கங்களினால் திட்டமிட்ட வகையில் தமிழ் பிரதேசங்களில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டதற்கு தம்மால் இயன்ற கடும் எதிர்ப்பை தந்தை செல்வா தலைமையிலான தமிழரசுக்கட்சி பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும் செய்தது. பெரும்பான்மை இனமென்று சிறு பான்மை இனமொன்றை பகைமைக்கண்ணால் பார்க்குமிடத்து அந்நாட்டிற்கு ஒற்றையாட்சி பொருந்தாது. ஒரு இணைப்பாட்சியே உகந்தது என்பது அவரது திட்டவட்டமான கொள்கையாக இருந்தது. 1976 இல் அவர் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய இறுதி உரையில் இணைப்பாட்சிக்கு சிங்கள இனம் இணங்க மறுக்குமாயின் தமிழ் தேசியத்தை காப்பாற்றுவதற்கு உள்ள ஒரே வழி தமிழ் ஈழம் தான் என வலியுறுத்தியிருந்தார்.

அவர் 1950 களின் பிற்பகுதியில் கூறிய சில தீர்க்கதரிசன வார்த்தைகள் இன்றும் பொருள் பொதிந்ததாகவும் அவரையே நினைக்க வைப்பதாகவும் உள்ளது. "சுதந்திரமானது மிகவும் இலகுவாக பெற்று விடக்கூடியதல்ல. அது போராடிப்பெற வேண்டியதாகும். அதனைப்பெற நீண்ட தொரு போராட்டத்திற்கு நாம் தயாராக வேண்டும்." "தமிழினத்திற்கு சுயாட்சி வழங்காமல் இலங்கை ஆட்சிபீடத்தில் அமரும் எவரும் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் இயங்க முடியாது. அவர்கள் பெற்ற சுதந்திரத்தை அவர்களாலேயே அனுபவிக்க முடியாமல் போய் விடும்."

"தமிழினத்தின் விடுதலை எனது வாழ்நாளில் கைகூடி விட முடியாது போனால் வாலிபர்களாகிய நீங்கள் தொடர்ந்து போராடுங்கள். இந்த நம்பிக்கையுடன் நான் கண் மூடுவேன்." (சட்டக்கல்லூரித்தமிழ மன்றத்தில் 1976)

*****

அண்மைக்காலத்தில் பிரபாகரன் என் னும் பெயரை கொழும்பில் ஓங்கி ஒலித்த வர்கள் வரிசையில் மறைந்த மாவீரர் குமார் பொன்னம்பலம் முதலாமவர் என்றால் தில்லைக்கூத்தனை இரண்டாமவர் எனக் கூறுவது மிகையாகாது. தேசியத்தின சரிகளில் இவரது ஆணித்தரமான அரசியற் கட்டுரைகள் பல காலமாக வெளிவந்து கொண்டிருந்தன. இக்கட்டுரைகள் தமிழ்த் தேசிய இனத்தின் நிலைப்பாடு,எதிர்காலம் மற்றும் இவற்றிற்கு பாதகமாக விளங்கக்கூடிய வல்லரசுகளின் வியூகங்களை அம்பலப் படுத்துதல் என்பனவற்றிற்குள் கருத்தூன்றியவையாயிருப்பது வழக்கம். முக்கியமாக இலங்கைத்தமிழர் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடுகள் அக்குவேறு ஆணிவேறாக ஆராயப்படும். இத்தகைய சில நூறு கட்டுரைகளின் மூலம் இவர் தமிழ் தேசிய நிலைப்பாட்டிற்கு உரமூட்டி வந்தார்.

தமிழர் தேசியப்பணிக்குழுவின் தலைமையிலிருந்தபடியே தமிழரின் தளத்தை பேரினவாத ஆக்கிரமிப்பிலிருந்து பேணி வைத்திருப்பதற்கு தில்லைக்கூத்தன் அவர்கள் பாடுபட்டார். வெளிநாடுகளின் தூதரகங்களுடன் தொடர்புகளைப் பேணிக்கொண்டு தமிழர்களின் தேசிய நிலைப்பாட்டை


தந்தை செல்வா

நியாயப்படுத்தி வந்தார். வடக்கு கிழக்கிற்கு வெளியே குறிப்பாக கொழும்பில் வாழும் தமிழர் பேரினவாத கட்சிகளிடம் விலைபோகக்கூடாது. தமிழர் தாயகப்பகுதிகளின் தேசிய அபிலாசைகளின் மீது அவர்கள் கொண்டிருக்கும் தார்மீகக்கடப்பாடு தொடர்ந்தும் பேணப்படல் வேண்டும் என்பதில் கண்டிப்பான அரசியற் கொள்கையையும் அவர் கொண்டிருந்தார். ஊர்காவற்றுறையில் 1928 ஒக்டோபர் 4 ஆம் திகதி பிறந்த இவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார். இலங்கைப்பல்கலைக்கழக பொருளாதார பட்டதாரியான இவர் தென்கிழக்காசியாவுக்கான ஐ.நா.வின் சர்வதேச ஆலோசகராக பதவி வகித்தவர். "இலங்கைத்தமிழர் கண்ணீர்", "யாமார்க்கும் குடியல்லோம்", "தமிழரின் விடிவு" என்னும் நூல்களை வெளியிட்டவர். இத்தகையவர்களின் சிந்தனையால் வளம் பெற்று உயர்ந்து நிற்பதே இன்றைய தமிழ் உலகம் என்றால் அது மிகையாகாது.

## அரசடி ஐயாத்துரை



ஆறுமுகம் : பொதுக்கட்டமைப்பு வேண்டாம். தனிக்கட்டமைப்பு தான் வேணுமெண்டு பங்காளிக்கட்சி சொல்லுதாம்.

ஐயாத்துரை: இல்லாட்டி என்னவாம். ஒரே நாளில் அரசிலிருந்து வெளியேறிவிடுவார்களாமோ?

ஆறுமுகம் : 1971 இல் ஒரே நாளில் சிறைச்சாலைகளை நிரப்பியவர்களாச்சே! செய்தாலும் செய்வார்கள்!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டனில் சாவகச்சேரி இந்துவின் ஒன்றுகூடல்

தமிழர் தாயகப்பிரதேசங்களில் கடந்த இரண்டு தசாப்த காலங்களுக்கு மேலாக இடம்பெற்று வந்த இனப்பிரச்சினை காரணமாக ஈழத்தமிழர்கள் புலம் பெயர்ந்து பல நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு புலம் பெயர்ந்து வாழும் அனைவரும் தமது அடிப்படைக்கல்வியை தமது தாயகப்பிரதேசங்களில் பெற்றவர்கள். புலம் பெயர்ந்து வாழ்பவர்கள் முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையில் வாழ நேரிட்ட, போதிலும் கூட தாம் வளர்ந்த சூழலையும், கற்ற கல்விக்கூடங்களையும் என்றுமே மறப்பதில்லை. தாம் கற்ற கல்விக்கூடங்களுக்கு புத்துயிர் அளிப்பதில் இவர்கள் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. வடக்கு கிழக்கு பகுதிகளில் யுத்தத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பாடசாலைகள் இன்று புலம் பெயர்ந்து வாழும் எம்மவர்களால் தான் மீண்டும் நவீனத்துவமான முறையிலே மறுசீரமைக்கப்பட்டு புத்துயிர் பெற்று நிற்கின்றனவே தவிர அரசினாலோ, அரசியல்வாதிகளாலோ அல்ல!



கௌரவ விருந்தினர் திரு.சூ.யோ.பற்றிமாகரன் உரையாற்றுகின்றார்.





பரதநாட்டியம், ஆடல் நிகழ்ச்சிகள்

அந்த வகையில் ஈழத்தின் தமிழ் பேரறிஞர்களில் ஒருவராகிய தாமோதரம்பிள்ளை அவர்களால் 1904 இல் ஆரம்பிக்கப்பட்டு ஒரு நூற்றாண்டை கடந்து அறிவொளி பரப்பி பல சிறந்த கல்வியாளர்களை உருவாக்கி வருகின்ற சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சியக் கிளையினர் அண்மையில் தமது பதினோராவது ஆண்டு நிறைவையொட்டி கலாசார நிகழ்ச்சியினை நடாத்தியதோடு சிறப்பு மலர் ஒன்றையும் வெளியிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஆசிரியர்-பத்திரிகையாளர்-ஆய்வாளர் என பல துறைகளிலும் அறிவும், அனுபவமும் உள்ள திரு.சூ.யோ.பற்றிமாகரன் இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியின் வெற்றிக்கு அயராது பாடுபட்ட திருமதி. எஸ். பொன்னம்பலம் அவர்களை நினைவு கூருதல் அவசியம். 'நாட்டியஷேத்ரா','கலாபரத்' ஆகிய நடனப் பள்ளி மாணவர்களின் நாட்டிய நிகழ்ச்சிகளும் இக்கலாசார நிகழ்வில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு பிரதேசத்திலுள்ள தலை சிறந்த பாடசாலைகளுள் ஒன்றான சாவகச்சேரி இந்துக்கல்லூரி தன் வரலாற்றில் பல இன்னல்களை சந்தித்து யுத்தத்தின் காரணமாக வடமராட்சியிலும், இணுவிலிலும் இடம்மாறி சளைக்காது கல்விப்பணியாற்றி தற்போது மீண்டும் சாவகச்சேரி- கண்டி வீதியில் கம்பீரத்துடன் மாணவர்களின் அறிவுப்பசியைத்தீர்த்து வருகிறது. இந்தப்பாடசாலையில் கல்வி கற்ற பலர் இன்று உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உயர்பதவிகளில் உள்ளனர். சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் சங்க ஐக்கிய இராச்சியக்கிளையினர் இக்கல்லூரியின் வளப்பற்றாக்குறைகளை அறிந்து அவற்றை உரிய முறையில் நிவர்த்தி செய்து வருகிறார்கள். அந்த வகையில் இவ்வாண்டும் கல்லூரியின் பிரதான குறைபாடுகளுள் ஒன்றான சீரற்ற விளையாட்டு மைதானம், தென்மராட்சியில் சிறந்த ஒரு மைதானமாக மிளிரக்கூடிய வகையில் புனரமைக்கப்படவுள்ளது.

இதன்மூலம் இக்கல்லூரி மாணவர்கள் எதிர்காலத்தில் விளையாட்டில் பல சாதனைகளை எட்டுவார்கள் இது தவிர மாணவர்கள் மத்தியில் ஆங்கிலக்கல்வியை விருத்தி செய்யும் நோக்குடன் ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியர்களுக்குரிய கொடுப்பனவையும் ஐக்கிய இராச்சியக்கிளையினர் பொறுப்பேற்றுள்ளனர்.

பதினோராவது ஆண்டு நிகழ்வினை ஒட்டி வெளியிடப்பட்டுள்ள சிறப்பு மலர் பலருடைய வாழ்த்துச்செய்திகள் பழைய மாணவர், ஆசிரியர் சங்கத்தினரின் புகைப்படங்கள், பாடசாலையின் வளர்ச்சியின் சில பகுதிகளைக்காட்டும் புகைப்படங்கள், கடந்த வருடம் இடம்பெற்ற பரீட்சார்த்த விளையாட்டு நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், கவிதைகள், சிறுகதை அகியவற்றை தாங்கி வெளிவந்துள்ளது.

இக்கல்லூரியின் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் இச்சங்கத்துடன் தொடர்புகள் பேணி உதவிகளையும், கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்ளவிரும்பின் www.chcosta.com என்ற இணையததளத்தினை நாடலாம்.

தாயகத்தின் எழுச்சிகளுடனும், வீழ்ச்சிகளுடனும் தன்னைப் பிணைத்துக் கொண்ட பெருமையுடன் நூற்றியோராவது அகவையில் தன் பணி தொடரும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி என்றும் சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். *—தீபா*







நிகழ்வில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சிகளையும் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் இங்கு காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "எங்கே செல்ல வேண்டுமென்பது எமக்கு தெரியும்"

– ரைஸ்

# கிர்கிஸ்தான் எங்கு செல்கிறது?



அமெரிக்க ராஜாங்கச் செயலர் கொண்டோலிஸ்ஸா ரைஸ்

ரஷ்யாவை சுற்றி வளைத்து முற்று கைக்குள் வைத்திருக்கும் ஆசை 'அங்கிள் சாம்'க்கு ஏற்பட்டிருப்பது ஒன்றும் புதினமல்ல. சோவியத் ஒன்றியத்தின் முடிவின் பின்னர் உக்கிரேனும், ஜோர்ஜியாவும் குடியரசுகளாகிய பின் இப்பொழுது கிரிகிஸ்தானும் அந்தப்பாதையில் வழிகாட்டப்பட்டு வருகிறது. வழிகாட்டிக் கொண்டிருப்பவர் வேறு யாருமல்ல. அவரே தான். 'ஜனநாயகத்தை உலக நாடுகளுக் கெல்லாம் பரப்பி வரும் அமெரிக்காவே தான். கிர்கிஸ்தானில் கடந்த பெப்ரவரி 27 ஆம் திகதியும் மார்ச் 13 ஆம் திகதியும் நடைபெற்ற பாராளுமன்றத்தேர்தல்களில் ஆறு ஆசனங்களை மட்டும் வென்றவரான எதிர்க்கட்சித்தலைவர் ஒருவர் ஜனாதிபதியாக்கப்பட்டிருக்கிறார். பாராளுமன்றத்தில் மொத்தம் 75 உறுப்பினர்கள்.

தேர்தல் மோசடி நிறைந்தது என்னும் குற்றச்சாட்டினடிப்படையில் போராட்டங்கள் நடைபெற்றன. கற்கள், தடிகள் கொண்டு நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் முடிவில் நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான ஓஷ் இலிருந்த விமான நிலையத்தையும், அரச கட்டிடங்கள் சிலவற்றையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கைப்பற்றினார்கள். மார்ச் 24 ஆம் திகதி ஆத்திரமடைந்த கலவரக்காரர்கள் தலைநகர் பிஷ்கெக்கிலுள்ள ஜனாதிபதி மாளிகையை தாக்கினர். ஜனாதிபதியாக 15 ஆண்டுகள் பதவி வகித்த அஸ்கார் அக்கயேவ் நாட்டை விட்டோடவும் எதிர்க்கட்சிகளின் கூட்டணி அதிகாரத்தைக்கைப்பற்றிக் கொண்டது. அக்கயேவ் ரஷ்யாவில் தஞ்சமடைந்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் குர்மான்பெக் பக்கியேவ் தன்னை பதில் ஜனாதிபதியாகவும், பிரதமராகவும் பிரகடனம் செய்திருக்கிறார்.

அக்கயேவ் ஆட்சியில் மக்கள் அதிருப்தியடைந்திருந்தனர். தனது பதவிக்காலத்தை நீடித்துக்கொள்வதற்கு வாய்ப்பாக அவர் ஒரு கருத்துக்கணிப்பை நடத்தியிருந்தார். அது பெரும் சர்ச்சையை கிளப்பி விட்டிருந்தது. பொருளாதார நடவடிக்கைகள் சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைப்படி பெருமளவில் மேற்கொள்ளப்பட்டன. இது சோவியத் கால தொழிற்துறையை நிர்மூலமாக்கிவிட்டது. முன்னைய தொழில் நிறுவனங்கள் இலாப நோக்கு உற்பத்தியை மேற்கொண்டதில்லை. மக்களின் தேவையை நிறைவு செய்யும் நோக்கைக்கொண்டவை. இது சர்வதேச நாணய நிதியத்திற்கு ஏற்புடைய கொள்கையல்ல. இந்த வகையிலான பொருளாதார சீர்திருத்தங்கள் பொருளாதார நெருக்கடிகளை தோற்றுவித்திருந்தன. தொழில்கள் இழக்கப்படவும், வறுமை இடம்பிடிக்கவும் சமுதாயம் குலைந்ததுடன் நாடும் பெரும் கடனாளியாகி விட்டது. இந்நிலையில் ஐந்து மில்லியன் மக்களைக்கொண்ட நாட்டில் சுமார் ஏழு இலட்சம் பேர் தொழில் வாய்ப்பு தேடி ரஷ்யாவுக்கும் கஸகிஷ்தானுக்கும் சென்று விட்டனர்.

ஒரு புறம் வறுமை தாண்டவமாடத் தொடங்கவும் மறுபுறம் ஒக்டோபரில் ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற வேண்டிய அக்கயேவ் தேர்தலில் வெற்றி பெற்றிருந்த தனது மகன் அல்லது மகளுக்கு தனது பதவியை வழங்க ஏற்பாடு செய்து வந்தமை மக்களை ஆத்திரமூட்டியது. இந்நிலையிலேயே அமெரிக்காவின் முக்கிய பங்களிப்புடன் 'வெல்வெட் புரட்சி'க்குரிய சூழல் ஏற்படுத்தப்பட்டது. அமெரிக்க நிறுவனங்கள் நகருக்கு நகர் நிறுவப்பட்டு எதிர்க்கட்சியினருக்கு பல்வேறு ஆதரவுகளையும் நல்கி வந்தன. அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் அங்கு நடத்தி வரும் அச்சகம் 60 வரையிலான வெளியீடுகளை செய்து வருகின்றது. இவற்றுள் எதிர்க்கட்சி சார்பு பத்திரிகைகளும் அடங்கும். மொத்தம் 5000 வரையிலான அரச சார்பற்ற நிறுவனங்கள் அங்கு இயங்குகின்றன. தேர்தலுக்கு முன்பு கிர்கிஸ்தான் ஜனாதிபதி அலுவலகம்



வெளிநாடுகளின் தூதரகங்கள் சிலவற்றிற்கு எச்சரிக்கை விடுத்திருந்தது. அதில் உள் நாட்டு விவகாரங்களில் தலையிட வேண்டாம் என்று எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது. சதிப்புரட்சிக்கு முன்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, வெளிநாடுகள் சதிப்புரட்சிக்கு திட்டமிடுகின்றன என தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், வாஷிங்டன் தான் எவ்விதத்திலும் கிர்கிஸ்தானின் கிளர்ச்சிகளில் சம்பந்தப்பட்டவில்லை என்று மறுத்திருந்தது. ஆயினும், 'இது ஒரு ஜனநாயக வெற்றி' என்று ராஜாங்கச் செயலர் கொண்டோலிஸ்ஸா ரைஸ் தெரிவித்ததாக செய்திகள் வெளிவந்தன. அத்துடன், 'நாம் எங்கே போகவேண்டு மென்பது எமக்கு தெரியும்'என்று அவர் கூறியிருந்ததாகவும் செய்திகள் வெளிவந்திருந்தன.


கிர்கிஸ்தானும் வடக்கும் தெற்குமாக இன ரீதியில் முரண்பட்டு நிற்கும் நாடு. அக்கயேவ் வடக்கைச்சேர்ந்தவர். புதிய பிரதமர் பக்கியேவ் தென் மாநிலத்தவர்.

-சர்வன்

தென் பகுதியினரே மேற்படி கிளர்ச்சியை முன்னெடுத்தனர். இவர்களில் அநேகர் உஸ்பெக் இனத்தைச்சேர்ந்தவர்கள். கிர்கிஸ் இனத்தவருக்கும் உஸ்பெக் இனத்தவருக்குமிடையே 1990 இல் வன்முறைக்கலகங்கள் வெடித்திருந்தன. நூற்றுக்கணக்கானோர் பலியாகியிருந்தனர். இப்பொழுது அக்கயேவுக்கு ரஷ்யா அடைக்கலம் கொடுத்திருந்தாலும், புதிய கிளர்ச்சி அரசையும், ரஷ்யா ஏற்றுக்கொண்டுள்ளது. புரட்சித்தலைமையும் ரஷ்யாவுடன் தமது உறவுகளை மேலும் இறுக்கிக்கொள்வதாக வெளிப்படுத்தியிருக்கின்றன. இந்நிலையில் வடக்கு, தெற்கு இனங்கள் தமக்குள் அதிகாரத்தை சுமுகமான முறையில் பகிர்ந்து கொள்ள முன்வராமலிருப்பார்களாயின் கிர்கிஸ்தானும் நாடுகளாகி விடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈராக்கில் மலரும் அமெரிக்க ஜனநாயகம்



கடந்த அரைநூற்றாண்டு ஈராக்கின் வரலாற்றில் முதன் முறையாக சியா முஸ்லிம் தலைவர் இப்ராஹிம் ஜவாரி பிரதமராக அறிவிக்கப்பட்டுள்ளார். இதே வேளை ஈராக்கின் புதிய ஜனாதிபதியாக குர்திஷ் போராளித் தலைவர் ஜலால் தலபாணி நியமனம் பெற்றுள்ளார். பிரதமராக நியமனம் பெற்றுள்ள ஜவாரி சதாம் ஹுசைய்ன் காலத்தில் இரண்டு தசாப்த காலம் வெளிநாடுகளில் தலைமறைவாக வாழ்ந்தவர். புதிய மாற்றங்கள் பற்றி வெள்ளை மாளிகை தெரிவிக்கையில், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஜனநாயகத்தை நோக்கிய ஈராக்கின் பயணம் ஆரம்பித்திருக்கின்றது என்று கூறி யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு தானே முன் வைத்திருந்த காரணத்தை நியாயப்படுத்த முன் வந்திருக்கிறது.

புதிய பிரதமர் இப்ராஹிம் ஜவாரி தனது கருத்தை கூறிய போது எம்மை எம்மாலேயே பாதுகாக்க கூடிய நிலை இல்லை. இதனால் அமெரிக்க இராணுவத்தை வெளியேறும்படி கேட்க முடியாது. அவர்கள் இங்கிருக்கையிலேயே நாம் பயங்கரவாதிகளின் சவால்களை எதிர்நோக்கியவர்களாக இருக்கிறோம். இராணுவத்தினர் வெளியேறினால் நிலைமை மோசமடைந்து விடும். எனவே சரியான நேரம் வரும்போதுதான் நாம் அமெரிக்க இராணுவத்தை வெளியேறுமாறு கேட்போம் என்றிருக்கிறார். இதனை மறுவளமாக விளங்கிக் கொள்வதானால், ஈராக்கில் எவ்வளவு காலத்திற்கு ஸ்திரமற்ற நிலைமை இருக்க முடியுமோ அவ்வளவு காலத்திற்கு அமெரிக்க இராணுவம் அங்கேயிருக்கவேண்டியிருக்கும். இதனை தனது தேவையின் அடிப்படையில் நிறைவேற்றும் வகையில் அமெரிக்கா ஈராக்கின் அரசியல் விவகாரங்களை கபட சாணக்கியத்துடன் கையாளச்செய்யும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

ஈராக்கின் எண்ணெய் வளத்தை சூறையாடுவதற்கென்றே புனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பலவற்றை முன்வைத்து அமெரிக்கா 2003 மார்ச் மாதத்தில் ஈராக்கை ஆக்கிரமித்தது. சதாம் ஹுசெய்னிடம் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகவும் அவற்றினால் அமெரிக்காவின் பாதுகாப்பு அச்சுறுத்தப்படுவதாகவும் முதலில் அமெரிக்க மக்களை நம்பச்செய்ததுடன் 170,000 படையினரை அனுப்பிய பின் படைகள் வெறுங் கையை விரித்துக்காட்டின. இதனை சீ.ஐ.ஏயின் ஆயுதப்பரிசோதனை நிபுணர் தனது 918 பக்க அறிக்கையில் அமெரிக்க காங்கிரஸின் இரண்டு குழுக்களிடம் சுட்டிக்காட்டியிருந்தார். இவ்வாறு பேரழிவு ஆயுதங்கள் பற்றிய கதை அதனை புனைந்தவர்களுக்கே பேரழிவாக திரும்பியதும் போரை தொடங்கியதற்கு வேறு காரணங்கள் முன் வைக்கப்பட்டன. ஈராக்கில் மீண்டும் ஜனநாயகத்தை ஏற்படுத்துவது என்னும் நியாயம் அடுத்து பலமாக முன்வைக்கப்பட்டது. இந்தக்கபட நாடகத்தின் தொடர்ச்சியாகவே கடந்த ஜனவரி 30 ஆம் திகதி அங்கு தேர்தல் ஒன்று நடத்தப்பட்டது. ஆக்கிரமிப்புக்கும் அராஜகத்திற்குமிடையே நடைபெற்ற தேர்தலில் சுன்னி முஸ்லிம்களின் பகிஷ்கரிப்பும் நடைபெற்றது. கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒரு இலட்சத்திற்குமதிகமான ஈராக்கியர்கள் கொல்லப்பட்ட பிணக்காட்டில் தான் தேர்தல் நடைபெற்றது. அதாவது சதாம் ஹுசெய்ன் இரண்டு தசாப்த காலத்தில் எத்தனை பேர்களைக் கொன்று குவித்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டதோ அந்த எண்ணிக்கையிலும் அதிகமாக இப்பொழுது கொல்லப்பட்ட பின்னரே தேர்தல் நடைபெற்றிருக்கின்றது.

275 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு நடைபெற்ற தேர்தலில் 140 ஆசனங்களையே சியா முஸ்லிம்களின் ஆதரவு பெற்ற ஐக்கிய ஈராக் கூட்டணி வென்றுள்ளது. இந்த அரும்பொட்டு பெரும்பான்மையை நம்ப முடியாத நிலையில் 76 ஆசனங்களை வென்றுள்ள குர்திஷ்தான் கூட்டணியையும் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொண்டு ஆட்சி புறப்பட்டிருக்கின்றது. இதற்குள் யுத்தத்திற்கே காரணமான எண்ணெய் வளத்தை நிர்வகிக்கும் அமைச்சுக்கான பேரப்பேச்சுகளும் உச்சகட்டத்தில் நடந்திருக்கின்றன. எது எவ்வாறாயினும், எதற்காக இந்த ஆக்கிரமிப்பு யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதோ இன்று வரை நடத்தப்பட்டு வருகிறதோ அந்த நோக்கங்கள் குளம்பிவிட அமெரிக்கா அனுமதிக்க மாட்டாதென்பதை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஈராக்கின் எண்ணெய் வளத்தை சூறையாடும் அமெரிக்காவின் இரகசிய திட்டம் 2003 க்கு வெகு முன்னதாகவே தீட்டப்பட்டு விட்டது என்றும், செப்டெம்பர் 11 க்கு முன்னரே இது தொடர்பான ஆய்வுகள் நடந்தன என்றும் ஈராக்கிலிருந்து புலம் பெயர்ந்து வாழ்ந்தவரும் இன்று ஈராக்கில் முன்னணி அரசியல் வாதியாக விளங்குபருமான அகமத் சலாபி இதில் பெரும்பங்கு வகித்தாரென்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. உண்மையில் அடிப்படை நோக்கம் எண்ணெய் உற்பத்தி நாடுகளின் கூட்டாகிய 'ஒபெக்'' அமைப்பின் முதுகெலும்பை உடைப்பதே என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அமெரிக்காவிடம் போதிய எண்ணெய் வளம் உண்டு. இருப்பினும் வாஷிங்டன் தனது அரசியல் மேலாதிக்க விஸ்தரிப்பு கருதியே ஈராக்கின் எண்ணெய் வளத்தை கைகளுக்குள் போட்டுக்கொள்ள விளைகிறது. இதன் மூலம் அது மேற்கு ஆசியா முழுவதிலும் ஆதிக்கத்தை நிலைநிறுத்த வாய்ப்புகள் அதிகமாகும். அது மட்டுமன்றி மேற்காசியாவின் ஆதிக்கத்தை வைத்திருக்கும் ஒரு வல்லரசினால் உலகின் மிக முக்கிய போட்டியாளர்களாகிய ஐரோப்பா, யப்பான், சீனா போன்ற நாடுகளையும் ஏதோ வகையில் இலகுவாக கையாளவோ, முடிந்தால் ஓரங்கட்டி விடவோ வாய்ப்பு ஏற்பட லாம். இவ்வாறு ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்நிலையில் தான் 'ஜனநாயகத்தை' மீள ஏற்படுத்தும் அமெரிக்காவின் பயணம் இப்பொழுது ஈராக்கிலிருந்து ஆரம்பமாகியிருக்கின்றது. பயணத்தின் ஆரம்பக்கட்டத்தில் ஈராக்கின் நிலை எப்படி ஆகியிருக்கிறது என்பதை ஐ.நாவின் உணவு விவகார நிபுணர் ஜீன் சீக்ளர் ஜெனிவாவில் நடைபெற்ற மனிதவுரிமை ஆணைக்குழுவின் ஆண்டுக்கூட்டத்தில் எடுத்துக்கூறியவை புலப்படுத்துகின்றன. ஈராக்கின் சிறுவர்கள், அமெரிக்க ஆக்கிரமிப்பின் பின்னர், முன்னரை விட, இரண்டு மடங்கினால் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்டு விட்டனர். அதாவது 4 சதவீதத்திலிருந்து 7.7 வீதமாக இது உயர்ந்துள்ளது. நடைபெற்று வரும் போரினால் 25 சதவீத சிறுவர்கள் போதிய அளவு உணவு கிடைக்காமல் அல்லல்படுகின்றனர் என்கிறார் அந்த ஐ.நா. நிபுணர். இந்நிலையில் சதாம் ஹுசெய்ன் என்னும் கொடியவனின் கரங்களிலிருந்து ஈராக்கியரை மீட்டு விட்டோம். ஜனநாயகத்தை மலரச்செய்து விட்டோம் என்று எவ்வாறு அமெரிக்கரால் கூற முடியும்.

இன்றைய நிலையில், ஆக்கிரமிப்புக்கு மத்தியில் நடைபெற்ற தேர்தல் பெறுபேறுகளின்படி அமைந்துள்ள புதிய அரசாங்கம் ஒரு அரசியல் யாப்பை இயற்றுவதுடன் மீண்டும் ஐ.நாவின் கண்காணிப்பின் கீழ் புதிய தேர்தலொன்றை நடத்தும்போது புதிய அதே வேளை சிறிதளவேனும் நம்பிக்கை தரும் சூழல் தோன்றலாம் என்று எதிர்பார்க்க முடியும். மக்களால், மக்களுக்காக மக்களின் அரசொன்று பிரசவிக்குமாயின் அதற்குள்ளிருந்து ஒரு அதிகாரத்துடனான புரட்சி குரலும் ஈராக்கின் மண்ணிலிருந்து எழ முடியும். "இளைத்துப்போய் விட்ட அமெரிக்கப்படையினரே! போதும்! காலி பண்ணுங்கள்'' என்று இதனையே ஜனநாயகம் என்று உலகின் மனச்சான்று ஏற்கவேண்டியிருக்கும்.

-சர்வன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் பெறக் கற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியம்

"கடன்பட்டோர் நெஞ்சம் போல கலங்கினான் இலங்கை வேந்தன்" என்ற வாக்கு நம்மத்தியில் நன்கு பிரபல்யமானது. கடன் வாங்குதல் என்பதனை நம்மில் பலர் ஏதோ இழிசெயல் என்று கருதுகின்றோம். இதனால் கடன்வாங்குவதனை எவ்வளவு தூரம் தவிர்த்துக் கொள்ளலாமோ அவ்வளவிற்கு தவிர்த்துக் கொள்வது நம்மக்களில் பெரும்பாலானவர்களின் வழக்கமாக உள்ளது.

கடன் பெறல் என்பது இரு தேவைகளிற்காக மேற்கொள்ளப்படுகின்றது. ஒன்று வாழ்க்கைத் தேவைகளிற்காக கடன் பெறல். மற்றையது தொழிற் தேவைகளிற்காக கடன் பெறுவது. வாழ்க்கைத் தேவைகளிற்காக கடன் பெறுவதினை தவிர்த்துக் கொள்வது விரும்பத்தக்க தொன்றாக இருக்கலாம். ஆனால் தொழில் உருவாக்கம் மற்றும் விருத்திக்கு கடன் பெறல் என்பது மிகவும் அவசியமானது ஆகும். ஆனால் நம்மில் பலர் கடன் பெறுவது என்பதனையே விரும்பாதவர்களாக இருக்கின்றனர்.

பாரம்பரியமாக நமது மக்கள் கடின உழைப்பு, சிக்கனம் மற்றும் சேமிப்பு என்பவற்றிற்கு பேர் போனவர்கள். இதனால் பொதுவாக வடக்கு கிழக்கில் உள்ள நிதி நிறுவனங்களின் வைப்புத்தொகை நாட்டின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும்போது அதிகமானதாகும். அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள அரச வங்கிக் கிளைகளே நாட்டில் அதிக வைப்பினைக் கொண்டவையாக அண்மைக் காலம்வரை காணப்பட்டன. நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலை இந்த நிலையில் ஓரளவு பாதிப்பினை ஏற்படுத்தியிருந்தாலும் நம்மக்களின் சேமிப்புப் பழக்கம் என்பது இப்போதும் உயர்வாகத்தான் காணப்படுகின்றது.

ஆனால் மறுபக்கத்தில் இந் நிதி நிறுவனங்களிடம் இருந்து கடன் பெறும் பழக்கம் நம்மக்களிடம் போதியளவிற்கு இல்லை. இதனால் இந்த நிதி நிறுவனங்கள் தாம் வைப்பாக பெற்ற பணத்தில் ஒரு பகுதியினை கொழும்பு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளிற்கு மாற்றி அங்கு கடன் வழங்கும் வழக்கத்தினைக் கொண்டுள்ளன.

தொழில் முயற்சியாளர்கள் தமது தொழில் முயற்சிக்கு தேவையான பணம் முழுவதனையும் தாம் சொந்தமாக கொண்டிருப்பதில்லை. பொதுவாக இவர்கள் நிதியினை நிதித்துறையிலிருந்து பெற்றே தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கின்றனர். இந்த வகையில் தொழில் முயற்சி ஒன்றினை உருவாக்குவது தொடர்பிலும் விருத்தி செய்வது தொடர்பிலும் உரிய முறையில் தேவையான நிதியினை உரிய கிரயத்தில் பெற்றுக்கொள்ளத் தெரிந்திருப்பது மிகவும் அவசியமாகும். இந்த வகையில் தொழிற் தேவைக்காக கடன் பெறும் ஒருவர் குறிப்பிட்ட கடன் பணத்தினைக் கொண்டு அந்தத் தொழிலில் இலாபம் ஒன்றினை உழைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். அவ்வாறு உழைக்கும் இலாபமானது அவர் பெற்ற கடனிற்குரிய வட்டியிலும் பார்க்க கூடுதலாக இருக்கும் பொழுது அத்தொழிலினூடே அவர் ஒரு பயனைப் பெறுபவராக இருப்பர். உதாரணமாக ஒருவர் 12 வீத வட்டிக்கு நிதி நிறுவனமொன்றில் கடனைப் பெற்று அதனை ஒரு தொழிலில் ஈடுபடுத்தியிருந்து அதன் மூலம் 18 வீத இலாபத்தினை உழைக்கக்கூடியதாக இருப்பின் வங்கிக்கு செலுத்த வண்டிய 12 வீதம் போக மிகுதி ஆறு வீதம் அவரிற்கு கிடைக்கும் நிகர இலாபமாக இருக்கும்.

தற்போது நாட்டில் நிலவும் வட்டி வீதங்கள் குறைவாகக் காணப்படுகின்றன என்ற வகையில் தொழிற் தேவைகளிற்காக கடன் பெறுதல் என்பது விரும்பத்தக்க தொன்றாக இருக்கின்றது. அதாவது ஒப்பீட்டளவில் குறைந்த வட்டியில் கடனைப் பெறக்கூடியதாக இருக்கின்ற நிலையில் அதனைப் பயன்படுத்தி தொழிற்துறையில் அவ்வட்டி வீதத்திலும் பார்க்க அதிகமானதொரு இலாபத்தினை உழைப்பதென்பது பெருமளவிற்கு சாத்தியமான தொன்றாகும். சில சந்தர்ப்பங்களில் நாட்டில் நிலவும் பணவீக்கத்திலும் பார்க்க குறைந்ததொரு வட்டிவீதத்தில் கடனைப் பெறக் கூடியதாக இருக்கின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்தக் கடனைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் உண்மைக் கிரயம் எதனையும் கடன் பெற்றவர் எதிர் நோக்குவதில்லை, இத்தகையதொரு சூழ்நிலையில் சேமிப்பாளர்களிலும் பார்க்க கடன்பெறுபவர்களே நன்மை அடைபவர்களாக இருக்கின்றனர்.

ஆனால் நம்மக்கள் சேமிப்பதற்கு காட்டும் ஆர்வமளவிற்கு கடன் பெறுவதில் ஆர்வம் காட்டுவதாக தெரியவில்லை. குறிப்பாக விவசாயிகள் மற்றும் சிறு தொழில் செய்வோர் நிதி நிறுவனங்களில் கடன் பெறுவது பற்றி பெருமளவிற்கு அறிந்திராதவர்களாகவே இருக்கின்றனர். இவர்கள் தமக்கு கடன் தேவைப்படும்போது உள்ளூர் வட்டிக்காரர்களை நாடும் வழக்கத்தினை கொண்டுள்ளனர். நாட்டில் நிதித்துறை வட்டிவீதமானது குறைவாகக் காணப்படுகின்றபோதும் இந்த உள்ளூர் வட்டிக்காரர்கள் அற விடும் வட்டி வீதங்களானவை தற்போதும் மிகவும் அதிகமாகவே காணப்படுகின்றன. பொதுவாக இங்கு மூன்று வட்டி நான்கு வட்டி என்ற கணிப்பீடுகளே பயன்படுத்தப் படுகின்றன. இங்கு மூன்று வட்டி என்பது ஆண்டிற்கு 36 வீத வட்டியினையும் நான்கு வட்டி என்பது ஆண்டிற்கு 48 வீத வட்டியினையும் குறித்து நிற்கின்றது. இந்த வகையில் இம்மக்கள் நாட்டின் முறையான நிதித்துறை நிறுவனங்களிடமிருந்து கடன் பெற போதிய உதவிகள் ஒத்தாசைகள் வழங்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

ஆனால் மறுபக்கதில் கடந்த இரண்டு தசாப்த காலமாக வடக்கு கிழக்கில்

**– என். சிறிரஞ்சன்**

நிலவிய யுத்தத்தினால் வடக்கு கிழக்கினை கடன் வழங்கும் நோக்கில் அதிக ஆபத்தான பிரதேசங்களாக நிதி நிறுவனங்கள் கருதி வந்தன. இதனால் அவை இப்பகுதி மக்களிற்கு கடன் வழங்குவதனை மிகக் குறைந்தளவிலேயே வைத்து வந்துள்ளன. யுத்தமற்ற சூழ்நிலையொன்று மூன்று வருடங்களிற்கு மேலாக தற்போது நிலவுகின்றபோதும் கூட இந்த நிதி நிறு வனங்கள் தமது போக்கில் குறிப்பிடத்தக்க அளவு மாற்றங்கள் எதனையும் காட்டுவதாகத் தெரியவில்லை. ஆனால் மறுபுறத்தில் யுத்தத்தினால் பொருளாதாரக் கட்டுமானங்கள் பெருமளவிற்கு அழிந்து போயுள்ள நிலையில் இந்தப் பிரதேசங் களில் பொருளாதார செயற்பாடுகளை மீள்கட்டி எழுப்புவதற்கு நிதித்துறை கடன்களை வழங்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

இந்த வகையில் வடக்கு கிழக்கில் ஒரு புறத்தில் கடன் வழங்கும் நோக்கில் நிதித்துறையானது அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பதுடன் அங்குள்ள மக்களும் நிதித்துறையில் கடன் பெறுவதற்கு முனைப்புடையவர்களாக தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக வீடமைப்புத்திட்டங்கள்: குண்டு சட்டிக்குள் ஓடுகிறது குதிரை!



பீ.பி.ஸி என்று தான் ஞாபகம். நுவரெலிய மாவட்டத்தில் அமைந்துள்ள தேயிலைத்தோட்டம் ஒன்றின் நூற்றாண்டு பழைய ஒற்றை அறை லயன் காம்பராக்களில் மாடுகள் தொழுவத்தில் வாழ்வதைப்போல் தென்னிந்தியாவில் இருந்து இலங்கை வந்த தமிழ்த்தொழிலாளர் குடும்பங்கள் மந்தைகள் போல வாழ்க்கை நடத்துவதை ஒளிப்பதிவு செய்து விவரண சித்திரமாக ஐரோப்பிய நாடுகளில் ஒளிபரப்பியபோது.

சந்திரனுக்குப்போய் வந்ததையும் பழங்கதையாக மறந்து விட்டிருந்த மேலைத்தேய மக்கள், ஐரோப்பிய தேயிலைச் சந்தைக்கு உரம் சேர்க்க பிரிட்டிஷ் அரசினால் இலங்கையில் குடியேற்றப்பட்ட தொழிலாளர்கள், நூற்றாண்டு கடந்தும் மந்தைகள் போல் வாழ்கின்றார்களே என்பதைப்பிரத்தியட்சமாகக்கண்டு அதிர்ந்தே போய் விட்டார்கள்.

மலையகத்தோட்டத்தமிழ்த்தொழிலாளர் பற்றி சாவதேச மட்டத்தில் இப்படி ஒரு விழிப்புணர்வை ஏற்படத்தியதற்கு அமரா தொண்டமானுக்கு நன்றி சொல்ல வேண்டும். அது மட்டுமல்ல, வாய்ப்பைச்சரியாகப்பயன்படுத்தத்தெரிந்திருந்த அவர், இம்மக்களின் வாழ்வு வளம் பெற வெளிநாட்டு உதவி தேவை என்பதை வலியுறுத்தி நோர்வே, நெதர்லாந்து, ஜேர்மனி உட்பட பல வெளிநாட்டு உதவி நிறுவனங்கள் நேரிடையாகவே பெருந்தோட்டங்களில் மனித அபிவிருத்திப்பணிகளில் ஈடுபட வழி அமைத்தார். இதன் பின்னரே தோட்டச்சிறார்களுக்கு ஊட்டச்சத்து வழங்குதல், சீடா திட்டம், பத்தனை கல்வியியல கல்லூரி, தொண்டமான் தொழிற்பயிற்சி கல்லூரி போன்ற பல மனித அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் பெருந்தோட்ட மக்களுக்கு வெளிநாடுகள் உதவிகளை வழங்க முன்வந்தன. இன்று தோட்ட வீடமைப்பு உட்பட தோட்ட சுகாதார, மருத்துவ, குழந்தை பராமரிப்பு, சிறார் முன்பள்ளி என பல விஷயங்களை 'டிரஸ்ட்' என சுருக்கமாக அழைக்கப்படும் அரசு அங்கீகாரம் பெற்ற ஒரு நிறுவனம் பல கோடி ரூபா பட்ஜெட்டின் கீழ் நடத்தி வருகின்றது. இந்நிறுவனத்தை நடத்துவதற்கான செலவை பெருந்தோட்டங்களை நடத்தும் 23 கம்பனிகள் பொறுப்பேற்க, வேலைத்திட்டங்களுக்கான நிதி, நோர்வே, நெதர்லாந்து, ஐ.நா. ஏஜென்சிகள் மூலம் டிரஸ்டுக்கு வந்து சேர்கிறது.

எழுபதுகளோடு ஒப்பிடும்போது, பெருந்தோட்ட தொழிலாளர்வாழ்வில் புரட்சிகரமான மாற்றங்களை இச்செயல்பாடுகள் ஏற்படுத்தி உள்ளன என்பது உண்மைதான். லயன்களுக்குப்பதிலாக ஏழு பேர்ச் காணியில் தனி வீடுகளை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் 1994 ஆம் ஆண்டில் முகிழ்ந்து வெவ்வேறான திட்டங்களின் கீழ் வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் இந்த வீடமைப்புத்திட்டங்களில் எல்லாம் அடிப்படையில் ஒரு குறைபாடு தெரிகிறது. இந்த வீடுகளை அமைக்க தோட்ட நிர்வாகம் இலவசமாக ஏழு முதல் பத்து பேர்ச் வரையிலான காணியைத் தருகிறது. வீடு அமைப்பதற்கான கூரை, கழிப்பறைக்கான உபகரணங்கள், பலகைகள், சீமெந்து என சில பொருட்களையும் இலவசமாக அரசு அல்லது அரசு சார்ந்த சாராத ஏஜென்சிகள் வழங்குகின்றன. ஆனால் வீட்டை அமைக்க வேண்டியது தொழிலாளியின் கடமை. இதன் பொருட்டு தன் ஊழியர் சேமலாப நிதியில் இருந்து தொழிலாளி கடன் பெறுகிறார். இக்கடனை 15 வருட காலத்துக்குள் அவர் திருப்பிச் செலுத்த வேண்டும். தனது சொந்த சேமிப்பில் இருந்தோ மேலதிகமாக வெளியே கடன் பெற்றோ அத்தொழிலாளி வசதியான வீட்டை அமைத்துக்கொள்ளலாம்.

எல்லாம் சரிதான். ஆனால் முக்கியமான கேள்வி, இத்தொழிலாளி தான் அமைத்த வீட்டுக்கு முழு உரிமை கொண்டாட முடியுமா என்பதாகும். பதில் பரிதாபகரமானது. அவர் இக்காணிக்கும் வீட்டுக்கும் முழு உரிமை கொண்டாட முடியாது. வீட்டை விற்கவோ, வங்கியில் அடமானம் வைக்கவோ முடியாது. ஏனெனில் இவர் பெயருக்கு காணி மாற்றப்பட்டு காணி உறுதி கையளிக்கப்படுவதில்லை. காணி அரசாங்கத்திற்குரியது என்பதே இதற்கான காரணம். இன்னொரு வகையில் சொன்னால், இன்னொருவருக்கு சொந்தமான காணியில் தன் சொந்தப்பணத்தில் வீடமைத்து அதைத்தன் சொந்த வீடென நம்பிக்கொண்டிருக்கும் உலகின் ஒரே அதிபுத்தி சாலித்தமிழன் மலையகத்தமிழனாகத்தான் இருப்பான்.

அரசாங்கம் காணியற்றவர்களுக்கு காணி வழங்கவும், கிராம விஸ்தரிப்புக்கும், மாதிரிக்கிராமங்களை அமைக்கவும் அல்லது பல்வேறு திட்டங்களின் பேரில் காணி பெறவும் பெரும்பாலான சமயங்களில் அரசாங்கம் நாடுவது பெருந்தோட்டக்காணிகளைத்தான். தேவையான காணியை சுவீகரித்து காணி, வீடற்றவர்களுக்கு பிரித்து கொடுத்து நாளடைவில் காணி உறுதிகளையும் அவர்கள் வசம் அரசு ஒப்படைத்து விடுகிறது. ஆனால் தமிழ்த்தோட்டத் தொழிலாளி தோட்டக்காணியில் கைப்பணத்தைச் செலவு செய்து வீடமைத்தாலும் அவ்வீடும் காணியும் அவருக்கு சொந்தமாவதில்லை.

இது எந்த நியாயத்தில் சேர்ந்ததாகும் என்ற வினா எழுந்ததால் ஒரு தொழிலாளி தனது வீட்டை விட்டு வெளியேறத்தீர்மானித்தால் அவர் தோட்ட வீடமைப்பு கூட்டுறவு சங்கத்துக்கு வீட்டை விற்கலாம் என்ற ஒரு நடைமுறையைத்தான் கொண்டு வந்திருப்பதாகவும், தான் முதல் கட்டமாக அமைத்த வீடுகளுக்கான கடனை வீட்டு உரிமையாளர்கள் செலுத்தி முடிந்ததும் அவர்களுக்கு காணி உறுதி வழங்கப்படும் எனவும் டிரஸ்டின் நுவரெலிய பிராந்திய பணிப்பாளர் கமலநாதன் தெரிவித்துள்ளார். ஆனாலும் இந்த வீட்டு உரிமையாளர்கள் தோட்டத்தை விட்டு வெளியேறத்தீர்மானித்தால் தான் விரும்பியபடி வீட்டை விற்க முடியாது என்பதே உண்மை. டிரஸ்டின் கூட்டுறவு சங்கத்துக்கு தான் 'நியாய விலை'க்கு விற்கலாம்.

எப்படிப்பார்த்தாலும் குண்டு சட்டிக்குள் தான் குதிரை ஓடுகிறது. வேண்டுமானால் குதிரை மைதானத்தில் ஓடுவதாக நாம் கற்பனை செய்து கொள்ள வேண்டியது தான். ஒரே மாற்று வழி, தோட்டங்களின் தரிசு காணியை தொழிலாளர்களுக்கு பிரித்துக்கொடுத்து அதில் வீடுகளை அமைத்துக்கொள்ளும்படி சொல்வதுதான். ஆனால் இப்படி ஒரு விஷயத்தைப்பற்றி யோசிப்பது தொடர்பாக சிந்திக்கவும் மலையகத்தலைமைகள் தயாரில்லை என்ற நிலையே இன்று தெரிகிறது.

– மலைச்சோழன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உயர்ந்து வரும் பெற்றோலியப் பொருட்களின் விலையினை எதிர்கொள்ளல்

– என். சிறிரஞ்சன்

பெற்றோலியப் பொருட்களின் விலை அதிகரிப்பு என்பது இலங்கையில் மாத்திரமன்றி இவற்றினை இறக்குமதி செய்யும் எல்லா நாடுகளையுமே பாதிப்புக்குள்ளாக்கும் உலகப் பிரச்சினையாக உருவெடுத்து வருகின்றது. பெற்றோலியத்தின் விலையானது தளம்பல் தன்மை கொண்டதொன்று என்றபோதும் விலை அதிகரிப்பென்பது அண்மைக்காலம் வரை ஒரு கட்டுக்குள் இருப்பதாகவே காணப்பட்டது. ஆனால் அண்மைக்காலம் தொடக்கம் பெற்றோலியத்தின் விலையானது பாரிய அதிகரிப்பினை காட்டி நிற்கின்றது. இரண்டு வருடங்களிற்கு முன்னர் ஏறக்குறைய 25 டொலர்களாக காணப்பட்ட ஒரு பரல் மசகு எண்ணெய்யின் விலையானது கடந்த 2004 செப்ரெம்பரில் 56 டொலர்கள் வரை அதிகரித்திருந்தது. இந்த விலையேற்றம் கூட தற்காலிகமானது என்று கருதப்பட்ட போதும் கூட மீண்டும் பெற்றோலியத்தின் விலை தற்போது 55 டொலர்களைத் தாண்டியுள்ளது. ஒரு பரல் மசகு எண்ணெயின் விலையானது 100 டொலர்கள் வரை அதிகரிக்கலாம் என்று எண்ணெய்ச் சந்தை ஆய்வாளர் ஒருவர் அண்மையில் ஆருடம் கூறியிருந்தார். இது உலகம் முழுவதையும் அதிர்ச்சிக்குள்ளாக்குவதாக இருந்தது.

இவ்வாறான ஆருடங்கள் எவ்வளவு தூரம் நம்பத்தக்கவை என்பது கேள்விக்குரியதொன்றாகும். எவ்வாறாயினும் அண்மை கால நிகழ்வுகளை வைத்துப் பார்க்கும்போது எதிர்காலத்தில் பெற்றோலியத்தின் விலையானது தொடர்ந்தும் உயர்வாக இருக்கக்கூடிய நிலையே காணப்படுகின்றது. அதாவது மசகு எண்ணெய்யின் விலையானது எதிர்காலத்தில் 50 டொலர்களை அண்மித்ததாக இருக்குமே ஒழிய பழைய நிலைக்கு குறைவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகத் தெரியவில்லை.

ஈராக் மீது அமெரிக்கா தொடுத்த யுத்தம் தான் பெற்றோலிய விலை அதிகரிப்பதற்கு முக்கிய காரணம் என்று பலர் கருதுகின்ற போதும் இவ்விலை அதிகரிப்பிற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. உண்மையில் ஈராக் மீதான அமெரிக்க யுத்தம் பெற்றோலியத்தின் விலை குறைவடைய வழி வகுக்கும் என்ற எதிர்பார்க்கை தான் காணப்பட்டது. அதாவது உலகிலேயே சவுதி அரேபியாவிற்கு அடுத்ததாக அதிக பெற்றோலிய வளத்தினைக் கொண்ட ஈராக் குவைத் மீது மேற்கொண்ட ஆக்கிரமிப்பினைத் தொடர்ந்து பல்வேறு பொருளாதாரத் தடைகளை எதிர்நோக்கியிருந்தது. இதனால் ஏறக்குறைய இரண்டு தசாப்தங்களாக ஈராக்கினால் முழுமையாக எண்ணெய் உற்பத்தியில் ஈடுபட முடியாத நிலையொன்று காணப்பட்டு வருகின்றது. இந்த வகையில் அமெரிக்கா ஈராக் மீது தொடுத்த யுத்தத்தினைத் தொடர்ந்து சதாமின் ஆட்சி மாற்றப்பட்டு புதிய ஆட்சி வந்தவுடன் அதன் எண்ணெய் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி உரிய முறையில் மேற்கொள்ளப்படும்போது எண்ணெய் விலை குறைவடையும் என்ற எதிர்பார்ப்பு காணப்பட்டது. ஆனால் ஈராக்கில் தற்போது நடைபெறும் நிகழ்வுகள் அவ்வாறானதொரு நிலை ஈராக்கில் ஏற்படுவது சாத்திமில்லை என்பதனையே வலியுறுத்துவதாக உள்ளன. இந்த வகையில் ஈராக் எண்ணெய் வர்த்தகத்தில் இருந்து தொடர்ந்தும் விலகியிருப்பது பெருமளவிற்கு எண்ணெய் விலைகளின் அதிகரிப்பினை வசதிப்படுத்துவதொன்றாகவே உள்ளது.



செப்டெம்பர் 11 தாக்குதலைத் தொடர்ந்து மேற்காசியாவில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அப்பிரதேசத்தின் பாதுகாப்பினை பாதிக்கின்ற விடயங்களாக உள்ளன. இதனால் இப்பிரதேசங்களில் இருந்து எண்ணெய்களைக் கொண்டு செல்லும் எண்ணெய்க் கப்பல்களின் காப்புறுதிக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவும் உலக சந்தையில் பெற்றோலிய விலை அதிகரிப்பதற்கு காரணமாகியுள்ளது. அத்துடன் பிரதான எண்ணெய் உற்பத்தி நாடுகளின் கூட்டமைப்பான ஒபெக் பெற்றோலிய விலை அதிகரிப்பினைக் கட்டுப்படுத்தக்கூடிய அளவிற்கு எண்ணெய் உற்பத்தியினை அதிகரிக்க தயாராக இல்லாத நிலை காணப்படுகின்றது.

ஒபெக்கில் அங்கம் வகிக்காத ரஷ்யா, நோர்வே போன்ற நாடுகள் தமது எண்ணெய் உற்பத்தியினை அதிகரித்திருந்தாலும் அவ்வதிகரிப்பானது அதிகரித்துச் செல்லும் விலையினைக் கட்டுப்படுத்தும் அளவிற்கு போதுமானதாக இல்லை. பெற்றோலிய இருப்பானது மத்திய கிழக்கு நாடுகளில் மாத்திரமன்றி அமெரிக்கா, கனடா, ரஷ்யா, நோர்வே, வெனிசுலா, நைஜீரியா போன்ற பல நாடுகளில் காணப்பட்டாலும் இந் நாடுகளில் பெற்றோலிய இருப்புக்களின் அமைவிடம் அவற்றின் உற்பத்திச் செலவு அதிகமாக இருக்க காரணமாகின்றது. அமெரிக்கா மற்றும் கனடாவில் ஒரு பரல் மசகு எண்ணெயினை உற்பத்தி செய்வதற்கு 15 டொலர்கள் வரை தேவைப்படும்போது மத்திய கிழக்கு நாடுகளில் பரல் ஒன்று ஐந்து டொலர் செலவில் உற்பத்தி செய்யக்கூடியதாக உள்ளது.

பெற்றோலியப் பொருட்களின் வழங்கலானது (supply) இவ்வாறானதொரு மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட அதன் கேள்வியானது தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்வதொன்றாகவே இருக்கிறது. 2004 இன் பிற்பகுதியில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்துக் காணப்பட்டபோது மேற்கு நாடுகளில் காணப்படும் கடும் குளிர் அதற்குரிய காரணங்களில் ஒன்றாகச் சொல்லப்பட்டது. குளிர் காலங்களில் சூடாக்குவதற்கு எண்ணெய் பயன்படுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும் இது ஒரு தற்காலிக கேள்வி அதிகரிப்பாகும்.

உலகின் பல நாடுகளில் பெற்றோலியத்தின் பாவனை மிகவும் அதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மாக அதிகரித்து வருகின்றது. குறிப்பாக ஆசிய நாடுகளின் பெற்றோலியப் பொருட்களுக்கான கேள்வி மிகத் துரிதமாக அதிகரித்து வருகின்றது. குறிப்பாக சீனா மற்றும் இந்தியாவில் இதற்கான கேள்வி மிக வேகமாக அதிகரித்துவரும் நிலை காணப்படுகின்றது. சீனா, தென் கொரியா, தாய்வான் ஆகிய நாடுகளின் பெற்றோலியத்திற்கான கேள்வியானது கடந்த 23 வருடங்களாக 10 வீதத்திற்கு மேலாக தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் ஒரு புறத்தில் பெற்றோலியத்தின் வழங்கலானது மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்பட மறுபுறத்தில் அதன் கேள்வியானது தொடர்ச்சியாக அதிகரித்து செல்வதொன்றாக காணப்படுகின்றது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் விரும்பியோ விரும்பாமலோ உயர் பெற்றோலிய விலையினை உலக நாடுகள் எதிர்நோக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றன.

பெற்றோலியப் பொருட்களின் விலையேற்றம் என்பது பல்வேறு வழிகளில் நாடொன்றின் பொருளாதாரத்தினை பாதிப்பதாக இருக்கின்றது. பெற்றோலியப் பொருட்கள் எனும் போது பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்றவை நமது ஞாபகத்திற்கு வருகின்றபோதும் இவற்றுடன் பிளாஸ்டிக் பொருட்கள் பொலித்தீன் வகைகள் சில உர வகைகள் போன்ற பல்தரப்பட்ட பொருட்கள் பெற்றோலியத்திலிருந்து பெறப்படுபவையாகும்.

பொற்றோலியப் பொருட்களானவை பலதரப்பட்ட வாழ்க்கை மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு உள்ளீடாக பயன்படுத்தப்படுகின்றன என்ற வகையில் இவற்றின் விலையில் ஏற்படும் அதிகரிப்பு பலதரப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் அதிகரிப்பினை ஏற்படுத்துவதாக இருக்கின்றது. இதனால் பெற்றோலியப் பொருட்களின் விலையேற்றமானது பொருளாதார வளர்ச்சியை கணிசமான அளவு பாதிப்பதொன்றாக அமைகின்றது. மசகு எண்ணெயின் விலையானது பரல் ஒன்றிற்கு 10 டொலர்களினால் அதிகரிக்கும்போது அது அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சியை ½ வீதத்தினால் குறைவடையச் செய்யும் எனக்கணிப்பிடப்பட்டுள்ளது. இந்த வகையில் இது சகல வகை மக்களினதும் வாழ்க்கை செலவினை அதிகரிப்பதொன்றாக இருக்கின்றது.

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் சிறிய பொருளாதாரமொன்றில் பெற்றோலிய விலையேற்றமானது பலதரப்பட்ட பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக அமைகின்றது. ஒன்று பெற்றோலிய விலையேற்றத்தின் நேரடியான பாதிப்பு. இரண்டாவது தொடர்ச்சியாக அதிகரிக்கும் பெற்றோலியப் பொருட்களுக்கான கேள்வி. மூன்றாவது பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவு அதிகரிக்கப்படும்போது அது நாட்டின் அந்நியச் செலாவணிக்கான கேள்வியினை அதிகரிக்கச் செய்து அதன் மூலம் உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடையக் காரணமாக அமைகின்றது.




இவ்வாறு உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடையும் போது அது மறுபக்கத்தில் பெற்றோலியப் பொருட்கள் உட்பட இறக்குமதிகளின் செலவினை மேலும் அதிகரிப்பதாக இருக்கும்.

**ஒரு பரல் மசகு எண்ணெயின் விலையானது 100 டொலர்கள் வரை அதிகரிக்கலாம் என்று எண்ணெய்ச் சந்தை ஆய்வாளர் ஒருவர் அண்மையில் ஆருடம் கூறியிருந்தார். இது உலகம் முழுவதையும் அதிர்ச்சிக்குள்ளாக்குவதாக இருந்தது.**

இலங்கையானது ஏனைய நாடுகளைப்போலன்றி தனது சக்தித் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு பெருமளவிற்கு பெற்றோலிய இறக்குமதிகளிலேயே தங்கியிருக்கும் நிலை காணப்படுகின்றது. நாட்டின் மின்சார உற்பத்தியில் கணிசமான அளவுப் பகுதி டீசல் ஜெனரேட்டர்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றது. 2003 ஆம் ஆண்டில் இது நாட்டின் மின்சார உற்பத்தியில் 52 வீதமாக இருந்தது. இது ஒரு புறத்தில் பெற்றோலிய இறக்குமதி மீதான செலவினை அதிகரிப்பதொன்றாக இருப்பதுடன் மறுபுறத்தில் மின்சார உற்பத்திச் செலவும் உயர்வாக காணப்பட காரணமாகின்றது. இதனால் இந்த உயர் உற்பத்திச் செலவினை ஈடு செய்வதற்கு அரச மானியம் வழங்கப்பட வேண்டியதாக இருக்கின்றது. இது அரசு பாரிய நிதி நெருக்கடியினை எதிர்நோக்கக் காரணமாகின்றது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் இந்த அதிகரித்த பெற்றோலிய விலையினை எதிர்கொள்ளல் என்பது தவிர்க்க முடியாததொன்றாக இருக்கின்றது. இந்த வகையில் பெற்றோலியப் பாவனையினை கட்டுப்படுத்த வேண்டியதும், அதிகரித்துச் செல்லும் பெற்றோலிய இறக்குமதிச் செலவினை ஈடு செய்யக் கூடிய வகையில் அந்நியச் செலாவணியினை பொருளாதார நடவடிக்கைகள் மூலம் உழைத்துக் கொள்வதும் அவசியமாகின்றது.

வளர்ச்சியடைந்த நாடுகளைப் போன்று அணுமின் உற்பத்தியில் ஈடுபடுவது இலங்கையைப் பொறுத்தவரை சாத்தியமற்றதொன்று. ஆனால் ஏனைய மாற்று முறைகளான நீர்மின் உற்பத்தி, சிறு நீர்மின் உற்பத்தித் திட்டங்கள், நிலக்கரி மூலமான மின் உற்பத்தி, காற்றாடிகள் (Wind mill) மூலமான மின் உற்பத்தி, சூரிய ஒளியிலான மின் உற்பத்தி போன்ற மாற்றுத் திட்டங்களை அமுல்படுத்த வேண்டியது அவசியமாகும்.

பெற்றோலியப் பொருட்களின் பாவனையினைக் கட்டுப்படுத்தும் வகையில் போக்குவரத்து நெருக்கடிகளை (Traffic) குறைத்தல், போக்குவரத்துத் தெருக்களை சிறந்த முறையில் பேணல். குறைந்த எரிபொருளுடன் இயங்கும் வாகனங்களைப் பாவித்தல், தனிப்பட்ட வாகனங்களின் பாவனையினைக் குறைக்கக்கூடிய வகையில் பொதுப்போக்குவரத்து சேவையினை மேம்படுத்தல், இயற்கைவாயு, தாவர எண்ணெய்கள் போன்ற மாற்று எரிபொருள்களினை பாவித்தல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும். இவ்வாறான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடில் நாடுகள் பாரிய பொருளாதார நெருக்கடியினை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்பித்தல் 6

புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழ்ப்பிள்ளைகளுக்கும் பொருந்துமென நம்புகின்றேன்.

அ. ஆங்கிலம் பேசத் தெரியாத தமிழ்பெற்றோர்களின், ஆஸ்திரேலியாவில் பிறந்த பிள்ளைகள் தமிழிலே பேசுகின்றனர். ஏனெனில் தந்தையும் தாயும் பிள்ளைகளுடன் தமிழிலேயே பேசுகின்றனர்; அதனால் பிள்ளைகளும் தமிழில் உரையாடக்கூடியவர்களாக இருக்கின்றனர். பள்ளியில் ஆங்கிலம் வாயிலாகப் பாடங்களைப்படித்தாலும், பிள்ளைகள் வீட்டுக்குத்திரும்பியதும் வீட்டில் பெற்றோருடன் தமிழிலேயே உரையாடுகின்றனர். இந்நிலையில் இப்பிள்ளைகளுக்கு வீட்டு மொழி தாய் மொழியாக அமைந்து விடுகின்றது. வெளிநாட்டில் பிறந்து வளர்ந்தாலும் தமிழிலிலே உரையாடக்கூடிய தமிழ்ப்பிள்ளைகளாக இவர்கள் காணப்படுகின்றனர். எதிர்காலத்திலும் தமிழ் பேசுகின்ற தமிழர்களாக வாழ்வர். இவர்களின் எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணலாம். பள்ளியிலும் வீட்டிலும் ஆங்கிலத்திலேயே பேசுகின்ற பிள்ளைகளின் ஆங்கில அறிவிலும் ஆற்றலிலும், இப்பிள்ளைகளின் ஆங்கில அறிவும் ஆற்றலும் எவ்வகையிலும் குறைந்தவை என்று கூற முடியாது.

ஆ. பெற்றோர்களுள் தந்தை ஆங்கிலம் தெரிந்தவர். ஆனால் தாய் ஆங்கிலம் பேசத்தெரியாதவர். இவர்களின் பிள்ளைகளும் தமிழிலே உரையாடுகின்றனர். ஏனெனில் ஆங்கிலம் பேசத்தெரியாத தாய், வீட்டில் பிள்ளைகளுடன் தமிழிலேயே பேசுகின்றாள். ஆனால் ஆங்கிலம் தெரிந்த தந்தை பிள்ளைகளுடன் ஆங்கிலத்திலும் பேசுகின்றான்; தமிழிலும் உரையாடுகின்றான். எனினும் பிள்ளைகள் கூடுதலான நேரத்தை வீட்டில் தம் தாயுடனேயே கழிக்கின்றனர். தாய் தமிழிலேயே பேசுகின்றாள். இப்பிள்ளைகளுக்கும் வீட்டு மொழி தாய் மொழியாக அமைந்து விடுகின்றது. ஆனால் இவர்கள் வீட்டில் இரண்டு மொழிகளைப்பேசுகின்றனர்; தந்தையுடன் ஆங்கிலத்திலும் தமிழிலும் பேசுகின்றனர்; தாயுடன் தமிழில் பேசுகின்றனர். இவர்களின் எண்ணிக்கையும் குறைவாகவே உள்ளது. இப்பிள்ளைகளின் ஆங்கில அறிவும் ஆற்றலும் எவ்வகையிலும் குறைந்தவை என்று கூற முடியாது.

இ. பாட்டன்-பாட்டியுடன் இருக்கின்ற பிள்ளைகளும் தமிழிலே உரையாடக்கூடியவர்களாக இருக்கின்றனர். ஏனெனில் ஆங்கிலம் தெரியாத பாட்டனும் பாட்டியும் பேரப்பிள்ளைகளுடன் தமிழிலேயே உரையாடுகின்றனர். இதனால் இவர்களின் பேரப்பிள்ளைகள் தமிழிலே உரையாடக்கூடியவர்களாக இருக்கின்றனர். ஆனால் பெற்றோர் வேலையிலிருந்து வீட்டுக்குத்திரும்பியதும் வீட்டில் பிள்ளைகளுடன் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே பேசுகின்றனர்.

ஆய்வினால் கண்டு மேலே எடுத்துக்காட்டியவற்றைக்கொண்டு முக்கியமான உண்மை ஒன்று தெரிய வந்துள்ளது. அஃதாவது வீட்டில் பேசும் மொழி தமிழாக இருப்பின், ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்கும் நாட்டிலும் தமிழைப்பேசக் கூடியவர்களாகத் தம் குழந்தைகளைப் பெற்றோர் உருவாக்க முடியும் என்பதாம். "செந்தமிழும் நாப்பழக்கம்" என்பது ஒரு முதுமொழி.



ஆ.கந்தையா

### பிள்ளைகள் தமிழிலே உரையாடச்சில உத்திகள்

#### 1. வீட்டில் தமிழில் பேசுதல்

வீட்டில் பிள்ளைகளுடன் தமிழிலேயே உரையாடுதல்; அஃதாவது வீட்டில் பேசும் மொழி தமிழ்மொழியாக இருத்தல். வீட்டில் ஆங்கிலத்தில் பேசுவோமானால் பிள்ளைகளும் ஆங்கிலத்திலேயே பேசுவர். ஆங்கிலம் பேசும் சூழலில் வாழ்கின்ற பிள்ளைகள் ஆங்கிலத்திலேயே பேச விரும்புவர். அச்சூழலில் வீட்டு மொழியும் ஆங்கிலமாக அமையுமானால் தமிழ் பேசுவதைப் பிள்ளைகள் நிச்சயமாக மறந்து விடுவர். எனவே தமிழ் பேசும் குழந்தைகளாக வளர்க்க வேண்டுமானால் வீட்டில் பெற்றோர் குழந்தைகளுடன் தமிழிலேயே உரையாட வேண்டும். இதுவே குழந்தைகளைத்தமிழிலே உரையாட வைப்பதற்கு சிறந்த ஒரு வழியாகும்.

#### 2. வினா– விடையாகக் கற்பித்தல்

உங்கள் பெயர் என்ன? உங்கள் அப்பா பெயர் என்ன? உங்கள் அம்மா பெயர் என்ன? இவை போன்ற வினாக்களைத்தயாரித்து அவற்றுக்கான விடைகளைத்தமிழிலே சொல்ல வைத்தலும் தமிழிலே உரையாட ஊக்குவிக்கும். ஆஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளில் வாழ்கின்ற ஆங்கிலம் பேசும் பிள்ளைகளுக்கு இக்கற்பித்தல் முறை சிறந்ததாகும். தமிழைப்பேச, எழுத, வாசிக்கத்தெரியாத தமிழர்கள் அல்லாதவர்களுக்கும் தமிழ் கற்பிப்பதற்கும் இக்கற்பித்தல் முறையைப்பயன்படுத்தலாம்.

#### 3. மனனஞ் செய்து பாடுதலும் பேசுதலும்

தமிழ்ப்பள்ளிகள், தமிழ் அமைப்புகள் போன்றவை நடத்தும் பேச்சுப்போட்டி, மனனப்போட்டி என்பவற்றில் பிள்ளைகள் பங்குபற்ற பெற்றோர் ஊக்குவிக்கலாம். மற்றைய பிள்ளைகள் தமிழிலே பேசுவதைக்கேட்பதும், மேடையில் பேச்சுப் போட்டிகளில் பங்குபெறுவதும் தமிழிலே சரளமாகப்பேசுவதற்கு பிள்ளைகளை ஊக்கு விக்கும். இந்த நோக்கத்துடன் தமிழ்ப்பிள்ளைகளும் தமிழ் அமைப்புகளும் பேச்சுப்போட்டி, மனனப்போட்டி போன்றவற்றை ஆண்டு தோறும் நடத்துகின்றன.

#### 4. தமிழ்ப்பாடல்களைப்பாடி மகிழ்தல்

இசைப்பாடல்கள், பக்திப்பாடல்கள்,சிறந்த சினிமாப்பாடல்கள் போன்றவற்றைப்பிள்ளைகள் கேட்டு மகிழச்செய்தலும், பொருளறிந்து பாடி மகிழ வைத்தலும் தமிழைப்பேச வைப்பதற்கான இன்னோர் உத்தியாகும். இசையமைத்த இனிய பாடல்களைப் பிள்ளைகள் கேட்பதற்கும், பாடி இன்புறுவதற்கும், இறுதியில் மனனஞ்செய்து கொள்வதற்கும் இவ்வுத்தி உதவியாக அமையும். எனவே ஒலிப்பதிவு செய்த பாடல்களை வீட்டில் அடிக்கடி கேட்டு மகிழவும், பாடி இன்புறவும் பிள்ளைகளுக்கு வாய்ப்பளிக்கலாம்.

#### 5. தமிழ்த்திரைப்படங்களைப்பார்த்தல்

வீட்டிலே தொலைக்காட்சியில் தமிழ்த் திரைப்படங்களைப் பார்ப்பதற்கு புலம் பெயர்ந்து வாழும் பிள்ளைகளுக்கு வசதிகள் உண்டு. ஒவ்வொரு வீட்டிலும் தொலைக்காட்சி உண்டு; தமிழ்த்திரைப்பட வீடியோக்களை எளிதில் வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம். எனவே வாரத்தில் ஒரு நாளில் சிறந்த தமிழ்த்திரைப்படம் ஒன்றைப்பார்ப்பதற்கு பிள்ளைகளுக்கு வாய்ப்பளிப்பது பிள்ளைகளைத் தமிழிலே பேசுவதற்கு ஊக்கத்தை உண்டாக்கும்.

#### 6. பிறந்தநாட்டில் விடுமுறையைக்கழித்தல்

காலத்துக்கு காலம் விடுமுறைக்காலத்தில் பிள்ளைகளை, பெற்றோர் பிறந்த நாட்டிற்கு அல்லது தமிழ் வழங்கும் நாட்டிற்கு அழைத்துச்சென்று, தமிழ்ப்பிள்ளைகளோடு சேர்ந்து பழக வைத்தல் பிள்ளைகளைத் தமிழிலே சரளமாக பேச வைப்பதற்கு இன்னோர் சிறந்த உத்தியாகும். இதனால் தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ் மரபுகளையும் அறிந்து கொள்வதற்கு பிள்ளைகளுக்கு நல்வாய்ப்பு ஏற்படும்.

### முடிவுரை

புலம் பெயர்ந்த தமிழர்கள், சிறப்பாக இலங்கைத்தமிழர்கள், உலகில் பல நாடுகளில் வாழ்கின்றனர். பிரித்தானியா, கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் கூடிய எண்ணிக்கையான தமிழர்கள் இருக்கின்றனர்.

இந்நாடுகளில் ஆட்சி மொழி ஆங்கிலம். அந்தச் சூழலிலேயே தமிழ்ப்பிள்ளைகள் பிறந்து வளர்கின்றனர்; வாழ்கின்றனர். வீட்டிலும் வெளியிலும் இவர்கள் ஆங்கிலத்திலேயே பேசுகின்றனர். ஆங்கிலத்திலேயே சிந்தித்து செயலாற்றுகின்றனர்.

'தமிழை ஏன் கற்க வேண்டும்?' என்ற வினாவுக்கு விடையளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தமிழை இரண்டாம் மொழியாக கற்பதற்கும் வாய்ப்பு இல்லாத நிலை ஏற்படலாம். இந்நிலை தொடருமானால் இரண்டு அல்லது மூன்று தலைமுறைகளில் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழ்ப் பிள்ளைகள் தமிழைப்பேச, வாசிக்க, எழுதத் தெரியாதவர்களாக இருப்பர் என்பதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது. இலங்கைத்தமிழர்கள் எந்த உரிமைக்காக போராடி வெளிநாடு சென்றனரோ, அந்த உரிமையையே இழந்து தமிழ் பேசவியலாத தமிழர்களாக வாழ்வர் என்பதை கூறி வைக்க விரும்புகின்றேன்.

(முற்றும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்புயர்வற்ற தவில் கலைஞன்

13 ஆம் திகதி தட்சிணாமூர்த்தியின் 30 ஆவது நினைவு தினம்

யாழ். மண் உலகுக்கு அளித்த ஒப்புயர்வற்ற கலைஞர் மறைந்த தவில் மேதை அளவையூர் தட்சிணாமூர்த்தி. தமக்கியல்பாகவே அமைந்த லய ஞானம், கற்பனை என்பவற்றிற்கூடாக தவில் வாசிப்பதில் தனித்துவமான பாணியை வகுத்து நாதஸ்வரத்துக்கு தவில் துணை வாத்தியம் என்ற மரபு தலை கீழாக மாற்றி அமைக்கப்பட்டு விடுமோ என்று அஞ்சுமளவிற்கு இசைப் புரட்சியை தவில் வாத்தியத்தின் துணை கொண்டு நிகழ்த்திக்காட்டியவர். யாழ். மண்ணில் பிரபல உள்ளூர் வெளியூர் கலைஞர்களுடன் இணைந்து தவில் வாசித்தார்.

சில பிரபல பாடகர்கள் தமது கச்சேரிகளில் தவில் வாசிக்கும்படி தட்சிணாமூர்த்தியிடம் கேட்டபோது "தவில் நாதஸ்வரத்துக்கு மட்டுமே பக்க வாத்தியமாக தொன்மைக்காலம் தொட்டே பெரியவர்களால் பேணிப்பாதுகாக்கப்பட்டது. இந்த மரபை பாழாக்க எனக்கு விருப்பமில்லை" என்று கூறி கடைசி வரை இந்தக்கொள்கையை கடைப்பிடித்தார். எப்படிப்பட்ட லய விசேடங்களையும் எந்த தளத்திலும் எத்தனை வேகத்தில் வேண்டுமானாலும் மணிக்கணக்கில் வாசிக்கும் வல்லமை பெற்றவர். அவர் கடுமையான சந்தத்தாளங்களில் லய விந்யாசம் செய்வது அவருக்கு கை வந்த கலை. தட்சிணாமூர்த்தி தன்னுடன் வாசிக்கும் மிகச் சாதாரண கலைஞரையும் தனக்கு ஈடானவர் போலக்காட்டுவதே அவரது வழக்கம். தட்சிணாமூர்த்தி அன்றைய பிரபல தவில் வித்துவான்களாகிய என்.சின்னத்தம்பி, பி.எல்.ராஜகோபால், காமாட்சி சுந்தரம் பிள்ளை மற்றும் இந்தியத்தவில் மேதையான நாச்சிமார் கோவில் ராகவப்பிள்ளை ஆகியோரிடம் முறையாக தவில் பயின்றவர். இதனால் தனது எட்டாவது வயதிலேயே மேடைக்கச்சேரி வாசிக்குமளவுக்கு பக்குவம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. காரைக்குறிச்சி அருணாசலத்தின் கச்சேரியில் அவர் தவில் வாசித்தவராவார்.

ஷேக் சின்ன மௌலானாவிற்கு தட்சிணாமூர்த்தி தவில் வாசித்த கச்சேரியினை 'இண்டியன் எக்ஸ்பிரஸில்'விமர்சித்த சங்கீத விமர்சகராகிய சுப்பிடு என்பவர் 'எல்லை கடந்த கலை நுணுக்கத்திறனின் உச்சம்' (Virtuosity at its highest) என்று தட்சிணாமூர்த்தியின் வித்துவத்தை விளக்க அந்த விமர்சனத்துக்கு தலையங்கம் கொடுத்துள்ளார். கிருஷ்ணகான சபாவில் நடைபெற்ற அந்த இசை விழாவில் திருநந்தி தேவரே வந்து தவில் வாசித்தாரோ என்று நினைத்ததாகவும், மனிதனது விரல்களினால் இவ்வாறு மிகவும் நுண்மையான நாத பேதங்களை இசைக்க முடியும் என்று ஒரு போதும் தான் கற்பனை பண்ணியதில்லை என்றும் அந்த விமர்சனத்தில் குறிப்பிட்டுள்ளார்.




26.8.1933 இல் பிறந்த தலை சிறந்த தவில் கலைஞனாக விளங்கிய தட்சிணாமூர்த்தி தனது 42 ஆவது வயதில் 13.05.1975 இல் இறைவனடி சேர்ந்தார். கலைஞன் என்பவன் மதங்களையும், இனங்களையும், நாடுகளையும் கடந்தவன் என்பதை தட்சிணாமூர்த்தியின் மறைவு நிரூபித்தது. மறைவையொட்டி இந்தியாவின் பல இடங்களிலும் இருந்த அவரது ரசிகர்கள் கடைகளை மூடியும், கறுப்புக்கொடிகளைக்கட்டியும் துக்கம் அனுஷ்டித்தனர்.தட்சிணாமூர்த்தியின் உடல் இவ்வுலகை விட்டு மறைந்தாலும் அவரது புகழ் கலை உலகில் என்றும் வாழும்.

-த.செந்தூரன்

# குறள் வழி வந்த வாழ்வு



குறள் வழி வந்த வாழ்வு திருக்குறள் மனித வாழ்வுடன் எவ்வாறு இழைந்து நிற்கிறது. திருக்குறள் கூறும் வாழ்க்கை நெறிகளை நாம் எவ்வாறு தழுவிக்கொள்ளலாம் என்பவற்றை எடுத்து விளக்கும் வகைகளில் எழுதப்பட்ட 50 கட்டுரைகளைத்தாங்கி வெளிவந்துள்ளது இந்நூல். இது திருக்குறள் முழுவதற்குமான ஒரு தேடல் அல்ல. திருக்குறளில் ஆங்காங்கே சில குறள்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை மையமாக வைத்து குறள்களின் பொருட்பரப்பை எடுத்துக்காட்டி அவற்றின் மூலக்கருத்தை நோக்கி வாசகனை அழைத்துச் செல்லும் விதமாக கட்டுரைகள் அமைந்திருக்கின்றன. தமிழுக்கும் தமிழினத்துக்கும் அறிவுப் பலத்தையும் அழியாத பெருமையையும் தந்து கொண்டிருக்கும் திருக்குறள் எமது சிந்தனையை நெறிப்படுத்தி, வாழ்வுக்கு வழிகாட்டுவது என்ற வகையில் அதனை நுணுகி நோக்கி முழுமையாக படிக்கவைக்கும் தூண்டலை 'குறள் வழி வாழ்வு'ஏற்படுத்துகின்றது என்று கூறலாம். புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழர்களுக்காக கனடாவிலிருந்து வெளிவரும் 'அன்பு நெறி' சஞ்சிகைக்காக எழுதப்பட்ட இக்கட்டுரைகள் புலம்பெயர் மண்ணில் வாழும் குறிப்பாக இளந்தமிழர்கள் படிக்க வேண்டுமென்பதற்காக இலகுவான மொழி நடையில் எழுதப்பட்டுள்ளன. இதன் வெளியீட்டு நிகழ்வு ஏப்ரல் 30 ஆம் திகதி கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. இதன் ஆசிரியர் வ.இராசையா. வெளியீடு அரவிந்தம் பதிப்பகம்.

## அறிமுக விழா

கனேடிய கலை இலக்கிய ஊடக நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் பிரபல கட்டுரையாளரும், மூத்த நூலகவியலாளரும் வெளியீட்டாளரும் 'நூல் தேட்டம்' தொகுப்பாசிரியருமான திரு.என். செல்வராஜா அவர்களின் நூல்தேட்டம் முதலிரு தொகுதிகளின் அறிமுகவிழா அண்மையில் ஸ்காபரோ சிவிக் சென்டர் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

இவ்வறிமுக நிகழ்வில் தலைமையுரையை கவிஞர் கந்தவனம் அவர்களும், "கனடாவில் நூலகவியலாளர் செல்வராஜா: ஒரு வாரப் பார்வை" என்ற தலைப்பில் கனடா உலகத் தமிழர் சமூக நூலகத்தைச் சேர்ந்த திரு. கே. ஜவகர்லால் நேரு அவர்களும், ஈழத்தவரின் வெளியீட்டு முயற்சிகள் என்ற தலைப்பில் நான்காவது பரிமாணம் ஆசிரியர் திரு. க.நவம் அவர்களும் உரையாற்றினார்கள். நூல்தேட்டம் முதலாவது தொகுதியின் அறிமுகவுரையை கலை இலக்கிய விமர்சகர் திரு. ப. ஸ்ரீஸ்கந்தன் அவர்களும், இரண்டாவது தொகுதியின் அறிமுகத்தை மூத்த எழுத்தாளர் வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) அவர்களும் மேற்கொண்டார்கள்.

பேச்சாளர்களின் உரைக்கான பதிலுரையை நூலாசிரியர் என்.செல்வராஜா அவர்களும், நன்றியுரையை விழா ஒருங்கிணைப்பாளர் தமிழர் தகவல் பிரதம ஆசிரியர் திரு.எஸ்.திருச்செல்வம் அவர்களும் மேற்கொண்டார்கள்.நூலின் பிரதிகள் வழங்கலுடன் விழா இனிதே நிறைவெய்தியது. கொள்கைகளால் வேறுபட்ட பல்வேறு அமைப்புக்கள், இலக்கியச்சங்கங்களின் பிரதிநிதிகள் என் போர் ஒருங்கிணைந்து இந்நிகழ்வில் பங்குகொண்டது மிகுந்த ஆரோக்கியமான நிகழ்வாக அமைந்திருந்ததாக கனேடியப்பத்திரிகைகள் இந்நிகழ்ச்சி பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் செய்திகளை வெளியிட்டிருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகக்கலைஞர் 'வல்வையூரான்'



வ.ஆதங்கவேலாயுதம் (வல்வையூரான்)

தேசிய தமிழ் நாடகவிழா 2005 கடந்த மாதம் 24 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை கொழும்பு - 07 இல் அமைந்துள்ள ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கில் கோலாகலமாக நடைபெற்று முடிந்திருக்கிறது. இந்நாடகவிழா பற்றி தேசிய நாடகசபையின் தமிழ் உறுப்பினர்களில் ஒருவரும் நடைபெற்று முடிந்த நாடக விழா செயற்பாடுகளுக்காக அமைக்கப்பட்டிருந்த தமிழ் நாடக உபகுழுவின் செயலாளரும் கலைஞரும் எழுத்தாளரும் ஊடகவியலாளருமான வ.ஆதங்கவேலாயுதம் (வல்வையூரான்) தமிழ் உலகத்திற்கு வழங்கிய செவ்வி இது.

**கேள்வி:** தேசிய நாடக சபை பற்றி-அதன் செயற்பாடுகள் பற்றி சிறிது கூறுவீர்களா?

**பதில்:** கடந்த காலங்களில் இலங்கை கலைக்கழகத்தின் கீழ் இலங்கையின் நாடகத்துறை வளர்ச்சிக்கென சிங்கள நாடக உபகுழு, தமிழ் நாடக உபகுழு என இரு குழுக்கள் மொழி ரீதியாக வெவ் வேறாக இயங்கி வந்தன. இவ்வாறு வெவ்வேறாக இயங்கி வந்ததன் மூலம் சிங்களக்கலைஞர்களுக்கு கிடைத்த வாய்ப்புக்கள் -வசதிகள்-அனுகூலங்கள் தமிழ்க்கலைஞர்களுக்கு கிடைக்காமலே இருந்தன. ஆனால் ஒன்றாக இயங்குவதன் மூலம் அவர் களுக்கு கிடைக்கின்றவைகள் பற்றி நாமும் தெரிந்து கொண்டு அதே வசதிகள் எமது தமிழ் நாடகக் கலைக்காகவும் கலைஞர்களுக்காகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

**கேள்வி:** 2003,2004, 2005 என மூன்று சிங்கள நாடக விழாக்கள் நடைபெற்று முடிந்திருக்கின்ற கால கட்டத்தில் 2002 க்குப்பிறகு இப்பொழுதுதானே தமிழ் நாடக விழா நடைபெறுகிறது. இடையில் இரண்டு வருடங்கள் தமிழ் நாடக விழாக்கள் நடைபெறவில்லையே.

**பதில்:** 2002 நவம்பர் 27,28 ஆம் திகதிகளில் இடம்பெற்ற அரச தமிழ் நாடக விழா போட்டி முடிவுகளில் முரண்பாடுகள் -முறைகேடுகள் இருந்ததாக கூறப்பட்ட புகார்கள் காரணமாகவோ என்னவோ 2003, 2004 க்கான தமிழ் நாடக விழாக்கள் இடம்பெறவில்லை. அதே வேளை சிங்கள நாடக உபகுழு 2003 இல் போட்டிகளை நடத்திப்பரிசளிப்பு வைபவத்தை நடத்தியது மட்டுமன்றி 2004 ஆம் ஆண்டு சிங்கள நாடக விழாவிற்கான ஏற்பாடுகளையும் செய்து முடித்திருந்தது. அதன் காரணமாக 2004 ஆட்சி மாற்றத்தின் பின் புதிதாக அமைக்கப்பட்ட தேசிய நாடக சபை 2004 இன் பிற்பகுதியில் சிங்கள நாடக போட்டிகளை நடத்தி பரிசளிப்பு வைபவத்தையும் சிறப்பாக நடத்தி முடித்திருந்தது.

**கேள்வி:** தேசிய நாடக சபையில் தற்பொழுது தமிழ் நாடகத்துறை சார்பாக தமிழ் உறுப்பினர்கள் நால்வர் இருப்பதாக அறிகிறோம். தமிழ் நாடக விழாவை நடாத்த வேண்டும் என கடந்த வருடம் நீங்கள் கோரிக்கை விடுக்கவில்லையா?

**பதில்:** ஏன் இல்லை. கோரிக்கை விடுத்தோம். ஆனால் முன்பிருந்த சிங்கள நாடக உபகுழு விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வைத்திருந்தது. ஆனால் சில வருடங்கள் செயலற்றுப்போயிருந்த தமிழ் நாடக குழு எதையும் செய்திராத காரணத்தினால் எம்மால் எதுவுமே செய்ய முடியாமற்போனது தமிழ் நாடகத் துறைக்கு ஏற்பட்ட பெரும் இழப்பு என்றே கூற வேண்டும். ஆயினும் தற்போது தேசிய நாடக சபையில் தமிழ் நாடகத்துறை சார்பாக உறுப்பினர்களாக உள்ள கலாபூஷணம் கலைச்செல்வன், அந்தனி ஜீவா, கலைவாதி கலீல் மற்றும் நான் உட்பட நாங்கள் விடுத்த கோரிக்கைக்கு கலாசார அமைச்சர் விஜித ஹேரத் அவர்கள் அங்கீகாரம் வழங்கினார். அதாவது இரண்டு வருடங்கள் தமிழ் நாடக விழாக்கள் இடம்பெறாமல் போனமையால் சிங்கள நாடக விழாவின் இறுதிச்சுற்றுக்கு இடம்பெறும் நாடகங்களோடு விசேட அழைப்பின் பேரில் வடக்கு கிழக்கு மலையகம் கொழும்பு போன்ற இடங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நான்கு தமிழ் நாடகங்கள் விசேட அழைப்பின் பேரில் இடம்பெறவேண்டும் என்ற எங்கள் கோரிக்கைக்கு முழுமையான அனுமதி கிடைத்தது. அதன்படி கொழும்பிலிருந்து கிருஷ்ண கலாலயம் வழங்கிய 'வளவை வளவன்'எழுதி கே.மோகன்குமார் நெறிப்படுத்திய 'வெள்ளைச்சிறகுகள் விரிகின்றன.' என்ற நாடகமும், யாழ்திருமறைக்கலாமன்ற தயாரிப்பில் ஜோன்சன் ராஜ்குமாரின் 'கொல் ஈனுங்குற்றம்', கலைஞர் பொன். கணேசமூர்த்தியின் 'மறுவிலங்கு பேராசிரியர் மௌனகுருவின் 'இராவணேசன் நாடகத்தை கொண்டு வருவதற்காக முயற்சி செய்தும் முடியாமல் போனது.

**கேள்வி:** மொழி ரீதியில் வெவ்வேறாக இயங்கிய நாடகக்குழுக்களை ஒன்றாக இணைத்ததன் மூலம் தமிழ் நாடகத் துறைக்கும் நாடகக்கலைஞர்களுக்கும் நன்மைகள் கிடைக்கும் என நீங்கள் நம்புகின்றீர்களா?

**பதில்:** நிச்சயமாக. இதன்மூலம் இது வரை காலமும் கிடைக்காத நன்மைகள் தமிழ் நாடகத்துறைக்கும், தமிழ் நாடகக் கலைஞர்களுக்கும் கிடைத்திருக்கின்றன. வெவ்வேறாக இயங்கிய காலங்களில் சிங்கள கலைஞர்களுக்கு கிடைத்த கௌரவங்கள் தமிழ் கலைஞர்களுக்கு கிடைக்கவில்லை. ஒன்றாக இயங்கத் தொடங்கிய பிறகு எம்மால் அவற்றைப் பெற்றுத்தர முடிந்திருக்கிறது. இவ்வளவு காலமும் வருடா வருடம் மூத்த சிங்கள கலைஞர் ஒருவருக்கு ஐம்பதாயிரம் ரூபா பணப்பரிசுடன் 'முது கலைஞர்' விருதும் வழங்கப்பட்டு வந்தது. முதல் தடவையாக 2004 ஆம் ஆண்டின் தேசிய நாடகவிழா பரிசளிப்பின்போது எங்களது கோரிக்கையின் பேரில் தமிழ்க் கலைஞர் ஒருவருக்கும் அக்கௌரவம் கிடைத்தது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கலைஞர் நவாலியூர் நா. செல்லத்துரைக்கு 50 ஆயிரம் ரூபா பணப்பரிசும் 'முதுகலைஞர்' விருதும் வழங்கப்பட்டது. அதேபோன்று இவ்வாண்டு மார்ச் 27 இல் இடம்பெற்ற உலக நாடக தின விழாவின்போது திருகோணமலையைச்சேர்ந்த கலைஞர் சித்தி அமரசிங்கத்திற்கு அந்தக்கௌரவம் வழங்கப்பட்டது. அதே போல் நாடகத்துறையின் மேம்பாட்டிற்குச்செய்த பங்களிப்பிற்கான கௌரவ விருது திருமதி ஆர்.மணிமேகலைக்கு வழங்கப்பட்டது. இவ்வாண்டு மூன்று தமிழ்க்கலைஞர்களுக்கு அந்தக்கௌரவ விருதினை வழங்க முடிவு செய்துள்ளோம்.


இது மாத்திரமல்ல, இவ்வளவு காலமும் நடைபெற்ற பரிசளிப்பு விழாக்களில் நாடகப் போட்டிகளில் வெற்றி பெற்ற சிங்களக்கலைஞர்களுக்கு கிடைத்த பரிசுத் தொகை தமிழ்க்கலைஞர்களுக்கு கிடைப்பதில்லை. அதில் பெரும் பாகுபாடுகள் இருந்தன. அதனை தமிழ் நாடக குழுக்களில் அன்று இருந்தவர்கள் தட்டிக்கேட்கவும் இல்லை. ஆனால் இவ்வாண்டிலிருந்து அந்த 'மாற்றாந்தாய்' மனப்பான்மை இடம்பெறாது நாம் பார்த்துக்கொள்வோம். எமது சகோதர சிங்கள கலைஞர்களுக்குக்கிடைக்கின்ற வசதிகள், வாய்ப்புக்கள், உரிமைகள் எம்மவர்களுக்கு கிடைக்க நாம் ஆவன செய்துள்ளோம். கடந்த பத்து மாத காலத்தில் நான்கு தமிழ் உறுப்பினர்களால் தமிழ் நாடகத் துறையின் மேம்பாட்டிற்காக நல்ல பல நடவடிக்கைகளை எடுக்க முடிந்திருக்கின்றது. எமது இந்தப்பணிக்கு கலாசார தேசிய மரபுரிமைகள் அமைச்சர் திரு. விஜித ஹேரத், பிரதி அமைச்சர் சமந்த வித்யாரத்ன ஆகியோரும், இலங்கை கலைக்கழகம், தேசிய நாடக சபை என்பன ஒத்துழைப்புக்கள் வழங்கிச்செயற்பட்டிருக்கின்றார்கள். எவ்வித வேறுபாடுகளும் காட்டாது எம்மவர்களுக்கும் கௌரவம் வழங்கியிருக்கின்றார்கள். அவர்கள் அனைவருக்கும், மற்றும் கலாச்சார அமைச்சு, திணைக்கள உத்தியோகத்தர் களுக்கும் இந்தச்சந்தர்ப்பத்தில் தமிழ் நாடகக்கலைஞர் சார்பிலும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடுப்பு/ முதுகு வலியை தவிர்ப்போம்

முதுகு வலி அல்லது இடுப்பு வலி எம்மிடையேயுள்ள ஒரு பொதுவான பிரச்சினை. இதற்கு பரிகாரம் காணுவது ஒரு சிக்கலான பிரச்சினையாகும். நோயாளிக்கு மட்டுமல்ல மருத்துவருக்கும் தான். நாம் நேராக நிற்பதற்கும் இருப் பதற்கும் எமது முதுகெலும்பு (Spine) உதவுகின்றது. Spine என்று சொல்லும் போது அதில் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கப்பட்டுள்ள எலும்புகளும், எலும்புகளிற்கு இடையேயுள்ள முள்ளந்தண்டிடை வட்டத் தட்டுகள் (Intervertebral discs) முக்கிய பங்கு வகிக்கின்றன. அது மட்டுமல்லாமல் இவற்றை பொருத்துகின்ற சவ்வுகள், நார்கள், ஒவ்வொரு எலும்புகளையும் இணைக்கும் மூட்டுக்கள் அத்துடன் இவற்றை சரியான முறையில் அசைப்ப தற்கான தசைகள் என்பன அடங்குகின்றன. நரம்புத்தொகுதியின் முண் ணான் (Spinal Cord) மற்றும் நரம்புகள் (Spinal Nerves Roots) இங்கு முக்கிய அமைப்புகளாகும்.




இதன் அடிப்படையில் முதுகு வலி, கழுத்து வலி மற்றும் இடுப்பு வலி என்பன இந்தக்கட்டமைப்புகளின் எந்தப்பகுதியில் இருந்து தோன்றுகின்றது என கண்டு பிடிப்பது ஒரு சிக்கலான பிரச்சினை மட்டுமல்லாமல் சரியான அணுகு முறை அவசியமானதாகின்றது.

பொதுவாக இந்த வலி எதுவித காரணம் இல்லாமல் ஏற்படுவதை நாம் அவதானித்துள்ளோம். அந்த வகையான Back Pain ஐ நாம் இங்கு முக்கியமாக கருத்தில் கொள்ளுவோம். அதுமட்டுமல்லாமல் Disc Prolapse எனப்படும் நோயையும் இங்கு கருத்தில் கொள்ளலாம். ஆனால் அரிதாக ஏற்படுகின்ற Cancer மற்றும் Infection என்பனவும் Spine இல் ஏற்படலாம். அது மட்டுமல்லாமல் நோயாளியின் மனதில் ஏற்படுகின்ற முக்கியமான கேள்வியும் அதுவாகும். இவை அரிதான நோய்களாகும்.

அதிகமாக, அல்லது அசாதாரணமாக வேலைகள் செய்யும்போது தசைகள் மற்றும் மூட்டுக்களில் வலி ஏற்படலாம். இவை தசைகள் களைப்படைவதனால் (Fatique) அல்லது அவற்றில் ஏற்படும் சுழுக்கு (Strain) போன்றவற்றினால் ஏற்படுகின்றது.

சாதாரணமாக அதிகாலையில் நித்திரையை விட்டு எழும்பும்போது 'Doing nothing' - கடின வேலை எதுவும் செய்யாத நிலையில் அல்லது அதிகமான வேலையை அசாதாரணமாக செய்த பின்னர் இந்த வியாதி ஏற்படுவதை நாம் அவதானிக்கலாம். இதற்கு சரியான பரிகாரம் ஓய்வு எடுப்பதேயாகும். சாதாரணமான இந்த தசைகளின் மற்றும் மூட்டுக்களின் Fatique or strain இதன் மூலம் குணமடையும்.

ஒரு மருத்துவரின் பொறுப்பு முதுகு வலிக்கான அடிப்படைப்பிரச்சினையை கண்டறிந்து அதற்குரிய சிகிச்சையை அளிப்பதாகும். இதே வேளை ஒரு நோயாளி சில நடைமுறைகளை கடைப் பிடிப்பதன் மூலம் அநேகமான பிரச்சினைகளை தீர்க்கலாம். அடிப்படைக் காரணங்களான நோய்கள் எதுவும் இல்லாத விடத்து அப்பியாசங்கள் செய்வதன் மூலமாகவும் சில நடை முறைகளை கடைப் பிடிப்பதன் மூலமும் இவற்றை நிவர்த்தி செய்யலாம்.

செய்யக்கூடியவையும்
கூடாதவையும்
(Do's and Dont's)

1. நிற்கும் முறை

தொடர்ச்சியாக நிற்கும்போது இரண்டு கால்களையும் நேராக நீட்டி நிற்காமல் ஒரு காலை சற்று மடித்து வைத்துக்கொள்ளல்.

2. முன்நோக்கி வளையும் போது முழங்கால்களை மடிக்காது வளைவதை தவிர்க்கவும்.

இவ்வாறு வளைவதனால் SCIATIC NERVE எனப்படும் நரம்பு இழுபடுவதன் மூலம் நோ ஏற்படுகின்றது. இம்முறை இடுப்பு பகுதியில் உள்ள முதுகெலும்பின் வளைவை குறைப்பதனால் நோ ஏற்படுகின்றது.

3. பாரம் தூக்குதல்

ஏதாவது பாரமான பொருட்களை தரையில் இருந்து உயர்த்தும்போது முழங்கால்களை மடித்து முன்னால் வளைந்து உயர்த்த வேண்டும். பாரம் தூக்கி நடக்கும் போது இரு கைகளிலும் சமமான பாரத்தை தூக்கி நடப்பதன் மூலம் இடுப்பு வலியை தவிர்த்துக்கொள்ளலாம்.

4. நித்திரை செய்யும் முறை

வயிற்றுப்புறமாக (முகம் குப்புற) நித்திரை செய்வதை தவிர்க்கவும். Never sleep on your abdomen. இது முதுகு மற்றும் கழுத்து வலியை அதிகரிக்கின்றது.

5. கட்டில் மெத்தை போன்றவற்றை தெரிவு செய்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

வைத்தியநிபுணர் - Dr.சுவர்ணகுமார்
(MS(SL)FRCS(Edin))

மெத்தை நடுப்பகுதியில் பள்ளமாகாத முறையில் இருக்கவேண்டும். அதிக கடினமான மெத்தையும் முதுகு வலியை சிலருக்கு ஏற்படுத்தலாம்.

6. ஆசனத்தில் அமரும் முறை

பாதங்களை நிலத்தில் அல்லது அதற்குரிய பாத இருக்கையில் படக் கூடியவாறு அமருதல் வேண்டும். முழங்கால்கள் இடுப்பு மூட்டுக்களை விட சற்று உயரமாக இருக்க வேண்டும். வாகன ஓட்டுநர்கள் முக்கியமாக இதை கவனிக்க வேண்டும்.

Arm Chair தோள் மூட்டுக்கும் மேல்





முதுகிற்கும் உறுதுணையாக அமைகிறது. முதுகு நேராக இருக்கும்படி அமர்தல் வேண்டும். முன்னோக்கி அல்லது பின்னோக்கி வளைந்து அமர்தல் முதுகு வலியை ஏற்படுத்தும்.

7. ஒழுங்கான அப்பியாச முறைகள் மூலம் முதுகு வலியை குறைத்துக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களைப்பு தீர.. உயிர்ப்பு பெற.....



உங்கள் உடலுக்கு போதுமானளவு ஓய்வு தேவை. நித்திரையினளவு ஆளுக்கு ஆள் வேறுபடுவதுண்டு. ஆனால் களைப்புத்தீர்ந்த நிலையில் மீண்டும் உயிர்ப்பு பெற்ற உற்சாக நிலையில் விழித்தெழ வேண்டியது முக்கியமானதாகும்.


* முடிந்தளவுக்கு அறையை இருட்டாக வைத்திருக்கவும்.
* நித்திரைக்கு செல்லும்போது பிரச்சினைகளை கொண்டு செல்லக்கூடாது.
* நித்திரைக்கு போகுமுன் மெதுவானதொரு உடற்பயிற்சி உதவியானதாகும்.
* பசியிருப்பின் சூடானதும், உணர்வுகளைத் தூண்டாததுமான ஒரு பானத்தை அருந்தலாம்.

மனித உடலானது எலும்பு, தசை, கொழுப்பு என்பவற்றினால் ஆனது. உடலின் நிறையில் 45 சதவீதத்தில் 639 வெவ்வேறு வித தசைகள் உள்ளன. உங்களது தசை வலுவையும், சேதன வலுவையும் போதியளவுக்கு விருத்தி செய்து கொண்டால் மட்டுமே உயர்ந்தளவு செயற்றிறன் உள்ளவர்களாக எங்களால் இருக்க முடியும்.

நரம்புகள் தொடர்பானதும், சுரப்பிகள் தொடர்பானதுமான சில நிலைமைகள் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் ஆட்கள் உடற்பயிற்சிக்குறைவினாலும் அதிகம் உணவு உட்கொள்வதாலும் அதிக கொழுப்புள்ளவர்களாகவே உள்ளனர்.

# பயன் தரும் பழங்கள்

பொதுவாக எல்லோரும் உணவு உண்டவுடன் பழங்களை சாப்பிடுவது வழக்கம். ஆனால் இப்படி உண்பது தவறு என்று சொல்லப்படுகிறது. இதற்குக்காரணம் பழங்கள் 20 நிமிடங்களுக்குள் சமிபாடடைந்து விடுகின்றன. எனவே மாலை நேரத்தில் இவற்றை உண்பது தான் சிறந்தது என்கிறார்கள்.



உணவு உண்ட பின் பழங்களைச்சாப்பிட்டால் உணவு சமிபாடடையும் வரை (கிட்டத்தட்ட 3 மணித்தியாலங்கள்) பழங்கள் அப்படியே இருக்கும்.

இது தவிர பழங்களை கலந்தும் உண்ணக்கூடாது. பழங்களை நான்கு வகையாகப்பிரிக்கலாம்.

1) இனிப்பானவை
2) புளிப்பானவை
3) இனிப்பும், புளிப்பும் கலந்தவை
4) தர்ப்பூசணி போன்ற பழ வகைகள்

உண்ணும்போது ஒரே வகையான பழங்களைத்தான் சேர்த்து உண்ண வேண்டும். உதாரணமாக வாழைப்பழமும் அப்பிளும் (இனிப்பானவை) அன்னாசியும் தோடம்பழமும் (புளிப்பானவை) இப்படி உண்பதனால் உடலில் எளிதாக சத்துக்கள் சேரும்.

பழங்களை உணவு உண்பதற்கு 1-2 மணி நேரத்திற்கு முன்போ மூன்று மணி நேரங்களுக்கு பின்போ சாப்பிடுவதே சிறந்தது. விற்றமின்கள் உட்பட ஏனைய சத்துக்கள் நிறைந்த பழங்களை நாம் தினமும் சாப்பிடவேண்டும்.

# ஜூன் மாதத்தில் என்ன செய்யலாம்?

சகோதரிகளே உங்களுக்கு நினைவூட்டுவதற்காக 'ஜூன்' மாதத்தில் செய்ய வேண்டிய வேலைகள் சில கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

* அமைதியாக இருக்கலாம். பண்டிகைகளும், விடுமுறைகளும் முடிவடைந்திருக்கின்றன. ஏப்ரல், மே மாதங்கள் பெரும் செலவை ஏற்படுத்தியிருந்தன. இனிச்சிக்கனமாக இருங்கள்.

* மரக்கறி வகைகளின் விலைகள் அதிகரித்து விடும். சேனைப்பயிர்களின் பருவம் முடிவடைந்து விட்டது.

* வருடத்தின் இப்பகுதியில் வெள்ளைப்பூண்டின் விலை குறைந்திருக்கும்.

* வீட்டில் உள்ள உடைகளை சீர் செய்வதற்கு ஏற்ற காலம். போதிய உடைகள் கையிருப்பில் உள்ளனவா என்பதை அவதானியுங்கள்.

* இது வரை காலமும் எழுதி முடிக்காத கடிதத்தொடர்புகளை முடித்து விடலாம்.

* உலக சுற்றுச்சூழல் தினம் ஜூன் 05. எனவே வீட்டையும் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடி விளையாடு பாப்பா

குழந்தைகள் விளையாடுவது, அதில் ஒரு சந்தோஷத்தை அனுபவிப்பதனாலேயே! எனினும் விளையாடுதல் அவர்களது கல்விக்கும் அபிவிருத்திக்கும் அத்தியாவசியமானதொன்றாகும். விளையாடுவதன்மூலம் குழந்தைகளின் வளர்ச்சியும், அனுபவமும் மேம்படுவதுடன் அவர்களின் தைரியத்தையும், நம்பிக்கையையும் வளர்த்துக்கொள்ள எத்தனித்தல், காரணமறிதல், சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கும் குழந்தைகள் கற்றுக்கொள்கின்றன.

விளையாடுவதன்மூலம் மொழி வளம், சிந்தித்தல், ஒழுங்கமைத்தல், திட்டமிடல், முடிவெடுத்தல் போன்ற திறமைகள் வளர்ச்சியுறும். ஊனமுற்ற குழந்தை எனின் ஊக்கமும், விளையாட்டும் அதிக முக்கியமானது. ஆண், பெண் குழந்தை என வேறுபாடின்றி விளையாடவும், குடும்ப அங்கத்தவர்கள் அனைவருடனும் உறவாடுவதற்கு ஒன்றாகவே சந்தர்ப்பம் இருத்தல் வேண்டும். தந்தையுடன் விளையாடுதல் மற்றும் பழகுதல் மூலம் தந்தைக்கும் குழந்தைகளுக்குமிடையில் பிணைப்பு வளர உதவும்.

விளையாடும் விதம், விளையாட வேண்டிய முறை என்பவற்றில் வற்புறுத்துவதை தவிர்த்து குழந்தைகளுக்கு விளக்கமான அறிவுரையுடன் சிற்சில சிறிய செயல்களை செய்வதற்கு இடமளித்தல், விளையாடுவதற்கு பொருட்களை வழங்குதல், புதிய செயல்பாடுகளை சிந்தித்தல், போன்றவை மூலம் குழந்தைகள் கற்றுக்கொள்வதற்கு, சந்தர்ப்பம் அளிப்பதற்கு குடும்ப அங்கத்தவர்கள் குழந்தைகளை நன்றாக அறிந்து கொண்டு அவர்களது எண்ணங்களை கேட்டறிதல் வேண்டும்.



உதவியின்றி மிகச்சிறிய குழந்தை ஏதாவது செய்வதற்கு முயற்சிக்கும்போது குழந்தையை பராமரிப்பவர் பொறுமையுடன் இருத்தல் வேண்டும். ஆபத்துக்களில் இருந்து பாதுகாப்பு உள்ளது என்ற உறுதியிருக்கும் வரை புதிதாக கடின காரியங்களில் ஈடுபட முயற்சித்தலானது தமது விருத்தியை வெளிப்படுத்துவதற்கான தகுந்த நடவடிக்கையாகும்.

குழந்தைகள் அடிக்கடி தமது திறமைகளை மாற்றிக்கொள்ளும், வளர்த்துக்கொள்ளும். குழந்தையின் பாதுகாப்பாளர்கள் இந்த மாற்றங்களை கண்டறிந்து, குழந்தைகள் மிக வேகமாக வளர்ச்சியடைய உதவுதல் வேண்டும்.

# உயிரை அச்சுறுத்தும் புற்றுநோய்

மானிட உடல் கலங்களினால் ஆக்கப்பட்டது. தேவையான சமயத்தில், தேவையான அளவிலே சுயமாக வளர்ச்சியடைவது கலங்களின் இயல்பாகும். ஆனால் இனங்கண்ட, அல்லது இனங்காணப்படாத சில காரணங்களினால் கலங்களில் உண்டாகும் மாற்றங்கள் காரணமாக யாதேனும் ஓரிடத்தில் முறையற்ற அல்லது கட்டுப்பாடின்றி கலத்தில் வளர்ச்சியுண்டாகலாம். அவ்வாறு கட்டுப்பாடின்றி கலங்கள் வளர்ச்சியடைவதனால் ஏற்படும் நிலை Tumours என அழைக்கப்படுகின்றது. அவ்வாறு ஏற்படும் நிலை தொடர்ச்சியாக வளர்ச்சியடையுமாயின் அண்மையிலுள்ள கலங்களுக்கும் உறுப்புகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டு சிலவேளை ஏனைய உறுப்புகளுக்கும் பரவக்கூடிய நிலை உண்டாகலாம். அவ்வாறான நிலையே புற்றுநோய் என அழைக்கப்படுகின்றது.

இன்று முன்னேற்றமடைந்த மற்றும் முன்னேற்றமடைந்து வரும் நாடுகளி லுள்ள இலட்சக்கணக்கான மக்களின் உயிருக்கு புற்றுநோய் அச்சுறுத்தலாக உள்ளது. சாதாரணமாக உலக சனத்தொகையில் 9 மில்லியன் இதற்கு ஆளானதுடன், அதில் 5 மில்லியனுக்கும் அதிகமானோர் இறந்து விடுகின்றனர்.

மார்புப்புற்றுநோயும். கருப்பைப்பகுதி புற்றுநோயுமே பெண்களை அதிகமாகத் தாக்குகின்றது.

### மார்புப்புற்றுநோய்

30 வயதைக்கடந்தவர்கள், பிள்ளைப் பேறற்றவர்கள், தாமதமாகிக்குழந்தை பெறுவோர், குறைந்த வயதில் பருவமடைந்த பெண்கள், மாதவிடாய் பிரச்சினைகள் உள்ள பெண்கள், குடும்ப அங்கத்தவர்கள் யாருக்காவது மார்புப்புற்றுநோய் ஏற்பட்டிருந்தால்- இவர்களுக்கு மார்புப்புற்று நோய் ஏற்படும் அபாயம் அதிகமுண்டு.

மார்புப்புற்றுநோய் ஏற்படும் அதிக காரணங்களுள், உடலினுள் சுரக்கும் ஹோர்மோன்களின் செயற்பாட்டிற்கும் தொடர்புள்ளதென நம்பப்படுகின்றது. வயது வந்த பெண்கள் தமது மார்பில் உண்டாகும் மாற்றங்கள் பற்றி அவதானத்துடன் இருப்பதன் மூலம் ஆரம்ப கட்டத்திலேயே இதனை இனங்காண முடியும். அவ்வாறு இனங்காணப்பட்டால் இலகுவாக குணப்படுத்திவிட முடியும்.

மார்புப்பபுற்றுநோயை ஆரம்ப கட்டத்திலேயே இனங்காண சுயமான பரிசோதனையே தற்போதுள்ள முக்கிய வழியாகும். இதனைப்பற்றிய அடிப்படை அறிவை உடைய எப்பெண்ணும் இப்பரிசோதனையை இலகுவாகச்செய்து கொள்ளமுடியும்.

புற்றுநோய் குணப்படுத்த முடியாத, மரணத்தை ஏற்படுத்தும் நோயாகவே பொதுவாக எண்ணப்படுகின்றது. ஆனால் புற்றுநோய் ஏற்படுவதற்கான காரணங்களை உரியவாறு புரிந்து ஆரம்ப காலத்திலேயே இனங்காணப்பட்டால் அநேகமாக இதனைக் கட்டுப்படுத்த முடியும். தற்போதுள்ள தொழில்நுட்ப மற்றும் வைத்திய வசதிகளுக்கேற்ப, ஆரம்பகட்டத்திலே இனங்காணும் புற்றுநோயை, அநேகமாக குணப்படுத்த முடியும். மனிதருக்கு ஏற்படும் புற்றுநோய்களுள் 1/3 பகுதியை கட்டுப்படுத்த முடியும்என உலக சுகாதார அமைப்பின் நிபுணர்கள் நம்புகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத பலன்கள்

சோதிட ஆய்வாளர் த.அழகேசன்- யாழ்ப்பாணம்

01.05.2005 - 31.05.2005

## மேடம்

அஸ்வினி, பரணி, கார்த்திகை-1

கல்வி முன்னேற்றம்,பூமியால் லாபம், வீடு வாங்குதல், குடும்பத்தில் சுப காரியம், தேர்வுகளில் வெற்றி, தன லாபம், புதிய ஜீவன் தோன்றுதல், அரசியல் செல்வாக்கு, திருமண சுபகாரியம், நண்பர் உதவி, நோய் ஏற்படல், வழக்கு வெற்றி, புத்தக வெளியீடு, சகோதர உதவி, பண நெருக்கடி, கண்வலி, பிறரால் ஏமாற்றப்படல், வஞ்சனை, கெட்ட சிநேகம், திருட்டு, ஏமாற்றம், கடன் தொல்லை, பயம், வேலைப்பழு, இன சன விரோதம். வியாழ பகவான் வக்கிரம். திடீர் யோகம் ஏற்படலாம். கூடாத நாட்கள்: 23,24,25

## இடபம்

கார்த்திகை - 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் - 1,2

வீண் செலவு, தொழில் கஷ்டம், அலைச்சல், மனவிரக்தி, பதவி பறிபோதல், குடும்பப்பிரிவு, புதிய கடன் உண்டாகுதல், திருடர் பயம், நண்பர் விரோதம், வெளியூர் பிரயாணம் ஏற்படும், யாத்திரை, நண்பர் பகை, பொருட்சேதம், எதிர்பாராத பொருள் வரவு, திருமணப்பேச்சு, படுக்கை சுகம், வீடு, நிலம் வாங்குதல், ஆபரணம், நகை சேர்க்கை, புத்திரர் பிறப்பு, திருமணம் கை கூடும், புதிய இடமாற்றம், குடிப்பழக்கம் ஏற்படல், சகோதரிகளால் நன்மை, தாய்மாருக்கு கண்டம். 7 1/2 சனி கடைக்கூறு நடைபெறுவதால் சனி பகவானை வணங்கவும். கூடாத நாட்கள்: 26,27

## மிதுனம்

மிருகசீரிடம் - 3,4, திருவாதிரை, புநர்பூசம் - 1,2,3

வெற்றிகள், உயர் பதவி, நல்ல உடல் நலம், திரவிய லாபம், திருமண சுப காரியம், அரசாங்க நன்மை, வழக்கு வெற்றி, திடீர் அதிஷ்டம், நோய் தீரும், கடன் தீரும், வாகன வசதி, பிரயாண வெற்றி, அன்னிய தேச வாசம், வாகனம் வாங்குதல், கல்வி முன்னேற்றம், திருமணப்பேச்சு, ஆடம்பரச் செலவு, ஆடை, ஆபரண நட்டம், உறவினர் பகை, புதிய வியாபாரம், வீண் பழி கேட்டல், மாத பிற்பகுதியில் அலைச்சல், புதிய கடன் ஏற்படல், திருடர் பயம், நண்பர் விரோதம், தன விரயம், வெளியூர் பிரயாணம் ஆகியன ஏற்படலாம். 7 1/2 சனி நடுக்கூறு நடைபெறுவதால் சனி பக வானை வணங்கவும். கூடாத நாட்கள்: 1,2,28,29,30

## கடகம்

புநர்பூசம் - 4, பூசம், ஆயிலியம்

எடுத்த காரியம் முடியும், வழக்கு வெற்றி, தொழில் முன்னேற்றம், காரிய சாதனை, நண்பர் உதவி, உத்தியோக உயர்வு, கல்வி முன்னேற்றம், சகோதரர் உதவி, திருமண சுபகாரியம், திடீர் அதிஷ்டம், நோய் தீரும், கடன் தீரும், பிரயாண வெற்றி, வாகன வசதி, சிறு விபத்து ஏற்படலாம், குடும்ப உறவு கசப்பு, விஷ பயம், கால் இடறி விழல், அன்னிய தேச வாசம், ஸ்த்ரீ போகம், புதிய வீடு வாங்குதல், காதல் கைகூடும், சேமிப்பு உயர்வு, ஆபரணச்சேர்க்கை, ஆலய தரிசனம், மறுதாரம் அமைதல், உறவினர் பகை, குடும்ப கலகம். வியாழ பகவான் வக்கிரம் திடீர் யோகம் ஏற்படலாம். கூடாத நாட்கள்: 2,3,30,31

## சிம்மம்

மகம், பூரம், உத்தரம்-1

தாழ்மை நிலை, இடமாற்றம், உத்தி யோக மாற்றம், சண்டை சச்சரவு, தாய், தந்தைக்கு நோய், புதிய நண்பர் சேர்க்கை, வியாபார நஷ்டம், எதிர்பாராத உதவி, மனைவியுடன் கலகம், வயிறு, கண் ஆகியவற்றில் நோய் ஏற்படல், எதிரியால் பயம், புத்திரர் விரோதம், திருமணப்பேச்சு குழப்பம், சொத்து, பாகப்பிரிவினை, பங்காளி பிளவு, கல்வித்தடை, பயணத்தில் திருட்டு பயம், ஸ்த்ரீ மூலம் கலகம், குழந்தை கிடைத்தல், மாத பிற்பகுதியில் எடுத்த காரியம் முடியும், வழக்கு வெற்றி, காரிய சாதனை, பொருள் வரவு, வேலை கிடைத்தல், கல்வி முன்னேற்றம், வஸ்திர லாபம் ஆகியன ஏற்படலாம். கூடாத நாட்கள்: 4,5,6

## கன்னி

உத்தரம் - 2,3,4, அத்தம், சித்திரை-1,2

கல்வி முன்னேற்றம், திருமணப் பேச்சு, ஸ்த்ரீ சுகம், தர்மம் செய் தல், புத்திக் குறைவு, கீர்த்தி குறைவு, காரியத் தடை, இடமாற்றம், பதவியில் பிரச்சினை, உயிர் ஆபத்து, கண்டம், யாத்திரை செல்லுதல், ஆடை, ஆபரணச்சேர்க்கை, புத்தி தெளிவு, தூர தேச பிரயாணம், விருந்துபசாரம், சத்துரு ஜெயம், எதிர்பாராத உதவி, வியாபார நஷ்டம், புதிய நண்பர் சேர்க்கை, அரசாங்க பயம், கல கம், எதிர்பாராத விபத்துக்கள், பணத்தட்டுப்பாடு, பொருள் நட்டம், தந்தைக்கு நோய், குடும்ப பெண்களுடன் மனஸ்தாபம், உறவினர் சண்டை, வியாழஞ், கேது சேர்க்கை திடீர் தனயோகம் ஏற்படலாம். கூடாத நாட்கள்: 7,8,9

## துலாம்

சித்திரை-3,4, சுவாதி, விசாகம் -1,2,3

திருமண சுபகாரியம், நண்பர் உதவி, திடீர்த்திருமணம், யாத்திரை செல்லு தல், பணவிரயம், விபத்து, கால் இடறி விழல், தூரதேச பிரயாணச்செலவு, காதல் தடை, மனை வியைப்பிரிந்து இருத்தல், நம்பிக்கை துரோகம், குடும்ப உறவு பாதிப்பு, பொருளாதார நெருக்கடி, சகோதரர்களால் செலவு, உறவினர் கலகம், எதிரியுடன் கைகலப்பு, பொருட்கள் திருட்டு போதல், உடலில் காயம் ஏற்படல், பெண்பிள் ளைக்கு நோய், திருடர் பயம், பொருள் நட்டம், பணத்தட்டுப்பாடு, மனைவியுடன் மனஸ்தாபம், அலைச்சல், தொழில் நஷ்டம், மனைவிக்கு நோய், தந்தைக்கு தீங்கு, தாயார் பகை. கூடாத நாட்கள்: 9,10,11

## விருச்சிகம்

விசாகம் - 4, அனுஷம், கேட்டை

நோய் குணமாகும், விரோதிகள் அழிவு, காரியம் கைகூடும், தன லாபம், நண்பர் உதவி, தூரதேச பிரயாணம், தொழில் ஆதாயம், வழக்கு வெற்றி, சந்தோஷம், பதவி உயர்வு, பெண்களால் பொருள் வரவு, உறவினர் உதவி, ஆட்ட விளையாட்டுக் களில் வெற்றி, பங்கு வியாபார முன்னேற்றம், வீட்டில் சுப காரியம், குடும்ப உறவு கனிவு, திருமணப்பலன், புத்திரப்பேறு ஏற்படல், அசையாத சொத்து வாங் குதல், மாத பிற்பகுதியில் அலைச்சல், விஷக்கடி பயம், காயப்படுதல், தொழில் கஷ்டம், மனைவியுடன் மனஸ்தாபம், வயிற்றில் ரோகம், துஷ்டர் சேர்க்கை, பெற்றோர் உடல் நிலை பாதிப்பு, அட்டமத்துச்சனி நடப்பதால் சனி பகவானை வணங்கவும். கூடாத நாட்கள்: 11,12,13

## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் -1

நோய், சோகம், விரோதியினால் பயம், அதிக பணச்செலவுகள், எதிரியால் தொல்லை, அரசாங்கத் தால் தொல்லை, மனக்கவலை, பணத்தட்டுப் பாடு, பிரயாண நட்டம், கருச்சிதைவு, மானநஷ் டம், வயிற்றில் ரோகம், உறவினர் பிரிவு, வேலை இடத்தில் தகராறு, வீடு, நிலம் வாங்குதல், இளைய சகோதரர்க்கு சுபகாரியம், தொழிலாளர் மூலம் கஷ்டம், பிறமாதர் சேர்க்கை, புதிய நண்பர் சேர்க்கை, மனநோய்,மனைவி,மக்கள் பிரிவு, வேலை இடமாற்றம், வீடு மாற்றம், சண்டை, சச்சரவு, மாத பிற்பகுதியில் நோய் குணமாகும். தூரதேச பிரயாணம், வழக்கு வெற்றி, சந்தோஷம் ஆகியன ஏற்படலாம். கூடாத நாட்கள்: 14,15,16

## மகரம்

உத்தராடம்- 2,3,4 திருவோணம், அவிட்டம்-1,2

ஜுரம் (காய்ச்சல்), வழக்கு, சண்டை, மனக்கவலை, முயற்சி வீண் ஆகு தல், மனைவி விரோதம், தூரதேசப் பிரயாணம், மார்பு வலி ஏற்படல், காரிய தடங்கல், வாகனச் செலவு, கர்ப்பச்சிதைவு, எதிரியால் தொல்லை, வயிற்றில் ரோகம், உறவினர் பிரிவு, திருடர் பயம், முன்கோபம்,வெட்டுக்காயம் ஏற்படல், மரண பயம், அகால போசனம், பந்தயங்களில் தோல்வி, பதவி உயர்வு, குழந்தை கிடைத்தல் அல்லது உருவாகுதல், புத்திரரால் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், தடைப்பட்ட திருமணம் கைகூடுதல், கடன் விலகும், மாத பிற்பகுதியில் எதிரி வீழ்ச்சி, போட்டிகளில் வெற்றி. கூடாத நாட்கள்: 17,18,19

## கும்பம்

அவிட்டம்-3,4, சதயம், பூரட்டாதி -1,2,3

பண வரவு, நோய் தீருதல், வழி மாறுதல், தொழில் லாபம், ஆரோக் கியம், விரோதிகள் அழிவு, புதிய பதவி, எதிர் பாராத தன லாபம், ஆரோக்கியம், சத்துரு ஜெயம், ஆபரண லாபம், உறவினர் சிநேகம், காரிய சித்தி, இடமாற்றம், உடம்பில் அடிபடுதல், ஆயுத பயம், குடும்ப கலகம், நெருப்பினால் பயம், சிறு சிறு காயம் ஏற்படல், கல்வி தடை, திருமணம் ஏற்படல், குழந்தைப்பேறு, பெரியோர் சந்திப்பு, வெளியூர் செல்லல், புதிய வாகனம் வாங்குதல், ஆயுத பீடை, நண்பர் விரோதம், வியாபார நட்டம், பிள் ளையை பிரிந்து இருத்தல், கூடாத நாட்கள்: 19,20.21

## மீனம்

பூரட்டாதி - 4, உத்தரட்டாதி, ரேவதி

வீண் கஷ்டங்கள், பண நெருக் கடி, கண் வலி, கெட்ட சிநேகம், திருட்டு ஏமாற்றம், எதிர்பாராத செலவு, கடன் தொல்லை, வேலைப்பழு, உஷ்ண ரோகம், அந்நிய தேச வாசம், பாதக்காலில் நோ, குடும்ப உறவு பாதிப்பு, தீயவர் நட்பு, தீய பெண்கள் நட்பு. கல்வி பாதிப்பு, புதிய பதவி, கூட்டு வியாபாரம், திருமணப்பேச்சு, அன்னிய பெண்களால் நன்மை, நண்பர் வருகை, குழந்தை பிறப்பு, உல்லாச வாழ்க்கை, வாகன விபத்து, தாயாருக்கு மரண கண்டம், மாத பிற்பகுதியில் பண வரவு, நோய் தீருதல், தொழில் லாபம், எதிர்பாராத பண லாபம், உறவினர் சிநேகம், காரிய சித்தி, இடமாற்றம் என்பன ஏற்படலாம். கூடாத நாட்கள், 21,22,23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொடர்பு சாதனங்களால் வளரும் ஒற்றுமை

## மே 17 உலக தொடர்பு தினம்

இன்றைய உலகில் ஒரு சமுதாயம் வளர அடிப்படைத்தேவையாக கருதப்படுவது தொடர்பு ஆகும். அறிவியல் வளர்ச்சியின் காரணமாக இன்று தொடர்புத்துறையில் பலவேறு கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. தகவல் தொடர்பு சாத னங்கள் இன்று பண்பாட்டையும் நாகரிகத் தையும் உலக நாடுகளை ஒரு கிராமமாக மாற்றக்கூடியதாக இருக்கின்றன. அத்துடன் மிகப்பெரிய தேவையாகவும் உள்ளது. அரசின் கட்டுப்பாட்டிலுள்ள வானொலி நிலையங்கள் அரசின் சாதனைகளை விளக்குவதற்கும், கல்விப்பணிக்கும் அதிகமாகப் பயன்படுத்தப் படுகின்றன. வானொலி நேயர்களை பெருவாரி யாக கவர்ந்துள்ளது. அது மக்களின் மனதில் பெரும் மாற்றத்தை உண்டு பண்ணியும் உள்ளது.

தொலைக்காட்சி, திரைப்படங்களும் அதிக தகவல்களை பொது மக்களுக்கு வழங்கு கின்றன. ஊடகங்களும் அதிக தகவல்களைத் தருகின்றது. உலகின் முதன் முதலாக பத்திரிகை தொடர்பு சாதனமாக 1605 இல் ஆஸ்திரியாவில் வெளியானது. 'கிளார்க்' எனும் ஆங்கில எழுத்தாளன் செயற்கைக் கோள்களை தொடர்பிற்குப்பயன்படுத்தலாம் என்ற கருத்தை உலகிற்கு வழங்கினார். 1958 இல் முதல் செய்தி ஒலிபரப்பும் செயற்கைக்கோள் உருவாகியது. செயற்கைக்கோள்கள் வழியாக உலகின் பல பகுதிக ளுக்கும் வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி போன்ற இலத்திரனியல் தொடர்புகள் அனுப்பப்படுகின்றன.

அன்றைய அமெரிக்க குடியரசுத்தலைவர் ஐசனோவரின் கிறிஸ்து மத வாழ்த்துச்செய்தியே செயற்கைக்கோள்களின் மூலமாக ஒலிபரப்பப்பட்ட முதல் செய்தியாகும். உலக நாடுகளிடையே விரை வான தகவல் தொடர்புப்பரிமாற்றம் நடைபெற 1962 இல் பன்னாட்டுச்செய்தித்தொடர்பு அமைப்பு உரு வாக்கப்பட்டது.

மனிதன் தனது தேவைகளை நிறைவு செய்ய பல்வேறு கருவிகளைக் காலத்துக்கு காலம் கண்டு பிடித்தான். அப்புதிய கண்டு பிடிப்புக்களால் உலகம் சுருங்கி விட்டது. எதிர் காலத்தில் மனிதனின் தேவை களை இயந்திர மனிதர்களே செய்து விடுவார்கள் போல் தோன்றுகின்றது.

நாகரிகம் வளர கருவிகள் பல தோற்றம் பெற்றி ருக்கின்றன. எல்லாவற்றையும் விட கம்பியூட்டர் வித்தியாசமானது. தனித்தன்மை வாய்ந்தது. இன்று இன்ரர்நெற் கண்டு பிடிக்கப்பட்ட வுடன் நினைத்ததை நினைத்தபடி எந்த நேரத் திலும் எந்தச்சூழ்நிலையிலும் உடனுக்குடன் வெளிப்படுத்த, தகவல்களைப்பரி மாற்றம் செய்து கொள்ள கம்பியூட்டர் வழி வகை செய்து புரட்சி செய்து கொண்டிருக்கின்றது. மேலும் இன்று பெருவாரியான மக்களிடையே குறுகிய நேரத் தில் அதிவேகமாக தகவல்களை பரிமாறிக்கொள்ள முடிவதால் இன்ரர்நெற் பிரபல்ய மடைந்ததற்கு முக் கிய காரணமாக அமைகிறது.

உலக விஷயங்கள் கம்பியூட்டர் திரை மூலம் கண்டு கொள்ளப்படுகின்றன. இதனால் அறிவியல் கம்பியூட்டர்கள் தோன்றி விட்டன. வானொலி, தொலைக்காட்சி, செய்திகளை ஒலிபரப்பும்போது மட் டும் பார்வையிட முடியும். ஆனால், இன்ரர்நெற் மூலம் தேவையான போது தகவல்களை எடுத்துப்பார்வையிட முடிகிறது. மக்கள் தங்களது கருத்துக்களை செய்திகளை இன்ரர்நெட்டில் பதிவாக்கி வைத் திருப்பதால் ஒரு கம்பியூட்டரிலிருந்து மற்றொரு கம்பியூட்டருக்கு தகவல் எளிதில் பரிமாற்றப் படுகின்றன.தகவல் தொடர்பு மூலமாக மனிதத் தொடர்புகள் நிறுவப்பட்டு அதனால் பல விடயங்கள் வளர்ச்சியடைந்துள்ளன வளர்ச்சியடைகின்றன. மனிதனின் அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு நடை முறையிலும் கம்பியூட்டரின் ஆதிக்கம் தவிர்க்க முடியாததாயிருக்கிறது.

தகவல் தொடர்பு சாதனங்களுக்கு பொறுப்பு டைமை, சுதந்திரம், தனித்துவம், பண்பாடு, துல் லியம், நடுநிலைமை, நேர்மை போன்ற நெறி முறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

தகவல் தொடர்பில் அடைந்த சாத னைகள் ஏராளம். மலைகளும், கடல்களும் பிரிக்கும் மனித இனத்தை தகவல் தொடர்பு கள் இணைக்கின்றன. வளர்ந்து வரும் அறி வியல் வளர்ச்சி சமுதாய மேம்பாட்டிற்கும் உலக ஒற்றுமைக்கும் ஆற்றி வரும் சேவை மகத்தானது. இடைவிடா முயற்சிகளால் தொடர் நிகழ்ச்சிகளில் செய்திகள் வையத் தையும் வானத்தையும் இணைக்கிறது. அலை கடலுக்கு அப்பால் நிகழும் அழிவுகளை, கடல் அனர்த்தங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள உதவுகின்றன. செய்திகளால் உலகம் ஒன்றாதலைக்கண்டு உவகை கொள்வோம்.

*-கலைவாணி சுப்பிரமணிய சர்மா.*

# செஞ்சிலுவைச்சங்கத்தின் தோற்றமும் அதன் கொள்கைகளும்

இவ்வருடம் மே மாதம் 8 ஆம் திகதி உலக செஞ்சிலுவைதினமாக உலகமெங்கும் கொண் டாடப்படுகின்றது. உலகின் 181 நாடுகளைக்கொண்ட மிகப்பரந்த மனிதாபிமான வலைப்பின்னலைக்கொண்ட ஒரு இயக்கமே செஞ்சிலவைச்சங்கமாகும். இச்சங்கத்தின் முக்கிய நோக்கம் உலகில் எந்த மூலையிலாவது மனித குலத்திற்கு ஏற்படும் துன்பங்கள் துயரங்களைக்குறைப்பதேயாகும்.

இச்சங்கத்தின் இலச்சினை வெள்ளைப்பின்ன ணியில் சிவப்புச்சிலுவையினைக் கொண்டதாகும். இயற்கை மற்றும் மனித இயற்கை அழிவுகளினால் பாதிப்புறுவோரின் நலன்களை மனிதாபிமான அடிப படையில் சாதி, சமய,வர்க்க வேறுபாடுகளின்றியும், இன, மொழிப்பாகுபாடின்றியும் பணி புரிவதே செஞ்சிலுவை செம்பிறைச்சங்கங்களின் குறிக்கோளாகும்.

1859 ஆம் ஆண்டில் சுவிஸ் வர்த்தகர் ஹென்றி டுனாற் என்பவர் பிரான்ஸ், ஆஸ்திரியப்படைகளின் கோர யுத்தத்தைக்கண்டு வேதனையும் திகிலும் அடைந்தார். இவ்விரு நாடுகளினதும் உயிரிழந்த வீரர்களையும் உயிருக்குப்போராடிக் கொண்டி ருந்தவர்களையும் சுவிஸ் வர்த்தகரான ஹென்றி டுனாற் கண்ணுற்றார். வர்த்தக விடயமாக பிரான்ஸ் சக்கரவர்த்தி மூன்றாம் நெப்போலியனைக்காண வந்த அவர் தனது வர்த்தக விடயத்தை மறந்து, அங்கு ஒரு நகரின் மத்தியிலுள்ள ஆலயம் ஒன்றை தற்காலிக வைத்தியசாலையாக்கி உயிருக்குப போராடிக்கொண்டிருந்த போர் வீரர்களுக்கு வைத்திய உதவிகளைச்செய்வதற்கு ஏற்பாடுகளைச்செய்தார். ஓய்வொழிவின்றித்தனது பணிகளைச்செய்து காய மடைந்த வீரர்களின் குடும்பத்தினருக்குச் செய்தி களையும் அனுப்பினார்.

பெண்களும் மனஞ்சலிக்காமல் தாதிமாராக அவருடன் உழைத்தனர். அவர் தனது அனுபவங்களை நூலாக வெளியிட்டார். அந்தப்புத்தகத்தில் யுத்தத்தில் காயமடைவோரைக்கவனிக்க ஒவ்வொரு நாட்டிலும் தொண்டர் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும், இந்த முதலுதவி தொண்டர்களுக்கு பாதுகாப்பளிக்க நாடுகள் இணங்க வேண்டும் என்னும் இரு யோசனைகளை தெரிவித்தார்.

1862 ஆம் ஆண்டு இப்புத்தகம் வெளியிடப் பட்டதும் பிரபலமாகியது. 1863 ம் ஆண்டு டுனாட்டும் வேறு நான்கு ஜெனீவா பிரஜைகளும் சர்வதேச உதவிக்கு குழுவை அமைத்தனர். இதுவே பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் ஆனது.

1864 ஆம் ஆண்டு இராஜதந்திரிகள் கூடி யுத்த களத்தில் காயமுறும் வீரர்களின் நலன்பேண முதலாவது ஜெனீவா சாசனத்தை ஏற்றனர். இன்று நான்கு ஜெனீவா சாசனங்கள் உள்ளன. அவற்றால் 4 கொள்கைகள் பேணப்படுகின்றன.

i களத்தில் காயமுற்ற அல்லது சுகவீனமுற்ற போர் வீரர்கள்
ii கடலில் காயமுற்ற சுகவீனமுற்ற அல்லது தத்தளிக்கும் வீரர்கள்
iii போர்க்கைதிகள்
iv ஆயுதப்போரில் சிக்கிய மக்கள்

என்பனவே அவைகளாகும். சர்வதேச செஞ்சி லுவைச்சங்கம் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளது. இன்று போரில் பாதிக்கப்படுவோருக்கு உதவுவதே இன்றும் முக்கிய பணியாகியுள்ளது.

அத்துடன் குடி மக்களுக்கு நிவாரணமும் மருத்துவ உதவியும் அளித்தலையும், அரசியல் மற்றும் யுத்தக்கைதிகளைச் சந்தித்தலையும் குடும்பத்தினர் தொடர்பையும் அவர்களை மீள இணைத்தலையும் முக்கிய நோக்க மாகக் கொண்டுள்ளனர். மேலும் செஞ்சிலுவை, செம் பிறைச்சங்கங்களின் கோட்பாடுகளையும் ஜெனீவா சாசன விதிகளையும் மக்களுக்கு புகட்டுதலையும் கடமையாகவும் நோக்கமாகவும் கொண்டுள்ளனர்.

மேலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக் களுக்கு- செஞ்சிலுவைச்சங்கங்கள் உதவி செய்கின்றன. மேலும் கடல் கோளினால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு 15,000 வீடுகளை அர சாங்கத்துடன் இணைந்து மீளவும் கட்டுவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. கடல் அலை களால் பாதிக்கப்பட்ட 32 அரச ஆஸ்பத்திரிகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சர்வதேச மனிதாபிமானச்சங்கம் என்றும் நிலைத்து நிற்க அரசும் கொடையாளிகளும் செய் யும் பணி போற்றத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ENGLISH LESSON

**(ENGLISH IS ESSENTIAL FOR KNOWLEDGE EDUCATION)**

கல்விக்கும் அறிவைப்பெறுவதற்கும் ஆங்கிலம் முக்கிய தேவையான மொழியாகும். நம் தாய் மொழி தமிழ், நம் உயிராகும். நாம் பிறந்து வளர்ந்த நாட்டில், தமிழ் பேசுவதும், தமிழை அரசாங்க மொழியாக்குவதும் நம் பிறப்புரிமையாகும். ஆனால் உயிர் வாழ் வதற்கு உடல் முக்கியமாக இருப்பதுபோல் தமிழர்கள் வாழ்வதற்கும், பொருளாதாரத்தை தேடுவதற்கும் கல்வி அறிவு முக்கியம்.

இதை பிறமொழியானாலும், சர்வதேச மொழியான ஆங்கிலத்தை கற்பதால் கல்வி, அறிவில் முதன்மையான மொழியாக வருமே யொழிய நம் மொழியை இழிவுபடுத்துவது அல்ல. ஆனால் தமிழ் பேசும் தமிழருக்கு அவர்கள் அடையாளம் மென்மேலும் சிறந்து விளங்க வழி செய்யும் தூண்டுகோலாக இருக்கிறது. அத்துடன் பலவந்தமாக நம்மில் திணிக்கப்படும் மொழியுமல்ல.

Tamil is our life. It is our birth right to speak Tamil and make Tamil as our official language as we have born and lived in our Tamil land for centuries.But our body is important for our life to exist. Similarly for the Tamils to live, to seek economy, education and knowledge are important. To acheive this, though English is a foreign language, it is an international language which is not forced on us,but learning it does not mean that we are making Tamil a secondary language. It will help us to identify ourselves as educated.

கீழே பாடங்களையும் அதன் ஆங்கில மொழி பெயர்ப்பையும் தருகிறேன்.

கணக்கீடு - Accounts, பொருளியல் - Economics, இதை ஆங் கிலத்திலும் படிப்பதால் Management Accountant, Bank Accountant போன்ற பதவிகளை வகிக்கலாம். G.C.E (O/L), G.C.E (A/L) படிப்பவர்களுக்கு உகந்தது.

வரவு - Debit, செலவு -Credit, பரீட்சை மீதி -Trial Balance, வியாபாரக்கணக்கு - Trading Account, கொள்வனவு - Purchase, விற்பனை - Sales, மூலதனம் - Capital, கடன்பட்டோர் - Debtors, கடன் கொடுக்குமதியாளர் - Creditors, லாப நட்டக்கணக்கு -Profit &Loss Account, ஆரம்ப இருப்பு - Opening stock, இறுதி இருப்பு- Closing stock, பொறுப்புகள்-Liabilities, சொத்துகள்: Assets, மொத்த இலாபம்- Gross profit, தேறிய இலாபம்- Net Profit, தொங்கல் கணக்கு- Suspense Account, ஐந்தொகை- Balance Sheet, கூட்டுதல்- Add, கூட்டல் -Addition, கழி -deduct, கழித்தல் -deduction, பெருக்கு -Multiply- பெருக்கல் - Multiplication, பிரி - Devide, பிரித்தல் - Devision, கேத்திரகணிதம் - Geometry, அட்சர கணிதம் - Allgebra.

### Medical Science - மருத்துவ விஞ்ஞானம்.

Hygiene & Physiology - சுகாதாரமும் சரீர சாஸ்திரமும் உணவு -Food, சுகமளிக்கும் உணவும் தீங்கு விளைவிக்கும் உணவும் -Foods that heal and foods that harm, சக்கரை வியாதி- Diabetes- தடுமல், சுவாசப்பை அடைத்தல் - Bronchitis, மன அழுத்தம் - Depression, தேன் - Honey, வேர், இலை, குழை - Herbs, தலை - Head, மண்டை ஓடு - Skull, கண்- eye, மூக்கு - Nose, சொக்கு - Cheek, நெற்றி - Fore Head, வாய்- Mouth, நாடி - Chin, காது - Ear, கண்ணின் கரும்பகுதி, Pupil, நாக்கு -Toung, தொண்டை - Throat, முள்ளந்தண்டு - Vertebral colomn, கழுத்து - Neck, மூளை-Brain, பற்கள் - Teeth, பல் -Tooth, காதின் வெளிப்புறச்சவ்வு - Lobule, புரதச்சத்து- Protien, சுவாசப்பை அல்லது நுரையீரல்- Lungs, - Oxygen- பிராண வாயு, கரியமில வாயு - Carbon Dioxide, சிரச நாடி - Aota, பெருநாடி - Veins, இதயம் - Heart, வலது இதய அறை - Ventrice, வலது சோணை- Auricle, கீழ் பெருநாளம் - Pulminary Vein, சிறுநீரகம் -Kidney, ஈரல் -Liver, கற்பப்பை -Womb, நரம்பு -Nerve(s), விற்றமின் (போசாக்கு சத்து) - Vitamin, கற்பை - Appendix, குடல் - Intestine, விலா எலும்பு - Ribs - புருவம். Lashes, கண் இமை - Eyelids, பிள்ளைப்பேறு வைத்தியர் - Gynocologist, நரம்பு வைத்தியர் -Neurologist,

**Continued......**


**K.W.Selvaraja, Mordan, London**

## Soft drinks after meal?

Some people like to take cold soft drinks after each meal, guess what's the impact? Our body has an optimum temperature of 37 degrees for the fuctioning of digestive enzymes.The temperature of cold soft drinks is much less than 37, some times quite close to 0. This will lower the effectiveness of the enzymes and put stress on the digestive system, digesting less food. In fact the food gets fermented.The fermented food produce bad smelling gases, decays and forms toxins,which are absorbed in the intestines,get circulated in the blood and is delivered to the whole body. This spread of toxins can lead to the development of various diseases.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HYPERSONIC AIRCRAFT



Hypersonic flight exhibits the same basic flow phenomena that are found in the supersonic regime but the problem of flow analysis become more difficult because of the increased importance of kinetic heating.

It was the need for a more economical system,which could be used for placing objects into earth orbit and land on a conventional runway which led to the development of the Space Shuttle (the picture above). This vehicle is launched by a booster rocket and injected into orbit by its own rocket engines. During re-entry it is really successively a hypersonic, supersonic, transonic and subsonic glider.

## TRANSONIC AIRCRAFT

Flight in the range between the onset of important compressibility effects (M=0.7, and the establishment of fully supersonic flight condition on the other side of the drag coefficient rise (M=1.4) is said to be transonic. For most transeport aircraft and a number of military aircraft designed for such roles as ground attack, a suitable solution is obtained by restricting the cruising speed to just below the drag-rise Mach number.

Jesu - London.

Foods That Harm Foods That Heal

# EAT FOR IMMUNITY FOODSTHAT HARM FOODS THAT HEAL

## BRUSSELS SPROUT

### Anti-cancer, anti-allergic, antioxidant, anti-stress.

Another member of the cruciferous family, which possesses some of the same powers as broccoli and cabbage. Brussels sprouts are packed with various antioxidants and cancer fighting chemicals called indoles. In fact, there has been much excitement about the cancer-fighting properties of sprouts.Researchers at the institution of Food Research in Norwich discovered that a compound called sinigrin,found in sprouts,caused precancerous cells to self -destruct.The effect was so strong that the researchers beleive even an occasional serving of sprouts could destroy such cells in the large intestine.



Brussels sprout also generally strengthen the immune system and help the health of the skin, nervous system and mucous membranes.They also help maintain normal enrgy and blood-fat levels and may protect against asthma, migraine and depression. Sprouts are in the antioxidant, immunity-boosting vitamin C and are a good source of beta carotente and fibre.(!If you have thyroid proplems,eat sprouts in modest amounts only as they contain a chemical which can interfere with thyroid activity).

Ramona - London

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் உலகம்
London

## போராட்டங்களால் கற்றவை.

இதுவரை காலமும் இருந்து வந்த மானுடத்தின் வரலாறு போராட்டத்தின் வரலாறே என்று தான் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும் என்று அனுபவஸ்தர்கள் கூறுவர்.

இன்று உலகின் பலநாடுகளிலும் போராட்டங்களே நடந்தபடியுள்ளன. சில போராட்டங்கள் சாதாரண கூலிக்குழப்பங்கள் போல தெரிகின்றன. சம்பள உயர்வு கேட்டு தொழிலாளர் வேலைநிறுத்தமும், ஆர்ப்பாட்டங்களும் செய்கின்றனர். மே தினத்திலன்று இது உச்சக்கட்டத்தில் இருக்கும்.

அவைபோன்றே எதிர்ப்புகளைத்தெரிவிப்பதற்கு ஊர்வலங்களும், சாத்வீகப் போராட்டங்களும், கற்களை வீசுதல், ரயர்களை வீதிகளில் போட்டு எரித்தல் போன்ற வன்முறைகள் வழியிலான போராட்டங்களும் நடைபெறுகின்றன. இவற்றையும் விட திட்டமிடாத வகையிலான ஆத்திரமூட்டும் வன்முறைகளில் ஈடுபடும் அரசியல் பின்னணியுடனான போராட்டங்கள் நடைபெறுகின்றன. இவற்றுக்கு புறம்பாக பகிஷ்கரிப்புகள், எல்லாவற்றிற்கும் புறம்பாக ஆயுதப்போராட்டங்கள் அவற்றுடன் பிரகடனப்படுத்தப்பட்ட போர்கள் என்பவற்றாலும் உலகம் நிறைந்து காணப்படுகின்றது. வெளிப்படையாக தெரியாத பனிப்போர், சதிப் புரட்சிகள் என்பனவும் நடைபெறுகின்றன. இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும் போது மனித வரலாறே போராட்ட வரலாறு தான் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கின்றது. மேலும், மனித நாகரிகமே போராட்டங்களின் பெறுபேறுதான் என்பதும் உண்மையே.

எவ்வாறாயினும், போராட்டங்கள் யாவுமே முற்போக்கானவையல்ல. மனித நாகரிகத்தை பின் நோக்கி தள்ளும் கலகங்கள் நடைபெறுகின்றன. இடம்பெயர்நாடுகளில் இளைஞர்குழுக்கள் வன்முறைகளில் ஈடுபடுகின்றன. ஏப்ரல் இறுதியில் லண்டன் ரூட்டிங் பகுதியில் உதைப்பந்தாட்ட குழுக்கள் வன்முறைகளில் ஈடுபட்டன.

இவை ஒட்டு மொத்த தமிழினத்திற்குமே இழுக்கை ஏற்படுத்துவன என்பது மிகையான விமர்சனமல்ல. பிரித்தானியாவில் தங்கியிருப்பதற்கு உரிமை மறுக்கப்பட்ட 5000 வரையான ஈழத்தமிழர்கள் பிரதமர் ரொனி பிளேயரின் அலுவலகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் இத்தகைய குழப்பங்கள் முழுத்தமிழினத்தையும் பாதிக்கின்றன.

மொத்தத்தில் போராட்டங்கள் நிறையவே நடைபெறுகின்றன. ஆனால் வரலாற்றிலிருந்து மனிதன் கற்றுக்கொள்வது தான் மிகவும் குறைவாக இருக்கிறதே!

பிரதம ஆசிரியர்,
கொழும்பு.

அனைத்து தரப்பு வாசகர்களையும் கவரும் விதமாக ஆக்கங்களை தாங்கி வரும் தமிழ் உலகமே, நீ என்றும் வெற்றி நடை போட மனதார வாழத்துகிறேன். அரசடி ஐயாத்துரைக்கு வாழ்த்துக்களை தெரிவியுங்கள்.

*க. இளங்கோவன்,*
*நியூசிலாந்து.*

அன்புள்ள ஆசிரியருக்கு!
ஏப்ரல் மாத 'தமிழ் உலகம்' சஞ்சிகையின் அனைத்து அம்சங்களும் நன்றாக இருந்தன. சிறிரஞ்சனின் 'தாயக உறவுகளுக்கு நிரந்தர வருமானத்தின் அவசியம்' என்ற தாயகப்பொருளாதாரக்கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது. 'வங்கியில் பணத்தை வைப்பிலிடுவதன் மூலம் வருமானம் ஒன்று கிடைப்பதிலும் பார்க்க வருமான இழப்பு ஒன்றே ஏற்படும் நிலை காணப்படுகின்றது' என்ற கட்டுரை ஆசியரியரின் கூற்று முற்றிலும் சரியானதே 'தமிழ் உலகம்' தொடர்ந்தும் வெற்றி நடைபோட என் வாழ்த்துக்கள்!

*ப. சத்தியன்,*
*யாழ்ப்பாணம்.*

ஒவ்வொரு மாதமும் தரமான தகவல்களைத் தாங்கி புதிய மெருகுடன் வெளிவந்து கொண்டிருக்கும் 'தமிழ் உலகம்' சஞ்சிகைக்கு எனது பாராட்டுக்கள். இறுதி வரை மனிதனடமிருந்து பிரிக்க முடியாத சொத்து கற்றறிந்த அறிவு மட்டும் தான் என்பதை விளக்கிய பூரணியின் கதைக்கும் தான்.

*சி. இலக்கியா, திருகோணமலை.*

கண்கவர் பக்கங்களுடன் சிந்தையைக்கவரும் செய்திகளை தாங்கி வரும் அனைத்துலக சஞ்சிகையான தமிழ் உலகம் என்றும் சிறந்து விளங்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

*கீ. ஷெரீன், கொட்டாஞ்சேனை.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞானி கலிலியோவை கௌரவப்படுத்திய பாப்பரசர்

நூறு கோடிக்கும் மேற்பட்ட கிறிஸ்தவர்களின் ஆன் மீகத்தலைவரென்ற மகுடத்தை சுமந்து மனித குலத்தின் மீட்சிக்காக தமது ஆற்றலையும் அறிவையும் செலவழித்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தனது 85 ஆவது வயதில் வத்திக்கானில் நித்திய இளைப்பாற்றை அடைந்தார்.

கரோல் ஜோசப் வொஜ்றிலா என்ற இயற்பெயரை உடைய பாப்பரசர் 1920 மே மாதம் 18 ஆம் திகதி போலந்து நாட்டில் வார்ஸோ என்ற இடத்தில் பிறந்தார். சிறு குழந்தையாக இருக்கும்போதே தாயை இழந்த இவர் 1941 ஆம் ஆண்டு தந்தையையும் இழந்தார். 1942 இல் தனது குருத்துவக் கல்வியை ஆரம்பித்து கரோல் 1946 நவம்பரில் ஒரு குருவாகத்திருநிலைப் படுத்தப்பட்டார். 1958 இல் கிராகோவில் உதவி ஆயராகவும், 1964 இல் பேராயராகவும் நியமனம் பெற்று 1967 ஜுன் 26 ஆம் திகதி கர்தினலாக நியமனம் பெற்றார்.

முதலாம் அருளப்பர் சின்னப்பரின் மரணத்தை அடுத்து கர்தினால்மார் எல்லோரும் ஒன்று கூடி போலந்து நாட்டைச்சேர்ந்த 58 வயதான வொஜ்றிலாவை தெரிந்தெடுத்தனர். இவர் திருச்சபையின் 263 ஆவது திருத்தந்தையாக 1978 ஆம் ஆண்டு ஒக்டோபர் 16 ஆம் திகதி தெரிவு செய்யப்பட்டார். ஒக்டோபர் 22 ஆம் திகதி இவருக்கு முடி சூட்டப்பட்டபோது இவர் 2 ஆம் அருளப்பர் சின்னப்பர் என்ற பெயரைச்சூடினார்.

உலகின் பல நாடுகளுக்கும் பயணம் செய்த சாதனையை பெற்ற பாப்பரசர் அனைவராலும் விரும்பப்பட்ட ஒருவராகவும் திகழ்ந்தார். மிகக்குறைந்த வயதில் பாப்பரசராக தெரிவு செய்யப்பட்டு அதிக காலம் பாப்பரசர் பதவியை வகித்தவரான இவர் முழு உலகின் ஆன்ம ஈடேற்றத்துக்காக அரும்பாடுபட்டவர்.

திருமண பந்தத்திற்கு அப்பாற்பட்ட பாலியல் உறவு, கருச்சிதைவு, கருணைக்கொலை போன்றவற்றைக்கடுமையாக கண்டித்தார். அமெரிக்காவில் சிறுவர்களை மதகுருமார்கள் பாலியல் ரீதியாக பயன்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டை அடுத்து அமெரிக்க கர்தினால்களை வத்திக்கானுக்கு அழைத்ததோடு சம்பந்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் பாதிரிமாரைத் தண்டிப்பதற்கு கடுமையான சட்ட திட்டங்களை அமுல்படுத்தினார். மதகுரு மார்களால் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டவர்களிடம் மன் னிப்பை கோரினார்.

இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனர்களுக்கும் இடையிலான பிரச்சினைகளுக்கு முடிவுகட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் இஸ்ரேலுடனும், பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடனும் ராஜதந்திர தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டவர்.

* கத்தோலிக்க மத குருமார்கள் திருமணம் செய்ய அனுமதிக்க முடியாது என ஆயர்கள் பேரவையில் அறிவித்தார்.

* சூரியனை பூமி சுற்றி வருகிறது என்று கூறியதற்காக கிறிஸ்தவ திருச்சபையில் கண்டிக்கப்பட்ட கலிலியோவை 359 ஆண்டுகளுக்கு பின் கௌரவப்படுத்தினார்.

* யூதர்கள் படுகொலையை கிறிஸ்தவர்கள் தடுத்து நிறுத் தத்தவறி விட்டனர் என்று பகிரங்கமாக வருத்தம் தெரிவித்தார்.

* சிரியா பயணத்தை முடித்துக்கொண்டு மசூதிக்கு சென்ற முதல் பாப்பரசர் என்ற பெருமையைப்பெற்றார்.

* ஜெபமாலை வைத்து வழிபடும் முறையை மாற்றினார்.

* ஈராக்கில் அமெரிக்கப்படைகள் நுழைவதைத்தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

* ஓரினத்திருணமத்தை வன்மையாக கண்டித்தார்.

மேற்கூறப்பட்டவை பாப்பரசரின் வாழ்வில் சில முக்கிய பதிவுகள். இவ்வாறு மனித குல மேம்பாட்டுக்காக அயராது உழைத்து கிறிஸ்துவின் தூதுவராக 27 ஆண்டுகள் திருச்சபையைக் கட்டிக்காத்த பாப்பரசரின் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

—எஸ். ரி

















# தமிழ்உலகம்
# London

**வருட சந்தா முற்பதிவுப்பத்திரம்**

**அனைத்துலக தமிழ் மாத சஞ்சிகை**

Annual Subscription Application form
International Tamil Monthly Magazine

ஒரு வருடத்திற்கு £15 மட்டுமே
For one year £15.00 only

Name: ..........................................................
Address: ......................................................
..................................................................
..................................................................
Tel: ..............................................................
E-Mail : ........................................................
Signature: ....................................................
Date: ............../........................2005

சந்தாக்கட்டணம் : காசோலைகளாகவோ அல்லது அஞ்சல் கட்டணமாகவோ அனுப்புவதாயின் Tamilulakam என்ற பெயருக்கு அனுப்பி வைக்கவும்.

Subscription payments : Cheques and postal orders made payable to: Tamilulakam

அனுப்ப வேண்டிய முகவரி:

Tamilulakam
International Tamil Magazine
899-901 Finchley Road
London NW11 7PE
The United Kingdom
Tele : 0044 20 8455 9001 Fax : 0044 20 8731 7870
E - mail : tu@globallanka.co.uk

இலங்கை வாசகர்கள் சந்தாக்கட்டணத்தை காசோலைகளாக அனுப்புவதாயின் Global Investment lanka (Pvt)Ltd என்னும் பெயருக்கு எழுதி No: 50 -1/8, Colombo Plaza Building, Galle Road, Colombo-6 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அஞ்சல் கட்டளைகளை அனுப்பு பவர்கள் வெள்ளவத்தை அஞ்சல் அலுவலகத்தில் மாற்று வதற்கு வசதியாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

'தமிழ் உலகம்' வெளியாகும் நாடுகளும் அவற்றுக்கான வருட சந்தா முற்பதிவு கட்டணங்களும்


**Annual Subscription including postages**

| | |
|---|---|
| Australia | : 35 AUD |
| Canada | : 35 CAD |
| Denmark | : 25EUR |
| France | : 25EUR |
| India | : 500 INR |
| Germany | : 25EUR |
| Italy | : 25EUR |
| Malaysia | : 100 MYR |
| Netherlands | : 25EUR |
| New Zeeland | : 30 NZD |
| Norway | : 180 NOK |
| Singapore | : 45 SGD |
| Sri Lanka | : 500LKR |
| Sweden | : 200 SEK |
| Switzerland | : 35 CHF |
| United Kingdom | : 15GBP |
| USA | : 30 USD |
| All Other Country | : 30 USD |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




—ஷாம்.


சந்தியா

*'காதல்' படநாயகி சந்தியாவுக்கு மொட்டை அடித்து ஒரு படத்திலாவது நடிக்க வேண்டுமென்பது ஆசையாம். தன்னை ஒப்பந்தம் செய்ய வரும் தயாரிப்பாளர்களிடம் அம்மணி தனது ஆசையைச்சொல்ல, வந்த வழியே அவர்கள் ஓடிப்போய்விடு கின்றனராம்.

*'சந்திரமுகி' படம் ரஜினிக்கு கைகொடுத்திருக்கிறது. வழமையான ரஜினியின் படம் தான் என்றபோதும் கதையை 'சந்திர முகி' என்ற கற்பனைக்கதாபாத்திரத்தை வைத்து நகர்த்திச்சென்ற விதம், ரஜினியின் பாடல்கள் என்பன ரசிகர்களைக்கவர்ந்திருக் கின்றன. 'பாபா' படத்தில் ஏமாந்த ரஜினி ரசிகர்கள்'சந்திரமுகி' மூலம் ஓரளவு திருப்தி யடைந்திருக்கின்றார்கள். தியேட்டரில் விசில் பழையபடி களைகட்ட ஆரம்பித்திருக்கின்றது. இதில் ஜோதிகாவின் நடிப்பிற்கும் பலத்த வரவேற்பு கிடைத்திருக்கின்றது.

காதல் படங்களில் நடிப்பது பரத் துக்கு அல்வா சாப்பிடுவது போன்றது. அவரது அடுத்த படம் 'பெப்பரவரி 14'.

* தமிழ் ரசிகர்களை தன் நடிப்பால் கட்டிப் போட்டு வைத்திருக்கிறார் விக்ரம். 'அந்நியன்'படத்தை அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்துக்காத்திருக்கின்றார்கள். படத்தின் பாடல்கள் வெளியாகி ரசிகர்களைக்கொள்ளை கொண்டு விட்டன. இந்தப்படம் தெலுங்கிலும் 'அப்ரஜித்டு' என்ற பெயரில் வெளிவரத் தயாராகிக்கொண்டிருக்கின்றது. இந்த நேரத்தில் விக்ரத்தை இந்திக்கு அழைத்துப் போகும் ஆயத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார் இந்தித்திரையுலகின் பிரபல இயக்குநர் வினோத் சோப்ரா. இவருடைய படத்தில் விக்ரம் நடிப்பதற்கான சாத்தியக்கூறுகள் 90 சதவிகிதம் இருப்பதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவருடன் இணைந்து இந்தித்திரையுலகின் சூப்பர் ஸ்டார் அமிதாப்பும் நடிக்கலாமாம்.


* ரஜினியின் இளைய மகள் சவுந்தர்யாவை திரையில் நடிக்க வைக்கும் முயற்சிகள் நடைபெறு கின்றன வாம்.

நயன்தாரா

*'சாதுர்யன்' பாரதிராஜாவின் மகன் மனோஜ் நடித்து வரும் படம். இவருடன் இணைந்து நடித்திருக்கின்றார் நந்தனா. படத்தை இயக்கு பவர் டி.ஜே.குமார்.

* நடிகை மீனா வழியில் மூத்த நடிகர்களுடன் ஜோடி சேரும் உத்தியை கையாண்டு வாய்ப்பு தேடி வருகிறார் ஸ்நேகா. முதற்கட்டமாக 'சின்னா' படத்தில் அர்ஜுனுடன் இணைந்து நடித்து வருகிறார்.

* கோபிகா எந்தப்படத்தில் நடித்தாலும் அந்தப்படத்தின் இயக்குநரிடம் ஒரு விசேட வேண்டுகோளை விடுத்து வரு கிறார். அதாவது படத்தின் ஒரு காட்சி யையாவது தனது வீடு இருக்கும் கேரளாவில் எடுக்கவேண்டும் என்பதே அம்மணியின் வேண்டுகோள். சமீபத்தில் இந்த வேண்டுகோளுக்கு செவிமடுத்திருப்பவர் 'தொட்டி ஜெயா'இயக்குநர்.

* 'சந்திரமுகி','ஐயா' ஆகியபடங்களில் குடும்பப்பாங்காக நடித்த நயன் தாராவுடன் இணைந்து ஒரு படத்தில் நடித்துவருகிறார் எஸ்.ஜே.சூர்யா. சூர்யா வுடன் இணைந்தால் கேட்கவும் வேண்டுமா நவீன உடையில் கவர்ச்சியாக வந்து கலக்கப்போகிறார் நயன்தாரா.

*மீனாவை 'கர்த்தா' படத்திலிருந்து நீக்க கோரியிருந்த பார்த்திபன் மீனாவின் வயதை விமர்சித்து அம்மணியின் கோபத் துக்கு ஆளாகியுள்ளார்


ரஜினி


கோபிகா


மீனா

## திரைவ

தமிழ் உலகம்
ருக்கின்றது. தி
நீங்கள் செய்ய
களுக்கான பதி
முகவரிக்கு அ
உலகம் - திரை
உலகம் 1939
ஒளிந்துள்ளன)
1. கிருஷ்ணனி
சரித்திரத்தினை
2. அமராபதிய
தியாகராஜபாகவ
முடியுமா?
3. இக்காலப்பகு
கொழும்பில் செ
4. பி.யூ. சின்னப்
நடித்த படம். (இ
நிற்கும்)
5. இக்காலப்பகு
கொள்ளை கொ
படம் எது?
6.ஹிந்தியிலிருந்
பெயர் என்ன?
7. காதல் மன்
ஜெமினிகணேசல
8. ஜெமினி கே
நிறைந்த படத்தி
(இந்த இடைவெ
9. 1939 முதல்
ஆரம்பிக்கும் த
பெயர்களைத்த
10. நடிகர் திலக
சரியான விடை
வழங்கப்படுவது
மாக வழங்கப்ப
(போட்டி முடிவு

No: 50 -1/8, C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'பெப்ரவரி 14' படத்தில்
பரத்துடன் புதுமுகநாயகி

## வலம் — பரிசுப்போட்டி

ம் வாசகர்களுக்கு பல பரிசுப்போட்டிகளை அறிவித்தி
திரைவலம் வாசகர்களுக்கும் வாய்ப்புகள் காத்திருக்கின்றன.
ய வேண்டியது இதுதான். கீழே தரப்பட்டுள்ள கேள்வி
தில்களை (மட்டும்) தபாலட்டையில் எழுதி இங்கு தரப்படும்
அனுப்பி வையுங்கள். கேள்விகளுக்கான விடைகள் தமிழ்
ரைவலம் பகுதியில் தொடர்ந்து பிரசுரமாகி வரும் 'சினிமா
9 முதல் 1960 வரை' என்ற தொடர் கட்டுரையில்

ரின் குழந்தைப்பருவம் முதல் சிறுவனாகும் வரையான
ா விளக்கும் படத்தின் பெயர் ..................................
யின் காதலனின் பெயரில் வந்த படம். எம்.கே.
வதர் கதாநாயகனாக நடித்திருந்தார். படத்தின் பெயரைக்கூற

பகுதியில் வெளியான 'ஹரிதாஸ்'' இலங்கையின் தலைநகர்
தொடர்ந்து எத்தனை நாள் ஓடி சாதனை படைத்தது?
ப்பா தமிழ் சினிமாவில் முதன் முதலில இரட்டை வேடத்தில்
இதன் தலைப்பு சிறந்த மகன் என்ற கருத்தை வெளிப்படுத்தி

குதியில் வெளியாகி இப்போதும் எல்லோர் மன தையும்
ாண்ட''காற்றினிலே வரும் கீதம்'' என்ற பாடல் இடம்பெற்ற

ந்து தமிழுக்கு முதன் முதலில் டப்செய்யப் பட்ட படத்தின்

ன்னன் என்று பெயரெடுத்து சமீபத்தில் மறைந்த நடிகர்
னின் முதல் படம் என்ன?
ணேசன் - லலிதா ஜோடியாக நடித்த மந்திர சாகஸங்கள்
தின் தலைப்பு கணவனே ......................... கண்ட தெய்வம்.
வ ியை நிரப்புங்கள் விடை வரும்)
-960 வரையான காலப்பகுதியில் ஹரி என்ற சொல்லில்
தலைப்புகளைக்கொண்டு வெளிவந்த இரண்டு படங்களின்
ருக?
ம் சிவாஜிகணேசன் முதன்முதலில் நடித்த சினிமாப்படம் எது?
களை அனுப்பும் ஐவருக்கு தலா 1000 ரூபா பரிசாக
டன் தமிழ் உலகத்துக்கான ஒரு வருட சந்தாவும் இலவச
படும்.
த்திகதி போன்ற மேலதிக விபரங்கள் 35 ஆம் பக்கத்தில்)

**விடைகளை அனுப்பவேண்டிய முகவரி:**
**தமிழ் உலகம்: திரைவலம் பரிசுப்போட்டி,**
**Colombo Plaza Building, Galle Road, Colombo-6**

# சினிமா உலகம் 1939 முதல் 1960 வரை



K.W.செல்வராஜா

அக்காலத்து தமிழ்படங்களைப்போல் ஆங்கிலப்படங்களும் சுவாரஷ்யமும் தரக்கூடியவையாக இருந்தது. 20th Century Fox, Colombia Pictures போன்ற ஸ்தாபனங்கள் பெரும் செலவில் படங்களைத்தயாரித்து வெளியிட்டன. அக்காலத்தில் தான் Hollywood ஆரம்பமானது. அக்காலத்தில் வெளிவந்த சில ஆங்கிலப் படங்களை கீழே தருகிறேன்.

Sound of Music: இப்படம் முழுக்க முழுக்க இசையும் நவீன வாத்தியங்களும் கொண்ட படம். இப்படத்துக்காக Liberty Cinema தியேட்டரில் விசேடமான ஒலிபரப்பிகள் பூட்டப்பட்டு இப்படம் 6 மாதத்துக்கு மேல் தொடர்ந்து கொழும்பில் ஓடியது. இதில் உள்ள விசேடம் என்னவென்றால் ஒலி வரும் திசையிலிருந்து ஓசை வரும். திரையின் வலது புறம் மேல் பகுதியில் ஒரு ஒலி வந்தால் அடுத்த வாக்கியத்தின் ஒலி திரையின் இடது புற கீழ் பகுதியிலிருந்து வரும். நல்ல Technic குடன் ரசிக்கக்கூடிய இசையும் இருந்தது. அக்காலத்து பாடகர்கள் Elvis Presley Bonory Sisters, பிரித்தானியாவைச் சேர்ந்த நான்கு சகோதரர்கள் (Beathe Brothers) இப்படிப்பலர் பாடினார்கள். இன்றும் இப்படத்தின் பாடல்களை ஐரோப்பியர் ரசிப்பார்கள்.

The Great Train Robbery: இலண்டனில் 1940 களில் உண்மையாக நடந்த Train கொள்ளைப்புத்தகமும் வெளிவந்தது. இதில் ஒருவனின் மூளையில் தான் திட்டமிடப்பட்டு 3,4 சிநேகிதரின் உதவியுடன் நிறைவேறியது. அக்காலத்தில் மிகவும் கூடுதலான வங்கிப்பணம் கொள்ளையடிக்கப்பட்ட உண்மைச்சம்பவம். இவர்களின் வழக்கு நடந்து முடிவடையும் தறுவாயில் இவர்களின் வாக்கு மூலங்களைக்கொண்டு படமாக்கப்பட்டது. இப்படத்தை 50களின் நடுப்பகுதியில் பார்த்தேன். சுவாரஷ்யமான சம்பவங்களாக ஒருவரை இலண்டன் புகையிரத நிலையத்தில் ஒரு பெட்டியினுள் நுழைந்து ஒரு வாரமாக வங்கிப்பணம் வரும் நாட்கள், கிழமைகள், எவ்வித பாதுகாப்புடன் வருகிறது போன்றவற்றை அவதானித்தல், புகையிரதம் மெதுவாக செல்லும் இடத்தில் வேறு இருவர் வாகனத்துடன் நிற்க புகையிரதத்துக்குள் இருந்து மூடை மூடையாக உள்ளே இருந்தவர்கள் அவ்விடத்தில் எறிய அதை வாகனத்தில் ஏற்றி மறைவிடமாக தெரிந்து வைத்த வீட்டில் கொண்டு போவதும், எல்லோரும் ஒன்று கூடியதும் அவர்கள் திட்டத்தைத் தொடர்ந்து செய்வது பற்றி பேசிக்கொண்டிருக்கும்போது ஒருவன் மூட்டையில் இருந்து 50 பவுண் நோட்டை உருவி விளக்கில் பிடித்து சிகரெட் பற்ற வைப்பதும் இப்படி படம் முழுவதும் ஆசனத்தை விட்டு எழ முடியாமல் பார்த்து ரசிக்கக்கூடிய படம். இதில் கோடிக்கணக்கான பிரித்தானிய பவுண் கொள்ளையடிக்கப்பட்டு பின் பிடிபட்டு இதை இயக்கிய தலைவனுக்கு அரசாங்கத்தால் பாராட்டும் நன்நடத்தை பிணையில் விடுதலையும் கொடுக்கப்பட்டது.

James Bond 007: இப்படம் துப்பறியும் James Bond ன் கதைகளான அமெரிக்க எழுத்தாளரின் கற்பனைக்கதைகள் அதிகமான படங்களில் SEAN CONNORY நடித்தார். பின்னர் அவர் தம்பி நடித்தாலும் இவரைப்போல் சுறுசுறுப்பு பின்னவரிடம் காணப்படவில்லை. அக்கால இளைஞர்களை கவர்ந்த சண்டைப்படங்கள்.

Hercules: இது ஆங்கில இலக்கிய நாவல். இதில் நடித்தவர் Mr.Universe ஆக தெரிவு செய்யப்பட்ட JIM REEVES பாரமான பொருட்களை இலகுவாக தூக்குதல், ஆஜானுபாகுவான உடல் அமைப்பு சண்டைகள் நிறைந்த படம்.

Frankinstein Vampire: இறந்தவர் எழும்பி வருவதும், பற்கள் நீண்டும் சாத்தானின் தன்மையும் கொண்டவர் பெண்களின் கழுத்தை கடித்து இரத்தம் உறிஞ்சி குடிப்பதும் இப்படியான பல பயங்கரக்காட்சிகள் நிறைந்த படங்கள். இதில் அதிகமான படங்களில் பொருத்தமான வேடம் கொண்ட CHRISTOPHER LEE நடித்தார்.

பிரான்ஸ் நடிகையான SOPHIA LOREN, இத்தாலிய நடிகையான BRIGET BARDO(T) பிரபலமான நடிகைகளாக இருந்தார்கள். பின்னவர் நிர்வாணமாக நடிப்பதில் பெயர் போனவர். இவர் இப்போது பறவைகளை வளர்த்து பராமரிப்பதாக பத்திரிகைகளில் வாசித்தேன்.

பிரித்தானியாவைச்சேர்ந்த MARLIN MONRDE சிறந்த Hollywood நடிகையானார். இவர் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார். இலண்டனில் உள்ளமெழுகுச்சிலைகளில் இவரின் சிலையையும் காணலாம். சென்ற வருடம் அங்கு சென்றபோது நானும் என் மனைவியும் இவரின் சிலையின் அருகேயும் Beatles Brothers சிலைகளுக்கருகேயும் நின்று படம் எடுத்து வந்தோம். நகைச்சுவை நடிகர்கள் Dear Martin, Tony Curtis ம் நடித்த 'JUMPING JACKS' அக்காலத்தில் வந்த பிரபலமான நகைச்சுவைப்படமாகும். இவர்கள் இதில் பெண்வேடத்தில் புகையிரதத்தில், வீதிகளில் நடந்து திரிவதே சிரிப்பையூட்டும் பெண்களை கிண்டல் செய்யும் நகைச்சுவைகளாகும்.

Carate: கராட்டே என்றதும் உலக வீரனான BRUCE LEE ஐ ஞாபகப்படுத்தும். அக்காலத்தில் படத்தயாரிப்பாளர்கள் இவரின் உடல் வலிமையையும் நடிகத் திறமையையும் கண்டு இவருக்கென பல கராத்தே கதைகளை உருவாக்கி பட மாக வெளியிட்டார்கள். இவரில் எரிச்சல்பட்ட எதிரிகள் 10 வருடங்களுக்கு முன் நஞ்சூட்டி இவரை கொலை செய்தார்கள்.

(தொடரும்)

**கே.டபிள்யூ.செல்வராஜா,மோர்டன், இலண்டன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அபிநயாவின் பாதத்துக்குத் தேன் பூச வேண்டும். அவளைக்கோயில் கட்டிக்கும்பிட வேண்டும். தாயுள்ளம் அதுவும் அவளுக்காக மட்டும் வாழும் அந்தத்தியாகச்சின்னம் தான் கவலை நிரம்பிய மொட்டாக இருந்து கொண்டு தன் மகளை மலரச்செய்ய நினைக்கின்றது.

"என்ன மலர் நான் கேட்ட கேள்விக்கு நீ பதிலே சொல்லாமல் எதையெதையோ உனக்குள் சிந்திக்கிற மாதிரியிருக்கு"

"மாமா மன்னித்துக்கொள்ளுங்கோ. என்ன கேள்வி கேட்டீங்கள் மாமா?"

"அது தான் என் பேர்த்திக்கு என்னென்ன தொழிற்பயிற்சிகளை வழங்குவார்கள் என்று கேட்டேன்"

"நெசவுப்பயிற்சி, தையற்பயிற்சி, தலையணை உறை தயாரிக்கும் பயிற்சி, ஊதுவர்த்தி தயாரிக்கும் பயிற்சி, கடித உறை தயாரிக்கும் பயிற்சி போன்ற பல பயிற்சிகளை மூளை வளர்ச்சி குறைந்த சிறுவர்களுக்காக கொடுக்கிறார்களாம். அதுவும் அவரவர் மூளை வளர்ச்சிக்கேற்ற விதத்தில் தான் பயிற்சிகளும் அமையும் என்று நான் நினைக்கிறேன் மாமா"

"அப்படியென்றால் எங்கள் அபிநயாவுக்கேற்ற பயிற்சியைத் தெரிவு செய்து அதை மட்டும் பயிற்றுவித்தால் அது நல்லது சித்தி"

"அவளுக்கேற்ற பயிற்சியை நாங்களே எப்படித் தெரிவு செய்ய முடியும்? அவளுக்கு எது முடியுமோ அதையே பயிற்றுவிக்க முடியும். அதை அவர்களே செய்வார்கள் காருண்யா."

"அதை எப்படிக்கண்டு பிடிப்பார்கள் சித்தி"

"அங்கு நடைபெறும் சகல பயிற்சிகளையும் எல்லாப்பிள்ளைகளுக்கும் பயிற்றுவிப்பார்களாம். சில காலம் சென்றதும் அவர்களுக்கு இயலுமான பயிற்சியை அவர்களே கண்டு பிடித்து விடுவார்களாம் காருண்யா"

"அப்படியென்றால் நல்லது தானே. அபிநயாவுக்குத்தனது வேலைகளைத்தானே செய்யக்கூடிய ஆற்றல் இருக்கு. கூடுதலான தொழிற்பயிற்சிகளை எடுப்பதன் மூலம் ஒரு தொழிற்பயிற்சியை இலகுவில் பயின்று கொள்வதற்கு உதவும் என்று நான் நினைக்கிறேன் மலர்"

"ஆம் மாமா. இத்திட்டம் மூளை வளர்ச்சி குறைந்த பிள்ளைகளது திறமை, பயிற்சி, முயற்சி என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு ஏற்படுத்திக் கொள்ளப் படுகிறதாம். அவர்களுக்குத் தத்தம் வேலைகளை செய்யும் ஆற்றலை ஏற்படுத்திக் கொள்வதும், அந்த ஆற்றலுடைய குழந்தைகளுக்கு அவர்களது எதிர் காலம் பற்றிய நம்பிக்கையை ஊட்டுவதும் வழிகாட்டுவதும் அவசியமானதொன்றாகக் கருதப்படுகின்றதாம்"

12

"அப்படியென்றால் அவளை அங்கு சேர்த்துக்கற்பிக்கலாம் சித்தி"

"அவள் கெட்டிக்காரி. தேநீர் ருசியாகத் தயாரிக்கிறாள். உலை வைக்கிறாள். உடுப்புக்கழுவுகிறாள். இப்படியாகப்பல வேலைகளைச்செய்யும் என் பேர்த்தி தொழிற் பயிற்சி ஒன்றை முறையாகப்பெற்று முன்னேற முடியும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு மலர்."

"எனக்கும் அந்த நம்பிக்கை உண்டு. அதனால் தான் பூரண திருப்தியோடும் மகிழ்வோடும் உள்ளேன் மாமா"

"எனக்கும் ஆனந்தமாகத்தான் இருக்கிறது மலர். ஆனால் இத்தனை காலத்தின் பின் சந்தித்த என் பேர்த்தியைப்பிரிவது தான் மனதுக்குக் கஷ்டாக இருக்கிறது. ஆனால் அவளின் எதிர்காலம் வளமாக அமைய வேண்டும் என்பதற்காக அவளை நாம் பிரிந்து தானே ஆக வேண்டும். அவளை நீ கொழும்புக்குக் கொண்டு செல்லத்தானே வேண்டும்."

"சரண்யா இறந்து போன பின் இவள்தானே எனக்கு ஒரே ஒரு தங்கை. அவளது வாழ்வு வளம் பெறத்தாத்தா சொன்னது போல நாங்கள் பிரிந்து தானே ஆகவேண்டும் சித்தி."

"பிரிந்தாலும் தாத்தாவை, மாமாவை, அக்காவை அவள் அடிக்கடி வந்து பார்க்கத்தானே வேண்டும். வவுனியாவில் இருக்கும் அண்ணன்மாரை அவளுக்குத்தெரியாது. அவர்களைக் கூட அவளுக்குக்காட்டித்தரத் தானே வேண்டும். அவளுக்குத்தேவையான உறவுகளை அவள் அறிந்திருப்பது தானே நல்லது காருண்யா" என்றவள் ஒரு சிற்பியைப்போல தன் மகளின் புதிய தோற்றத்தை மற்றவர்களுக்கு சுமையாக அமையாத மறு வடிவத்தை தன் எதிர்காலத்தில் தன்னைத்தானே கொண்டு நடத்தப்போகும் தன் மகளின் மறுவடிவத்தை அவள் செதுக்கப் போகிறாள். அவளைப்புதுவடிவமாக்குவதில் தன் காலங்களை ஈடுபடுத்தப் போகிறாள். இதை நினைத்து நினைத்து பூரித்துப்போகிறாள்.

"மூளை வளர்ச்சி குறைந்த சிறுமியோடு யாருடைய துணையுமில்லாமல் கொழும்பில் தனியாக உன்னால் எப்படி வாழ முடியும்? அத்தோடு கொழும்பில் வாடகை நிறைய என்று கேள்விப் பட்டேன்.

அங்கு சொந்த வீடுள்ளவர்களால் தான் சமாளித்து வாழமுடியும் என்று சொல்கிறார்கள். அப்படியிருக்கும்போது எப்படி உன்னால் அங்கு இருக்க முடியும்?" குமாரசாமி எடுத்துச் சொன்னார்.

"தர்சிகாவுக்குச்சொந்த வீடு இருக்கிறது. அதுவும் மாடி வீடு. தாங்கள் கீழ் வீட்டில் இருந்து கொண்டு மேல் மாடியை எங்களுக்கு ஒதுக்கித்தருகிறார்களாம். அதற்காக வாடகைப் பணத்தையும் தரவேண்டாமாம். அவள் இந்தக்கடிதத்தில் அதனையும் குறிப்பிட்டுள்ளாள் மாமா." மலர்விழி விவரமாகச்சொன்னபோது, "அப்படியானால் கொழும்புக்குச் செல்வதுதான் நல்லது. அதுவும் இங்கிருந்து ஒரு நல்ல நாளில் தான் செல்லவேண்டும் மலர்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி மாமா"

"காருண்யா பெரியறைக்குள் இருக்கும் மேசை லாச்சிக்குள் இரகுநாதையர் பஞ் சாங்கம் இருக்கு அதை எடுத்து வா பிள்ளை" என்று கேட்டுக்கொண்டார் குமாரசாமி.

"சரி தாத்தா" என்று சொல்லி விட்டு விரைந்து சென்ற காருண்யா பஞ்சாங் கத்தோடு மீண்டும் வந்து குமாரசாமியிடம் கொடுத்தாள்.

பஞ்சாங்கத்தைப்புரட்டி பார்த்தவர் "வருகிற புதன்கிழமை தான் நல்ல நாள் என்று போடப்பட்டிருக்கின்றது மலர். அன்று தான் கொழும்புக்குப்புறப்படுவோம் என்று தர்சிகாவுக்கு அறிவித்து விடு" என்று உறுதியாக உரைத்த குமாரசாமி,

"அதுவரை சித்திக்கும், தங்கைச் சிக்கும் விருப்பமான சாப்பாடுகளைச் செய்து கொடுப்போம்" என்று காருண் யாவைப்பார்த்துச்சொன்னார்.

"சரி தாத்தா" காருண்யா ஒத்துக் கொண்டாள்.

புதன்கிழமையும் வந்தது. ஏற்கனவே குமாரசாமியால் ஒழுங்கு செய்யப்பட்ட தனிப்பட்ட வேன் ஒன்றில் அவர்களிருவரும் கொழும்புக்கு வந்து சேர்ந்தனர்.

இப்பொழுது தர்சிகாவின் வீட்டில் தங் கியிருக்கும் மலர்விழியும், மகள் அபி நயாவும் என்றுமில்லாதவாறு மகிழ்வோடு காணப்பட்டனர். மலர்விழி தர்சிகாவோடு அபிநயாவின் கற்பித்தல் நடவடிக்கை களைப்பற்றியே வார்த்தைக்கு வார்த்தை பேசினாள். மிக விரைவாக அவளை அவ ளது பாடசாலையில் சேர்த்து விட வேண்டும் என்பதில் அவள் குறியா யிருந்தாள். அதற்கும் ஒரு நல்ல நாள் அவளது தாத்தா குமாரசாமியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த நன்நாளில் அபிநயாவை அழைத்துக்கொண்டு வெள்ளவத்தையில் அமைந்துள்ள பாடசாலைக்கு சென்றாள் மலர்விழி. மூளை வளர்ச்சி குன்றிய மாண வர்களுக்குப்பயிற்சியளிக்கும் அந்தப் பாடசாலைக்குப்பொறுப்பாயிருந்த ஒரு வயதான அம்மையார் அவர்களை மகிழ் வோடு வரவேற்றார்.

"உங்கள் மகளா இவள்?"

"ஆம் அம்மா"

"மகளின் பெயர்"



"அபிநயா"

அபிநயாவே பதிலிறுத்தாள்.

"நன்றாகப்பெயரைச் சொல்கிறாளே. அவளுக்குரிய தொழிற்பயிற்சிகளை அளிப் பது இலகு என்று நான் நினைக்கின்றேன்" பொறுப்பாளர் சந்தோஷப்பட்டார்.

"அம்மா என் மகள் சிறிய சிறிய கணக் குகள் செய்யவும், எழுத்துக்களைச் சேர்த்து வாசிக்கவும், எழுதவும் நானே சொல்லிக் கொடுத்திருக்கிறேன்." மலர்விழி புரியும் படியாக அந்த அம்மையாரிடம் சொன்னாள்.

அம்மையார் வியந்து போனார். "நீங்கள் இப்படிப்பட்ட குழந்தைக்கு இவற்றைச்சொல் லிக்கொடுக்க எத்தனை கஷ்டப்பட்டிருப் பீர்கள்" அவர் மூக்கின் மேல் விரலை வைத்தார்.

மலர்விழி அபிநயாவைப்பற்றிய விவரங் களை விலாவாரியாகப்பொறுப்பாளரிடம் சொல்லி வைத்தாள். இவற்றைக்கேட்ட பொறுப்பாளர் "லோஜா லோஜா" என்று அங்கிருந்தவாறே பதிவாளரை அழைத்தார்.

அவர் அழைத்ததைக்கேட்ட அபிநயா "ரோஜா அம்மா ரோஜா வேண்டுமா, எங்கள் வீட்டில் கலர் கலராக ரோஜா இருக்கிறது. நாளைக்குக்கொண்டு வருகிறேன்" என்று சொன்னபோது அங்குள்ளவர்கள் "கொல்" என்று சிரித்தார்கள். ஆனால் பொறுப்பாளர் மட்டும் சிரிக்கவில்லை.

"உங்கள் மகள் மூளை வளர்ச்சி குறைந்தவள் என்றாலும் விவரமானவளாக இருக்கிறாள்" என்று அமைதியாகச்சொல்லி விட்டு "நாளைக்கு நிறைய ரோஜாப்பூ கொண்டு வரவேண்டும்" என்று அபிநயா வைப்பார்த்து புன்னகைத்தார்.

அபிநயா அந்தப்பாடசாலையில் பதியப் பட்டு கல்வி கற்று வந்தாள். "மனவளர்ச்சி குன்றியவர்களால் என்ன பிரயோசனம் என்றிருந்த நிலை இன்று மாறி விட் டது என்று சொல்லுமளவுக்கு அபி நயாவில் பெரும் முன்னேற்றம் தென்பட்டது. மூளையின் செயல்களில் மிகவும் முக்கியமானது நுண்ணறிவு பெருக்கம். இது அறிவு வளர்ச்சி யினால் ஏற்படுகின்றது. இதனால் ஒருவன் தன்னுடைய திறன்களையும், திறமைகளையும் வளர்த்துக்கொண்டு வெற்றிகரமான மனிதனாக முன்னேறு

## சிவயோகமலர்

கிறான். ஊனமுற்றோர்களில் பலரும் இவ்வாறாகத் தங்கள் திறமைகளை வளர்த்துக்கொண்டு சில நேரங்களில் சாதாரணமானவர்களையும் மிஞ்சுமளவில் உயர்ந்து புகழுடன் வாழ்ந்து கொண் டிருப்பதையும் காணலாம்" என்று பொறுப் பாளர் மலர்விழிக்கு சுட்டிக்காட்டினார்.

ஆனால் மனவளர்ச்சிக்குறைபா டுள்ள ஒரு பிள்ளைக்கு வாழ்க்கையில் முன்னேற அடிப்படைத்தேவையான அறிவு வளர்ச்சியே ஒரு தடையாக இருக்கிறது. இத்தடையைப் பயிற்சிகள் மூலம் அகற்றி மனவளர்ச்சியுடன் மேற்கொண்டு வாழ வழி வகை செய் வதே எமது முயற்சியாகும். மலர்விழி அதுவும் எழுத்துத் தெரிந்த அபிநயா முன்னேறுவது இலகுவான ஒரு காரியம்" என்றும் அவர் கூறினார்.

"இதைத்தான் நானும் எதிர்பார்த் தேன்" என்ற குரல் வந்த திசையை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு நின்றாள் மலர்விழி.

(-தொடரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவை காண்பவர்கள்



ஒரு மருத்துவதுறை பேராசிரியர் தனது மாணவர்களின் அவதானிப்பு சக்தியை பரீட்சிக்க விரும்பினார். மருத்துவ மாணவர்களுக்கு அவதானிக்கும் இயல்பும் ஆர்வமும் மிக அதிகமாகத் தேவைப்படுகின்றது என்பது அனைவரும் அறிந்ததே! ஒரு நாள் பேராசிரியர் தனது மாணவர்களை இரசாயன பரிசோதனை கூடத்திற்கு வருமாறு அழைத்தார். வகுப்பு ஆரம்பமாகியது. பேராசிரியர் மாணவர்களுக்கு ஒரு போத்தலைக்காட்டி அதனுள் சிறுநீர் இருப்பதாக கூறினார். போத்தலில் இருந்த சிறுநீரை ஒரு கிளாசினுள் ஊற்றினார். மாணவர்களுக்கு அதனை முதலில் காண்பித்து விட்டு தனது வலக்கையை விரித்து சுட்டு விரல் நுனியினால் சிறுநீரைத்தொட்டார். பின்னர் கையை உயர்த்தி பிடித்தபடி "மாணவர்களே என்னை அவதானியுங்கள்" என்று கூறினார். கூறியவர் தனது விரலினை வாயினுள் கொண்டு சென்று தனது நாவில் தொட்டார்.

மாணவர்களை ஒவ்வொருவராக எழுந்து வரும்படியும் தான் செய்தது போன்றே அவர்களையும் செய்யுமாறும் கேட்டுக்கொண்டார். மாணவர்களும் ஒவ்வொருவராக எழுந்து வந்து பேராசிரியரின் மேசையில் இருந்த சிறுநீர் கிளாசினுள் தமது சுட்டு விரலினால் தொடுவதும் பின்னர் அதனை தத்தமது நாவில் நனைப்பதுமாக செய்து காட்டினர். அவ்வாறு செய்த ஒவ்வொரு மாணவரும் தத்தமது ஆசனத்துக்கு சென்று அமர்ந்த பொழுது அருவருப்பு தாங்காமல் வாயைச்சுழித்துக் கொண்டதை அனைவரும் அவதானித்தனர். தமது கைக்குட்டைகளால் வாயையும் மூக்கையும் பொத்திக்கொண்டனர் பலர். மாணவர்கள் எல்லோரும் இவ்வாறு செய்துமுடிந்த பின் பேராசிரியர் ஒவ்வொரு மாணவரிடமும் தனித்தனியாக கேள்விகளைக் கேட்டார். மாணவர்கள் சிறுநீர் கசப்பாக இருந்ததாகவும் துர் நாற்றம் வீசியதாகவும் தெரிவித்தனர். பேராசிரியர் மாணவர்களை சற்று ஏளனத்துடன் பார்த்தார். நீங்கள் எதனை அவதானித்தீர்கள். சற்று கண்டிப்புடன் கேட்டார். நான் முன்னர் செய்தது போன்று இன்னுமொரு தடவை செய்து காட்டுகின்றேன் பாருங்கள் என்றார். எல்லா மாணவர்களும் அவரையே உன்னிப்பாக பார்த்த வண்ணமிருந்தனர்.

பேராசிரியர் தனது கைவிரல்களில் மூன்று விரல்களை மடித்துக்கொண்டு சுட்டு விரலையும் பெரு விரலையும் மட்டும் நீட்டி பிடித்தபடி சுட்டுவிரல் நுனியால் சிறு நீரை தொட்டார். தனது கையை தலைக்கு மேலே உயர்த்தி எல்லோரும் பார்க்கும்படி செய்தார். பின்னர் கையை சிறிது சிறிதாக மடக்கி வாயருகே கொண்டு வந்து தனது பெருவிரலினை வாயினுள் நுழைத்தார். பார்த்து விட்டீர்களா என்று கேட்டார்.

## சிறுவர் கதை

சிறுநீரின் சுவை பற்றி வெவ்வேறு விதங்களில் தெரிவித்த மாணவர்கள் எல்லோரும் வெட்கத்தால் தலை குனிந்தனர்.

அந்த மாணவர்கள் பேராசிரியர் நிகழ்த்தியதைப்பார்க்கவில்லை. தம் நினைவே நிகழ்கிறது என நம்பினார்கள். அதனையே கண்டார்கள். அதாவது மாணவர்கள் தாம் நினைத்ததையே கண்டார்கள். புற நிலையில் நிகழ்ந்ததை அல்ல.

-பூரனி

# தமிழ் உலகம் மழலைகள் மன்றம்



பெயர்: மொகமட் ரஸீன் மொகமட் மர்ஜான்
முகவரி: இல: 83, வியாங்கல்லை, அகலவத்தை
வயது: 12 (5.10.1993)
வகுப்பு: தரம் 7 B
பாடசாலை: ஹொ/களு வியாங்கல்லை முஸ்லிம் மகாவித்தியாலயம்
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம் வாசித்தல், விளையாடுதல்



பெயர்: ர.சிரோமிகா
முகவரி: வீரக்குட்டி ஒழுங்கை, பெரிய நீலாவணை 01, கல்முனை.
வயது: 9 (11.06.1996)
வகுப்பு: தரம் - 04
கல்லூரி - கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை, கல்முனை
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி பார்த்தல், சிறுவர் கதைகள் வாசித்தல்

தமிழ்உலகம் மழலைகள் மன்றத்தில் அங்கத்தவர்களாக சேர்வதன் மூலம் சிறார்கள் பல நன்மைகளை அனுபவிக்கலாம். அங்கத்தவர்களாக இருக்கும் சிறார்கள் எழுதி அனுப்பும் ஆக்கங்கள் மட்டுமே இந்தப் பக்கத்தில் பிரசுரிக்கப்படும்.

அது மட்டுமல்லாது, அடிக்கடி அங்கத்தவ சிறுவர்களுக்கிடையில் பல விதமான போட்டிகளை நடாத்துவதன் மூலம் பரிசுகளை வழங்கவும் திட்டமிட்டுள்ளோம்.

எனவே விரையுங்கள் செல்வங்களே! தமிழ்உலகம் மழலைகள் மன்றத்தில் அங்கத்தவர்களாகச்சேர, நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்.

உங்கள் பெயர், முழுமையான விலாசம், தொலைபேசி இலக்கம் மற்றும் உங்கள் பொழுது போக்குகள் எல்லாவற்றையும் எழுதி அண்மையில் எடுத்த உங்கள் புகைப்படத்துடன் அனுப்பிவையுங்கள். உலகிலுள்ள சிறுவர்கள் எல்லோரையும் உணர்வு ரீதியாக ஒன்றிணைக்கும் திட்டம்.

*தமிழ்உலகம் மழலைகள் மன்றம்.*

முழுப்பெயர்.......................................................
வயது :.......................................................
முகவரி:.......................................................
.......................................................
தொலைபேசி :.......................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை எங்கள் தாய் நாடு

இலங்கையானது தெற்கு ஆசிய வலயத்துக்குரிய மிகப்பழைய இந்திய கலாசாரத்தின் செல்வாக்கைப்பெரிதும் பெற்றுள்ள ஒரு நாடு.
இங்கு இந்து, கிறிஸ்து, பௌத்த இஸ்லாம் எனப்பல மதத்தவர்கள் ஆதி காலம் தொட்டே வாழ்ந்து வருகின்றனர்.
இலங்கையின் இன்றைய நிலை மிகப் பயங்கரமானது. தெருவில் செல்லும் சாதாரண மக்களுக்கு எந்நேரம் என்ன நிகழும் என்று சொல்ல முடியாது. வழிப்பறிக்கொள்ளை, கொலை, கற்பழிப்பு, திராவக வீச்சு, கைக்குண்டு வீச்சு அல்லது வாகன விபத்து என்பன நம் நாட்டில் சர்வ சாதாரணமாகி விட்டன.இந்நாட்டில் செய்யப்படும் குற்றங்கள் பெரும்பாலும் ஆத்திரத்தினாலும், குடி வெறியினாலும் செய்யப்படுகின்றன.பௌத்த நாடு, தர்ம துவீபம் எனப்பெருமை பாராட்டிக் கொள்ளும் இந்நாட்டிலே குற்றங்களின் பெருக்கத்துக்கு காரணமென்ன?. கல்வி அறிவு இல்லாதவர்கள் தான் குற்றஞ்செய்கின்றார்கள். பொருளாதாரத்தில் மிகக் கீழ்நிலையிலுள்ளவர்கள் தான் குற்றம் செய்கின்றார்கள் என்றால் கல்வி அறிவும், பணம் படைத்தோரும் திட்டம் போட்டுக்குற்றம் புரிபவர்களாக இருக்கின்றார்களே.சமய அறிவு இல்லாதவர்கள் குற்றம் செய்கின்றார்கள் என நாம் முடிவு கட்ட முடியாது. சமய அறிவில் பழுத்த ஞானமுள்ளவர்கள் குற்றம் புரிந்து கொலைத்தண்டனை கூடப்பெற்றிருக்கின்றார்கள்.சமய குரவர்களும், பெற்றோரும், ஆசிரியர்களும் சமய அறிவு விருத்தியை மட்டுமன்றி சமயத்தை நாளாந்த அனுசரணைக்குக்கொண்டு வரும் பழக்கத்தைப்பிள்ளைகளுக்கு ஊட்ட வேண்டும். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதனை அண்மையில் ஏற்பட்ட கடல் பேரலை 'சுனாமி' எமக்கு உணர்த்தியது. நாம் எல்லோரும் ஒற்றுமையோடு இருந்தால் நாடும் முன்னேற நாமும் முன்னேறலாம்.

**M.R.M.மர்ஜான், ஆண்டு -7 B,வியாங்கல்லை முஸ்லிம் மகா வித்தியாலயம்.**

# விடுகதைகள்

1) தட்டு வீட்டுக்குள் முட்டுப்பலகை.
2) ஓடுவர், ஆடுவர், ஒற்றைக்காலில் நிற்பர்.
3) சுளகு நிறைய சோளப்பொரி விடியப்பார்த்தால் ஒன்றும் இல்லை.
4) எட்டுக்கால் ஊன்றி இரு கால் படம் எடுத்து, வட்டக்குடை பிடித்து வாறாராம் வன்னியனார்.
5) ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம்.

*விடைகள்*

1) நாக்கு
2) கதவு
3) நட்சத்திரங்கள்
4) நண்டு
5) உள்ளங்கை

# கொன்றை வேந்தன்

76) மெத்தையில் படுத்தல் நித்திரைக்கு அழகு.
(பஞ்சணையில் படுத்தலானது,ஒருவன் செய்கிற உறக்கத்திற்கு அழகாகும்).

77) மேழிச்செல்வம் கோழை படாது.
(ஏர்த்தொழிலால் வரும் செல்வமானது, ஒரு காலத்தும் தாழ்வை அடையாது. மேழி- கலப்பை, கோழை-குறைவு)

78) மைவிழியார் தம் மனை அகன்று ஒழுகு.
(மை பூசிய கண்கள் உடைய பரத்தையரது வீட்டினை நெருங்காமல் விலகிச்செல்)

79) மொழிவது மறுக்கின் அழிவது கருமம்.
(உயர்ந்தோர் சொல்வதைக்கேளாமல் நடந்தால், ஒருவன் செய்யும் தொழில் கெடுவது திண்ணம்).

80) மோனம் என்பது ஞான வரம்பு.
(உண்மை மெய்ஞ்ஞானத்திற்கு எல்லையாவது மௌன நிலையாகும்).

(தொடரும்)

# வெசாக்

வைகாசி மாதம் பௌத்தர்களுக்கு மிகவும் விசேஷமான மாதமாகும். பௌத்தர்கள் தெய்வமாக வணங்கும் புத்தர் பெருமான் பிறந்ததும், பரிநிர்வாணம் அடைந்ததும், முக்தியடைந்ததும் இந்த வைகாசி விசாக தினத்தில் தான். அசோக சக்கரவர்த்தியின் மகனான சித்தார்த்தன் என்ற இளவரசன் உலகியல் வாழ்வை வெறுத்து துறவு பூண்டு கௌதம புத்தரானார்.

மாதம் தோறும் வருகின்ற பௌர்ணமி பௌத்தர்களின் வழிபாட்டுக்குரியதாக இருக்கின்ற போதிலும் வைகாசி மாத பௌர்ணமி தினத்தை வெசாக் பண்டிகையாக உலகெங்கும் வாழும் பௌத்தர்கள் கொண்டாடுகின்றார்கள். இத்தினத்தில் விகாரைகளில் விசேட மத வழிபாடுகளும், சில அனுஷ்டானங்களும் இடம்பெறும்.

வெசாக் தினத்தில் விதம் விதமான வெசாக் கூடுகளைச் செய்து வீடுகளை அலங்கரிப்பார்கள். இலங்கையில் பௌத்தர்கள் வாழும் இடங்களிலெல்லாம் விசேட வெசாக் பந்தல்கள் அமைக்கப்பட்டிருக்கும். மிகவும் நேர்த்தியாகவும், அழகாகவும் அமைக்கப்பட்ட வெசாக் பந்தல்களுக்கு பரிசுகளும் வழங்கப்படுவதுண்டு.

வெசாக் பந்தல்களைப்பார்ப்பதென்றால் சிறுவர்களாகிய எமக்கு கொள்ளை ஆசை!

**ம. கீர்த்தவன்,**
**தரம் -5**

# பாடம்

1.அறிவியல் நூல்கள் படி தம்பி!
அறியாமைகளை விட்டுவிடு!
அறிய அறிய விளங்குமடா!
அறியாமை இருள் பறக்குமடா!
2. புதுமை தேவை. தேவையடா!
புராணப்பழமை போதுமடா!
எது-ஏன்-எப்படி என்றாய்வாய்!
இல்லாவிட்டால் அறியாய் நீ!
3. கண்டதை எல்லாம் நம்பாதே!
கண்ணைக்கட்டிக்கொள்ளாதே!
விண்டதை எல்லாம் கேளாதே!
விளங்கா விட்டால் விட்டு விடு!
4. மின்னல் இடி மழை பூகம்பம்
மேல் மண்சரிவு மிகு வெள்ளம்
பென்னம்பெரும் புயல் காட்டுத்தீ
பேரலை எரிமலை பிணி சாவு
5. எல்லாம் எப்படி என்றறிவாய்!
எதையும் நன்றாய் விளங்கிக்கொள்!
பொல்லா மூட நம்பிக்கை போதும் இனியும் நம்பாதே!
6. படிக்கப்படிக்க புதுமைகளை
பறக்கும் பழமை சொல்லாமல்!
அடிக்கடி அவலம் நேருவதை
ஆய்வாய் நுட்பக்கருவிகளால்!
7.பேரலை தந்த பாடமடா!
பெரிய விழிப்பே தேவையடா!
கூரறிவதையே கொண்டிடடா!
குருடாய்ச் செவிடாய்க் கிடவாதே!
8. இயற்கை எதிரி ஆகுமெனில்
எல்லா உயிரும் அழியுமடா!
அயற்செங்கோலை அடையப்பார்!
அதை விட வழியே கிடையாதே!

**செல்வன் அ. கலைமாறன் (அ.இல.19)**
**தி/ஆலங்கேணி வி.ம.வித்.(11 ஆம் தரம்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிவலம்

## புதிய சரித்திரத்தை எழுதுவோம்!

பேரலைகள் பேயலைகளாக வந்ததால்
உறவுகளை, உடைமைகளை இழந்து
பேதலித்துப்போய் நிற்கிறோம்.
இத்தனை உயிர்களையும்
மொத்தமாய்த்தின்ற கடல் காட்டேரி
கண்ணீர் எதுவுமே சிந்தாமல்
சலசலத்துச் சிரிக்கின்றது கரையுடன்
கோயில் கோபுரமும்
மண்டியிட்டது மண்மடியில்
சாமி குடியிருந்த கோயில்களையும்
சுனாமி விட்டு வைக்கவில்லை.
மனிதர்கள் எமக்கு ஆபத்தென்றால்
சாமியிடம் மண்டியிடுவோம்.
சாமிக்கே ஆபத்தென்றால்?
அப்போது கையேந்தினோம்.
உயிர்களைக்காப்பாத்தென.
எங்கள் அழுகுரல் கேட்டு
சாமி கண் திறக்குமுன்
காவு கொண்டது
சுனாமி பல்லாயிரம் உயிர்களை
உணர்விழந்த மனிதர்களாய் நாமின்று.
இயற்கைக்கு எம்மீது என்ன கோபமோ
சீற்றமெடுக்கும் போதெல்லாம்
பலி தீர்க்கப்படுகின்றோம்.
இன்று வீழ்ந்து விட்டோம்
வீழ்ந்தே கிடப்பதற்கு
நாங்கள் ஒன்றும் கோழைகளல்ல.
எழுவோம்
நாளைய சந்தத்திக்கான
புதிய சரித்திரத்தை
நம்பிக்கை "மை" கொண்டு
எழுதுவதற்காகவாவது
எழுதுவோம்
எழுதுவோம்.

கல்லடி றொபட், களுத்துறைச்சிறை,
இலங்கை.

## நினைவிருக்கும் வரை

ஆழக்கடலின் அற்புத
அழகைக்கண்டு ரசித்த மனங்கள்
இன்று அருகில் செல்லக்கூட
அச்சம் அவர்களுக்கு,

கடல் தாயே கருணை காட்டு என
காவியம் பாடிய மனங்கள் -இன்று
கண்ணீரைச்சுமந்த வண்ணம்
காலன் என்கின்றார்களே?

அற்புத அழகையும்,
ஆனந்த வாழ்வையும், வாழ்ந்தவர்கள்
அரை நொடியில் அல்லவா
அமிழ்ந்து போனார்கள்?

அநாதை என்பதை அடியோடு மறந்து
வாழ்ந்தவர்கள்
அபலைகளாய். அனாதரவாய் ஏன்?
அனாதைகளாய்,
எத்தனை ஆயிரம்?

எத்தனை உயிர்கள்?
இழப்புக்கள் இழப்புக்கள் தானே?
இனியாவது இன்னொரு இழப்பு
இப்படி வரவேண்டாம்.

ஆண்டவா! இறந்த மக்களின்
ஆத்மா சாந்தியடையட்டும்.
ஊமையாய் வாடுகின்ற - அந்த
உறவுகளுக்கு ஆறுதல் கொடுத்து விடு.
ஆயிரம் ஆண்டுகள் தான் சென்றாலும்,
அழித்து விட்டுப்போன சுனாமி
சாகும் வரை நினைவிருக்கும்.

முறையூர் முழுநிலா மங்கேஷ்
இலண்டன்

## விழித்தெழு பெண்ணே

ஆணின் ஒரு பகுதி பெண்மையே
ஆதாமின் விலா எலும்பினின்றும் தோன்றிய
ஏவாளும்
அர்த்த நாரீஸ்வர வடிவமும்
அர்த்தம் பொதிந்த ஆதாரங்கள்
ஆணுக்குப்பெண் சரி நிகராக இருந்தென்ன
லாபம்?
பெண் சமத்துவம் சாத்தியமில்லை
என்கிறது சமூகம்
ஒடுக்கு முறைகள் மூலம் பெண்களை
இவர்கள் அடக்கி ஆளவல்லவோ
முனைகின்றார்கள்.

விழிப்புணர்வு என்பது
மண்மீட்பிற்கு மட்டுமல்ல
வன்முறைகளால் நலியும்
பெண் மீட்பிற்குமே
சமத்துவ சமுதாயத்தை பெண்களே முன்
நின்று
சரியான முறையில் வரையறுக்கும் போது தான்
சிறைக்கதவுகளும் திறக்கும் ஆணாதிக்க
வல்லூறுகளின்
சிக்கலான இருள்பிடியினின்று விடிவும்
பிறக்கும்.
அடிமை விலங்கு பூட்டி அஞ்சி வாழ்ந்தது
போதும்
விழித்தெழு பெண்ணே! பாரதியின்
புதுமைப்பெண்ணாய்.

பெண்களுக்கு எதிராக நடக்கும் அத்து
மீறல்கள்
மன உடல் ரீதியான வன்முறைகள்
சுரண்டல்கள்
சமுதாயக்குட்டையில் இயல்பான விடயங்கள்
பாவலர் கிளர்ந்து பெண் விடுதலை பாடி என்ன?
பாலியல் பலாத்காரம், வரதட்சிணைக்கொடு
மைகள் என
சுதந்திரச்சிறகுகள்
அரியப்பட்ட
நிலையில் -
பெண்ணினம்
சுட்டெரிக்கும் நெருப்பிற்குள் சுடரும்
விளக்குகளாகவும்
நிலவறைக்குள் சிக்கிய
சிறைப்பறவைகளாகவும் தவிப்பு.

குடும்ப உறவிலோ எழுதப்படாத
சட்டங்களும்
எல்லை வரையறுக்கப்படாத வட்டங்களும்
வளை கரங்களுக்கு ஆணின் வலிய
கரங்கள்
வளைத்துப்பூட்டும் இரும்பு விலங்குகள் ஒரு
புறம்
பொட்டு வைத்த சுமங்கலிகளையும்
போகப்பொருளாகப்பார்க்கும்
பொறுப்பற்ற சமுதாயத்தில் நிபந்தனைகள்
அற்ற அடிமைகளா?
பெண்ணே விழித்தெழு - வீரமுடன்
வெளியே வா
உடைத்து எறி அடிமை விலங்கை.

பெண் உரிமைக்குரல்கள் ஓங்கி எழும்ப
எழும்ப
வன்முறை வடிவங்களும் உச்ச நிலையை
அடைகின்றன
நிலை நிறுத்திய பெண்களின் பாதகமான
பக்கங்களில்
நிறைவான மாற்றம் காண்பது மனித
நேயத்தின் தார்மீகப்பணி
பெண்கள் தினம் வெறும்
அடையாளமாகிப்போகாமல்
பெரியதொரு மாற்றத்தை தரவேண்டும்
மாதிரம் எட்டும் மகிழ்ந்து பாடி வரவேற்று
மாதர் மாதுரியம் பேசும் தினமாக
மிளிரவேண்டும்.

அகம் பெண்ணுக்கு புறம் ஆணுக்கு என்ற
அந்தக்காலம் மலையேறி புதிய திருப்பு
முனையில் பெண்
அல்லியாய், ஜான்ஸி ராணியாய், ஜோன்
ஒவ் ஆக்கா
வீரப்பெண்கள்வரிசையில் புதுப்பெயரில்
புதிய புறநானூறு எழுத வந்த காவியங்கள்
புலிப்பாய்ச்சலால் களமாடிய வீரத்திற்கு
சொந்தக்காரர்
போராற்றலில் பால் பாகுபாட்டினைத்தகர்த்து
புது நெறியை இனங்காட்ட வந்த
சூரியப்புத்திரிகள்.

அரசியல் சமூக, கலை, பண்பாட்டு
வடிவங்களில்
பெண்கள் சுதந்திரம் கௌரவம்
மதிக்கப்பட்டு
வன்முறை அச்சம் நீங்கிட ஒன்றிணைவோம்.

கேட்டுத்தராததை கேளாமல் நாமே
எடுத்துக்கொண்டு
சிகரங்களைத்தொட்ட பெண்கள்
சிந்தை கலங்கிடலாமோ
சிறகு விரித்துப்பறப்போமே!
சுதந்திர வானில் நிதமும்.

-உரும்பையூர்-தேவராணி
சிவராஜா, சரே-கனடா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி இல.19

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | ■ | | 3 | | | 4 | 5 |
| 6 | | | | ■ | | | | 7 | ■ | | |
| | ■ | | | 8 | | | | 9 | ■ | | |
| | ■ | 10 | | | 11 | ■ | | | ■ | | ■ |
| | | | 12 | | | ■ | | | | | 13 |
| 14 | | 15 | ■ | 16 | | | ■ | 17 | | | |
| | ■ | 18 | | | | | ■ | | | 19 | 20 |
| 21 | | | | | ■ | | | 22 | ■ | | |
| | 23 | ■ | 24 | | | | | ■ | ■ | | |
| ■ | 25 | | | | ■ | | | | | | 26 |
| | | | | | | 27 | ■ | 28 | | | |
| 29 | | | | | ■ | 30 | | | | | |

பெயர்:..........................................................................................

முகவரி:........................................................................................

..................................................................................................

## இடமிருந்து வலம்

1) கறுப்பு நிறத்தில் இருக்கும் உறுதியான மரம் (5)
6) காடு- குழம்பியுள்ளது. (4)
10) பிறரை மதிக்காமல் தன்னைப்பற்றி உயர்வாக எண்ணும் போக்கு (4) (குழம்பியுள்ளது.)
16) நீர் வேட்கை (3)
17) இரு தரப்பினருக்கிடையே இணைப்பாக இருந்து ஒப்பந்தம் முதலியவற்றைப்பெற்று முடித்துத்தரும் தொழிலைச்செய்பவர் (4)
18) உயரமாக மேலெழுந்து வட்டப்பாதையில் சுற்றி வரக்கூடிய ஒரு விளையாட்டுச்சாதனம் (5) (குழம்பியுள்ளது)
21) சிறந்த குண நலன்களைப்பெற்றிருப்பவர் (5)
24) வீரத்தின் அடையாளமாக போரில் பெற்ற காயம் (5)
25) உண்மையான ஆன்மீக நெறியை அறியாதவன் (4)
28) இறந்தவர்களை இப்படியும் சொல்வார்கள் (4)

ஒரு வருட தமிழ்உலகம் இலவச பிரதிகளையும் 10 ஸ்ரேலிங் பவுண்களையும் பரிசாகப்பெறுங்கள்.




29) மகாத்மா காந்தி கடைப்பிடித்த கொள்கைகள் (5)
30) பிறரிடம் அல்லது பிறவற்றிடமிருந்து வேறுபடுத்திக்காட்டும் தன்மை (6)

## வலமிருந்து இடம்

5) தலைவியின் வளர்ப்புத்தாயை பண்டைய இலக்கியங்களில் இப்படிக்கூறுவதுண்டு (6)
7) குற்றத்துக்கு அல்லது தீய செயலுக்கு துணை போவதை இப்படிக்கூறுவர் (4)
8) இது ஒரு இலகு பொறி (3)
9) வீட்டுக்கு பெயர் சூட்டும்போது சிறப்புப்பெயரின் பின் 'இருப்பிடம்' என்ற பொருள்பட இணைக்கப்படும் சொல் (4)
12) உணவு கிடைக்காத நிலை (4)
13) ' ஆடிப்........................ தேடி விதை' என்பது பழமொழி (4) (குழம்பியுள்ளது)
15) பாட்டு வகைகளுள் ஒன்று (3)
20) நிர்வாக வசதியை கருதி பிரிக்கப்பட்ட நிலப்பகுதி (4) (குழம்பியுள்ளது)
22) அண்மையில் கமலஹாசன் நடித்து வெளிவந்த திரைப்படத்தின் பெயரின் முன் பகுதி (3)
23) துணி நெய்வதற்கான சாதனம் (2)
26) ஒலிப்பதிவு வசதி இல்லாத காலத்தில் தயாரித்த திரைப்படத்தை இப்படிக்கூறுவர் (6) (குழம்பியுள்ளது)
27) தான் முன் வைக்கும் கருத்தின் நியாயமின்மையை உணர்ந்தும் வீணாகச்செய்யும் வாதம் (7)

## மேலிருந்து கீழ்

1) தேயிலைத்தோட்டத்தில் மேற்பார்வையிடும் தொழிலைச்செய்பவர் (4) (குழம்பியுள்ளது)
2) பொறுப்பேற்று கவனிக்கும் இல்லம் (5) (குழம்பியுள்ளது)
3) நடனம் - இப்படியும் சொல்லலாம். (5) (குழம்பியுள்ளது)
4) எங்கும் நிறைந்திருக்கும் தன்மை (5)
5) கட்டப்பட்ட மலர் தொகுப்பு (3)
7) வேதங்களில் தத்துவ ஆராய்ச்சி நிறைந்த பகுதி (6)
8) ஒரு செயலைச்செய்ய மூல காரணமாக விளங்குபவன் (4)
10) ஒரு இசைக்கருவி (4)
11) பன்றி- இப்படியும் சொல்லலாம் (4)
13) இலையால் வேயப்பட்ட குடில் (5)
14) கொலை, திருட்டு போன்ற குற்றங்களில் தடயங்களை சேகரித்தல் (4)
19) பெருமளவில் உறுப்பினர்களும் பார்வையாளர்களும் கலந்து கொள்ளும் கூட்டம் (3)

## கீழிருந்து மேல்

30) இயலாமை, இல்லாமை முதலியவற்றால் வருந்திக்கலங்கும் நிலை (4)

## குறிப்பு

குறுக்கெழுத்துப்போட்டியில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கையும், ஆர்வமும் அதிகரித்து வருவதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். சரியான விடையை எழுதி அனுப்புவோரில் அதிஷ்டசாலி ஒருவருக்கு ஒரு வருடத்துக்கான தமிழ்உலகம் இலவச பிரதிகளும் 10 ஸ்ரேலிங் பவுண்களும் பரிசாக வழங்கப்படும். சரியான விடைகளை எழுதி அனுப்புவோரில் இரண்டாவது அதிஷ்டசாலிக்கு ஒரு வருடத்துக்கான தமிழ் உலகம் இலவச பிரதிகளும், மூன்றாவது அதிஷ்டசாலிக்கு ஆறு மாதங்களுக்கான தமிழ்உலகம் இலவச பிரதிகளும் பரிசாக வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட குறுக்கெழுத்துப்போட்டிக்கான அட்டவணையுடன் உங்கள் விவரங்களையும் கீழ் உள்ள முகவரிக்கு **10/06/2005** ஆம் திகதிக்கு முன் எமக்குக்கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

### குறுக்கெழுத்துப்போட்டி இல: 17 இற்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 சி | ந் | த 2 | னா | வா 3 | தி | ■ | ம் | ச | பா 4 | ர | த 5 |
| ற் | ■ | டு | ■ | ஞ் | ம் | ப | ச 6 | ■ | யி | ■ | ரு |
| ற | ■ | க் | ■ | 7 சை | ப் | பி 8 | ர | ஸ் | ர | ■ | ண |
| ர | ங் | கு | கு 9 | ■ | 10 ஆ | ர | 11 வா | ர | ம் | ■ | ம் |
| 12 ச | சா | ஞ் | ம் | ர | ■ | ள | ய் 13 | வு | ரை | ஆ 14 | ■ |
| ன் | ■ | ச 15 | பை | ■ | வி 16 | ய | ப் | பு 17 | ■ | டு | கா 18 |
| 19 அ | ரு | வ | ரு | ப் | பு | ம் | பு | ர | ■ | க | ள |
| ன் | றி | ப | சி 20 | ற் | ம் 21 | ■ | 22 ப | ட் | டு | ள | ர |
| தி | சி | ர | த் | ம் 23 | ■ | தை | ந் | சி 24 | ■ | ம் | ம் |
| ■ | று | சே | தை | பு 25 | ■ | ந் 26 | த | ம் | ம | ■ | ற |
| ம் 27 | வி | கா | ர | ■ | ஊ 28 | க 29 | ம் | ■ | ல் | ன | பு 30 |
| து 31 | ச் | ச | ம் | ■ | ■ | கா 32 | ரு | சி | ங் | ர | ம் 33 |

குறுக்கெழுத்துப்போட்டி இலக்கம் -17 இற்கான விடைகளை ஏராளமானோர் அனுப்பி வைத்திருந்தனர். எனினும், மிகச்சரியான விடைகளை எவரும் அனுப்பாததால் பரிசுக் குரியவராக எவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

அனைத்து நாட்டுத்தொடர்புகளுக்கு:

**Tamilulakam**
**899-901 Finchley Road,**
**London NW11 7PE,UK**
**Tele : 0044 20 8455 9001**
**Fax : 004 20 8731 7870**
**e- mail : tu@globallanka.co.uk**

இலங்கைத்தொடர்புகளுக்கு:

**Tamilulakam**
**Colombo Plaza Building,**
**50-1/8, First Floor,**
**Galle Road, Colombo-06**
**Tele/Fax : 0094 112 59 1047**
**e- mail : tugloballanka@sltnet.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவள்

ச. முருகானந்தன்

நினைவுகளின் ஊர்வலத்தில் மூச்சுக் காற்று படும் நெருக்கத்தில் சந்திரா! முதல் முத்தத்திற்கிடையே சில கணங்கள்! கடித்த நுளம்பு நினைவைக்கலைத்தது. நுளம்புக்கடி தாங்க முடியவில்லை. போர்வையை விலக்கி விட்டு எழுந்து உட்கார்ந்தேன். கொசு வலையின் ஓட்டைகளுக்குள்ளால் நுளம்பு சுதந்திரமாக வந்து போய்க்கொண்டிருக்கின்றது. புதிய வலை வாங்கலாம். எனினும் இந்த வலையே இன்னும் பாவிக்கக்கூடியது. பொத்தல்களைத்தைத்தால் போதும். அதற்கு எங்கே நேரம்? இல்லையில்லை, நேரத்தை ஒதுக்கி விடவில்லை என்பது தான் உண்மை. நுளம்புத்திரியும் ஒத்துக்கொள்ளாது. காலையில் எழும்போது தலையிடிக்கும் இரவிலும் நாசு அரிக்கும். இதனால் திரியே வாங்குவதில்லை.

இல்லத்தில் ஒரு இல்லாள் வந்து விட்டால் எல்லாம் உரிய நேரத்தில் நடக்கும். இளமை தொலையப்போகிறது. இன்னும் அதற்கு வேளை வரவில்லை. அக்கா, அடுத்தடுத்துப்பிறந்து விட்ட இரண்டு தங்கைகள். அப்பா நேர காலத்துடன் போய்ச்சேர்ந்து விட்டார். அப்புறம் அம்மாவுக்கு முட்டுக் கொடுத்தது எல்லாம் நான் தான். அக்காவுக்கும் முதலாவது தங்கைக்கும் மாப்பிள்ளை தேடிச்செய்து வைத்ததில் காலம் கரைந்து விட்டது. கையில் இருந்தவையும் தான்.

சுவரில் தொங்கிய அப்பாவின் படத்தைப்பார்த்தேன். வாடாத செயற்கை மாலை. படத்தை அலங்கரித்துக்கொண்டிருந்தது. தொடர்ந்து அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. ஏதோ மனதைப்பிசைந்தது. கண்டிப்புடனும் எல்லையில்லா அன்புடனும் வளர்த்து ஆளாக்கிய தெய்வம். வேலையால் திரும்பிக்கொண்டிருந்தவர், கெலியிலிருந்து பாய்ந்த சன்னத்தொடர்களில் ஒன்று தலையைப்பதம் பார்த்திட, அந்த இடத்திலேயே இரத்த வெள்ளத்தில் துடிதுடித்து அடங்கிப்போனார். வருடங்கள் ஓடிக்கரைந்த பின்னரும் அவர் பிரிவு ஏற்படுத்திய வடு மாறுவதாயில்லை.

அம்மா இடையிடையே அப்பாவை ஞாபகப்படுத்தி அழுவாள். அப்பா இருந்த போது அவரோடு சத்தம் போட்டு சண்டையிட்டு இறுதியில் ஆற்றாமையால் அழுததைப்பார்த்திருக்கின்றேன். அம்மா மாறவில்லை. அப்பாவிற்குப்பிறகாவது அம்மா அழுகையை விட்டு விடுவாள் என்று நினைத்தேன். அழாமலிருக்க அம்மாவால் முடிவதில்லைப்போலும்.

அவளைப்போல் எனக்கு அழுகை வருவதில்லை. ஆண்களுக்கு கல் மனதோ? அன்பும் பாசமுமாக வளர்த்த அப்பா இறந்த சேதி கேட்டு ஒரு கணம் அதிர்ந்தேன். மனதில் எல்லையில்லா சோகம் முட்டி மோதினாலும் நான் அழவில்லை. கடைசியாக அழுத சந்தர்ப்பத்தை நினைவுகளில் தேடினேன். பிரேத அடக்கத்திற்காக வீட்டை விட்டுத்தூக்கிப்புறப்பட்ட போது பலரும் வெடித்தழ அன்று அழுத ஞாபகம். அதுவும் நீண்ட நேரம் அழவில்லை. அம்மாவும் தங்கைகளும் சுற்றி நின்று கட்டி அழுதபோது கூட வெறும் விசும்பல் தான் ஏற்பட்டது.

லைற்றை நூர்த்து விட்டு மீண்டும் வந்து படுக்கிறேன். கலைந்து போன தூக்கத்தை மறுபடியும் கொள்ள முடியவில்லை. இரவு அரக்கனின் அமைதியில் மனதில் ஆயிரம் வண்ணச்சிட்டுக்கள் ஊர்வலம் வருகின்றன. நடுவே தேவதை போல் சந்திரா.

வெட்டிப்போன அவள் பார்வை மனதை அரிந்து ரணமாய் வலித்தது. தினமும் எத்தனையோ பெண்கள் தரிசனமாகின்றார்கள். ஆனால் எவளாலும் இவள் நினைப்பைத் தோற்கடிக்க முடியவில்லை. எனது ஸ்கலிதக் கனவுகளில் கூட அவள் தான் வந்து போவாள். அவளிடமான ஈர்ப்பு அதீதமானது.

சந்திரா வேறு யாருமல்ல, எனது மாமன் மகள் தான். ஆனாலும் மகா அழுத்தக்காறி. யாரும் அப்படி இப்படி நெருங்க முடியாது. மாமாவுக்கு ஒரே பெண். படித்துப்பட்டம் பெற்று ஆசிரியையாக வலம் வருகின்றாள். மாமாவின் சொத்துப்பத்திற்குக்குறைவில்லை. தலையணைக்குள் பஞ்சுக்குப்பதிலாக ரூபா நோட்டுக்கள் தான் இருக்கும் என்பார்கள். எனினும் ஆடம்பர வாழ்வு கிடையாது. மகளையும் கடிவாளமிட்டே வளர்த்திருந்தார். பிரம்மன் சந்திராவைப்படைத்த பொழுது எதுவித குறையையும் வைக்கவில்லை. பார்ப்போர் மயங்கும் கட்டழகி. படிக்கும் காலத்திலேயே அவள் மீது எனக்கு ஒரு கண். கண் என்றால் கண் மட்டும் தான். கதைத்துப்பேசக்கூட வாய்ப்பில்லை. மாமாவின் கழுகுப் பார்வைக்கு பயம். மறுபுறம் சாந்தமான மாமியைப்பார்க்கும்போது தான் மனதில் தென்றலடிக்கும்.

எனது மச்சாள் தானே என்பதால் சந்திராவுக்கு போட்டியில்லை என்று நினைத்து விடாதீர்கள். மாமன் மகள் வீதி வலம் வந்தால் கடை வீதியே கலகலக்கும். வெளியாரை விடுங்கள். ஊதி விரட்டி விடலாம். உள்ளுக்குள்ளேயே பலத்த போட்டி. எனது சொந்தத்தம்பி முதல், பெரியப்பா பையன்கள், சித்தப்பா புத்திரர்கள் எல்லோருமே எனக்கு வில்லன்கள். அல்லது நான் அவர்களுக்கு வில்லன். மணந்தால் அவளையே மணப்பது என்று எல்லோரும் கச்சை கட்டிக்கொண்டு நிற்கின்றார்கள். ஆனாலும் எனக்கொரு நம்பிக்கை சந்திரா என்னைத்தான் விரும்புவாள் என்று!

ஆனால் எல்லோருமே அப்படித்தான் நினைத்துக்கொண்டிருப்பது பின் நாளில் தெரிந்தது. எனினும் எனது கற்பனையும், நம்பிக்கையும் தகர்ந்து போகவில்லை.

மனதிலே தோன்றி விட்ட ஒரு தலைராகத்தை இரு கை ஓசையாக்க முடியவில்லை. வீட்டுச்சுமைகளில் தோய்ந்து அமிழ்ந்து என் எதிர்காலம் பற்றி சிந்திக்க வாய்ப்பின்றி இயந்திரமாய உழைத்துக்கொண்டிருந்தேன்.

அக்காவின் கலியாணம் முடிந்து தங்கையரில் ஒருத்திக்கு மாப்பிள்ளை தேடிக் கொண்டிருந்தபோது தான் அந்த இனிப்பான சேதி கிடைத்தது. மாமா அம்மாவிடம் சந்திராவுக்கு என்னைக்கேட்டு வந்தார். சந்திரனுக்குப்போன மகிழ்ச்சி எனக்கு.

எனினும் அத்தனையும் அடுத்த கணமே தவிடு பொடியாகின. "அண்ணை உதை மட்டும் கேளாதையுங்கோ. சின்னவளுக்கும் முடிச்ச பிறகுதான் யோகனை விடேலும்........." என்று கறாராய்ச் சொன்னாள் அம்மா.

மாமாவின் முகம் ஓடிக்கறுத்து விட்டது. "சீதனம் நிறையத் தரலாம். பிள்ளையளின்ரை பெயரிலை காசைப்போடு. ஒண்டுக்கை ஒண்டுதானே பிறகும் பார்த்துச் செய்யலாம்......."

"காசு பணம் இல்லை முக்கியம். நல்ல மாப்பிள்ளை கிடைக்கவேணுமே. யோகன் இருந்தால் தான் அவளுக்கும் மதிப்பு.................." அம்மா மசியவில்லை. மாமாவைப்போலவே என் மனக்கோட்டையும் தகர்ந்தது. வீடு தேடி வலிய வந்த சீதேவியை அம்மா மறுத்து விட்டார். அன்றிலிருந்து சந்திராவை மறக்க முயன்றேன். இன்று வரை அந்த முயற்சி தோல்விதான். வெட்ட வெட்ட தழைக்கும் வேலா வீட்டுப்புளி போல அவள் மீதான மானசீகக்காதல் தழைத்து வளர்ந்தது.

ஒரு தங்கையின் திருமணமும் ஒப்பேறி விட்டது. திருமணத்திற்கு வந்திருந்த சந்திரா என்னைப்பார்த்து சிரித்தாளா, முகத்தை வெட்டித்திருப்பினாளா? என்று புரியவில்லை. அவளது முகத்தில் தெரிந்தது ஏமாற்றமா?, கோபமா என என்னால் இனம் காண முடியவில்லை. சின்னவள் சுமதி கொண்டு வந்த சேதி சரிந்த ஆல மரத்திற்கு விழுது முட்டுக்கொடுத்ததுபோல் என்னை நிமிர்ந்து உட்கார வைத்தது. "அண்ணை சந்திரா மச்சாளுக்கு உங்களில ஒரு கண்......" கண் சிமிட்டிக்கூறினாள் சுமதி. "ஏன் சொன்னவளே?" தவிப்போடு கேட்டேன். உடனே, "சொன்னால் தான் காதலா....?" என்று திருப்பிக்கேட்டாள் சுமதி. சுமதி மட்டும் தான் என்னோடு சுட்டித்தனமாகக்கதைக்கக்கூடிய சகோதரி.

"உங்களுக்கும் சந்திரா மச்சாளிலை விருப்பம் தானே?"

"ஆர் சொன்னது? அடி வாங்கப்போறாய்"

"மச்சாள் தான் சொன்னவ...."

"உண்மையாய்?"

இதயத்தின் ஆழத்தில் பதுங்கிப் போயிருந்த சந்திரா தூசி தட்டப்பட்டு மறுபடியும் மேலெழுந்து இரத்தச்சுற்றோட்டத்தில் கலந்தாள். பார்வைகளின் பரிமாற்றம் காதலைப்பகிரங்கமாக பறை சாற்றின. பாதைகளில் சந்தித்து ஓரிரு வார்த்தைப்பரிமாற்றம். காதல் இனித்தது. மனது நிரம்பிக்கனத்தது. கனதியில் வலி தெரிந்தது. சுவையான சுமை என்பார்களே, அப்படி!

தூக்கத்திற்கும் நினைவுகளுக்கும் தீராத பகை. தூக்கத்தை நினைவுகள் விரட்டியடித்து விடுகின்றது. காதல் வலி என்றால் சொல்லவே தேவையில்லை. அது சங்கிலி போட்டு விடுகின்றது. இன்னும் சொல்லப் போனால் காதல் போல ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளைக்கொல்லாமல் கொல்வது வேறொன்றுமில்லை. அது உள்ளத்திலிருந்து கொண்டே உடலையும் மனதையும் வதைக்கின்றது.

சந்திராவும் என்னைப்போல் தூக்கம் வராத இரவுகளில் என்னை நினைத்து உருகுவாளா? காதலை ஒவ்வொருவரும் தான் அனுபவித்த மாதிரித்தான் சொல்ல முடியும். ஆனாலும் அது நிஜம். காதல் இளையோரை வதைக்கிறது. உண்மை. ஒரு மனிதன் எதிலிருந்து வேண்டுமானாலும் தப்பிக்கொள்ளலாம். ஆனால் காதலில் இருந்து தப்பிக் கொள்ளவே முடியாது என்று தோன்றியது.

நான் இதை என் அனுபவத்திலிருந்து சொல்கிறேன். என் அனுபவம் மட்டுமல்ல. நிறையப்பேரின் அனுபவமும் இதுதான். ஆண்-பெண் இருபாலாருக்கும் அப்படித்தான்.

காதலுக்கு என்று உருவம், வடிவம் உண்டா? காதலர்களைக்காட்டலாம். காதலைக்காட்ட முடியுமா? இப்படித்தான் இருக்குமென்று ஒப்பிட முடியுமா? அதை உணர முடியும். மனம் தான் உணரும். சந்திராவும் நானும் பேசவில்லை, பழகவில்லை. ஆனால் காதலைப்பரஸ்பரம் உணர்கிறோம். இடையிலுள்ள சிலரும் இதைப்புரிந்து கொள்கின்றார்கள். - தங்கை சுமதியைப்போல்!

காதலுக்குப்பச்சைக்கொடி காட்டிய எனக்கு கலியாணத்திற்கு காட்ட முடியவில்லை. சுமதியின் அலுவல் முடிய வேண்டுமே.

மீண்டும் நுளம்பு கடிக்கிறது. இங்கே மலேரியா பயமில்லை. டெங்குவும் இல்லை. ஆனால் தூக்கம் தானில்லை. எங்கேயிருந்து இவ்வளவு நுளம்புகள் புறப்பட்டு வருகின்றன? அதிகாலையில் தான் கண்ணயர்ந்தேன்.

****

**ம**றுநாள் மகிழ்வாக விடிந்தது. சுமதியைப்பெண் கேட்டு வந்திருந்தார்கள். காதலா? கள்ளி! சொல்லவே இல்லையே! "ஜாம் ஜாம் என கொட்டு மேளம் வரை தடங்கலின்றியே நடந்து முடிந்தது.

நான் இனி சுதந்திரப்பறவை. சந்திராவிடம் பறந்து சென்றேன். "ஐ லவ் யூ". என்றேன். "ரு லேட் யூ காவ் மிஸ் த பஸ். தாமதமாகி விட்டது. பஸ்ஸைத்தவற விட்டு விட்டீர்கள்..... "என்றாள். "புட் போட்டிலாவது இடம் கிடைக்குமா" என்றேன். "முயற்சியுங்கள் விழுந்து விட்டால் நான் பொறுப்பாளி அல்ல." முற்சித்தேன். முயற்சி சித்தித்தது. வாழ்வும் தித்திக்க ஆரம்பித்தது.

வீட்டில் அம்மா குண்டைத் தூக்கிப் போட்டாள்.

"யோகன்.... உனக்கு கலியாணம் ஒழுங்கு பண்ணிட்டன்... பதினோராம் திகதி நாள் வச்சிருக்கு...."

"ஐயோ என்னைக்கேட்காமல் ஏன் முடிவு செய்தியள்?" பதறினேன்.

"ஏன் பதறுகிறீர்கள் அண்ணா? சந்திரா மச்சாள் தான் பொம்பிளை... " சுமதி சிரித்தாள்.

சிரித்தேன். சிலிர்த்தேன். மலர்ந்தேன்.

கொட்டு மேளம் கொட்டியது.

பாலோடு வந்தவள் பாதம் தொட்டு வழிபட்டாள். "இதென்ன சந்திரா அவளை அருகே எடுத்து அணைத்தேன். லைற்றையும் தான்.



நுளம்பு கடிக்கவில்லை. அல்லது கடித்தது தெரியவில்லை. முப்பது நாள் அறுபது நாள் அப்படி இப்படிக்கழிந்தது.

"ஐம்பதுக்கு ஐம்பது" என்றேன். "ஆண் பெண் சமத்துவம்"

"இல்லை இல்லை ஐம்பத்தியொன்றிற்கு நாற்பத்தியொன்பது" என்றாள். ஏற்றுக் கொண்டேன். அப்புறம் தான் தெரிந்தது. அவள் ஐம்பத்தியொன்று கேட்டது தனக்கு என்று. பின்னர் ஒரு நாளில் இதை நண்பனிடம் கூறினேன். "பரவாயில்லையே .... எங்கள் வீட்டில நூற்றுக்கு சைபர்..." என்று ஆறுதல் கூறினான்.

சந்திரா எனக்கு மனைவியாக வந்ததும் நான் வாழ்வில் படிப்படியாக உயர்ந்தேன். பதவியில், எழுத்துத்துறையில், சமூகப்பணியில்.....

எல்லாவற்றிலுமே சந்திரா ஊக்கியாக நின்று தூக்கி விட்டாள். என்னை உயர்த்தியவள் தானும் உயர்ந்தாள். முதலில் மகிழ்ந்தேன். பின்னர்......?

யோகனின் மனைவி என்று சந்திராவைச் சொன்னவர்களெல்லாம், இப்போது என்னை சந்திராவின் கணவர் என்று சொன்னார்கள். மனதில் ஏதோ ஒன்று நெருடியது. பெண் விடுதலையை எழுத்தில் வடித்தவன் நான். ஜீரணிப்பதில் ஏனோ கஷ்டம் தெரிந்தது.

திருமணமாகி ஐந்தாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் நாள் ஞாயிற்றுக்கிழமையில் வந்ததில் எனக்கு மகிழ்ச்சி. ஏதேதோ திட்டமிட்டேன். நான் ஞாபகமூட்டும் வரை சந்திரா மறந்து போய் விட்டாள்.

"இன்று முழு நாளும் என் கூடவே" என்றேன். இயந்திர மயப்படுத்தப்பட்டு விட்ட வாழ்வு நீரோட்டத்தில் எனது நப்பாசை" சொறி டார்லிங்... காலையில் லயன்ஸ் கிளப் கூட்டமிருக்கு... மாலையில இந்து மாமன்ற விடுதியில் கூட்டமிருக்கு... இடையில வேணுமென்னா லஞ்சுக்கு எங்காவது செல்வோம்...." ஏமாற்றத்திற்குள்ளும் சிறிது ஆறுதல்; எனினும் மனதின் புழுக்கம் குறையவில்லை.

மதியம் அவளுக்காகக்காத்திருந்ததில் சலிப்புத்தான் மிஞ்சியது. தொலைபேசி அழைப்பு வந்தது. "யோகா..... சொறி.... இங்கே பெண் விடுதலை பற்றி ஒரு டிஸ்கஸன். வெரி இன்ரரெஸ்ரிங்... லஞ்சும் அரேஞ் பண்ணியிருக்கிறாங்க. தலைமை வகிக்கிறதால விட்டு விட்டு வரமுடியவில்லை... சாப்பிடுங்க. இரவு டின்னர் ஒன்றாய்" எரிச்சலை அடக்கிக்கொண்டேன். ஒரு குழந்தை இருந்தாலாவது வீட்டோடு நிற்பாள் என மனது நினைத்தது.

மனது வலித்தது. பெண்ணும் ஆணைப் போல சம உரிமையுள்ள பிறவிதானே? அப்புறம் ஏன் எனக்கு கோபம் வருகிறது. சந்திரா என்னை நேசிக்கிறாள். - உயிருக்கு உயிராக இன்னமும் காதலிக்கிறாள். கலியாணத்தின் பின்னான காதல் இனிமையானது. ஆனாலும்....

புத்தகங்கள் தோழமையாகின. நேரம் போனது தெரியவில்லை. வாசலில் அழைப்பு மணி. கதவைத்திறந்தேன். எதிர்பார்த்தது போல் சந்திராதான். மனதின் தகிப்பை முகம் காட்டியதை அவள் உணர்ந்து கொண்டு என் அருகே வந்து கை விரல்களைப்பிடித்துக்கொண்டாள். "காக்க வச்சிட்டேனா?"

என் கோபம் தணியவில்லை. "டின்னருக்குப்போவோமா?.... " மீண்டும் சந்திரா என் முகத்தைப்பார்த்தாள். பதில் இல்லாது போகவே என் நாடியைத்தடவிக்கொடுத்தாள். "என்னிலை கோபமா?" என் தலை அசைந்தது.

"டின்னருக்குப்போவோம். குளிச்சிட்டு வருகிறேன். போகிற போக்கில் ஒரு முத்தம் தந்தாள்"

குளித்து விட்டு வந்தாள் தேவதை போல நின்றாள். டின்னருக்குப் போக வேண்டிய அவசியம் இருக்கவில்லை. நெருக்கத்தில் இருந்தபோது "என்ன பரிசு தரப் போகின்றீர்கள்" என்றாள். வாங்கி வைத்திருந்த வைரத்தோட்டை எடுத்து நீட்டினேன். முகம் மலர்ந்தாள்.

"நீ என்ன பரிசு தரப்போகிறாய்? என்று கேட்டேன். காதோடு சொன்னாள். "குழந்தை."

(சிறகடிக்கும் சிந்தனையிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்தரும் இணையத்தளங்கள்

By: Sharmila Ratnasingam

## இணையம் மூலம் உயர்கல்வி...

NetVarsity.com
Because learning never stops

இணையம் மூலம் உயர்கல்வி பெறுவது தற்போது பிரபல்யம் அடைந்து வருகிறது. தபால்மூலக்கல்வியில் பாடங்கள் தபால் மூலம் அனுப்பப்படும். ஆனால் இணையவழிக்கல்வி முறையில் மாணவருக்கும் கல்வி நிறுவனத்துக்கும் இடையிலான பாலமாக இணையம் விளங்குகின்றது. இந்த தகவல் தொடர்பு முறையை பயன்படுத்தி பாடங்கள் இணையம் வழியே அனுப்பப்படும். அது போன்று மாணவருக்கு வழங்கப்படும் ஒப்படை வேலைகளை அவர் இணையம் மூலமாக கல்வி நிறுவனத்துக்கு அனுப்பி வைக்க முடியும்.

இந்த வகையான சேவையை வழங்கி வருகின்றது www.netvarsity.com என்ற வெப்தளம்.

இணைய வழிக்கல்வியில் தபால் மூலம் படிப்பது போன்ற அத்தனை வசதிகளும் கிடைப்பதுடன் பாடங்களை தபாலில் அனுப்புவதற்கான நேரத்தை மிச்சமாக்கும் வசதி மேலதிகமாக காணப்படுகின்றது.

மேலும் தகவல் தொடர்புத்துறையில் பெரும்பாலான பரீட்சைகளை இப்போது இணையம் மூலமாகவும் எழுதக்கூடியதாக இருப்பதால் தொழில் செய்வோர் பகுதி நேரமாக உயர்கல்வியை மேற்கொள்வதற்கு வசதி கிடைக்கின்றது.

## வாங்கும் பொருட்களின் விலைகளை ஒப்பிட வேண்டுமா?

MOUTHSHUT.com

ஒரே தரமுடைய, ஒரே அளவுடைய ஒரு பொருளை வெவ்வேறு இடங்களில் வெவ்வேறான விலைகளில் வாங்கிய அனுபவம் உங்களில் பலருக்கு இருக்கலாம். அந்த வேளையில் வியாபாரிகளை மனதுக்குள் திட்டிய சந்தர்ப்பங்களும் உண்டு அல்லவா?

இந்தப்பிரச்சினையைத்தீர்க்க வாங்கும் பொருளின் விலையை ஒரு நிறுவனத்துடன் இன்னொரு நிறுவனத்தை ஒப்பிட்டு பார்த்து வாங்கும் வசதி இருந்தால் எவ்வளவு நல்லது என்று மனதுக்குள் அங்கலாய்த்தவர்களும் உள்ளனர். இதோ அவர்களது குறையை போக்கும் சேவையை செய்து வருகிறது www.mouthshut.com என்ற வெப்தளம்.

இந்த தளம் இலட்சக்கணக்கில் பொருட்கள் மற்றும் சேவைகளை ஒப்பிட்டு கொள்வனவாளர்கள் தங்கள் கையிருப்புக்கு ஏற்ற விதத்தில் பொருட்களை கொள்வனவு செய்து கொள்ள உதவுகின்றது.

இதற்காக 'சார்ட்' என்ற தொழில் நுட்பத்தை தளம் பயன்படுத்துகின்றது. விற்பனையாளருக்கும் கொள்வனவாளருக்கும் இடையில் பாலமாக விளங்குவது தான் இந்த தளத்தின் நோக்கம் என்று கூறுகின்றனர் தளத்தை உருவாக்கியவர்கள்.

மேலும் பொருட்கள் பற்றிய விமர்சனங்கள் இன்னொரு பாவனையாளருக்கு பயன்படும் விதமாக உள்ளன.

முதன் முதலில் ஒரு தயாரிப்பை வாங்கப்போகிறோமே எப்படியிருக்குமோ என்ற அச்சத்தில் கடைக்கு செல்பவர்கள் இந்த தளத்திற்கு ஒரு முறை விஜயம் செய்வது நல்லது. அதே வேளை பாவனையாளர்கள் தான் தளத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கின்றார்கள் என்ற கருத்தில் சிறிதளவிலும் மாற்றமில்லை என்றும் கூறுகின்றனர் தளநிர்வாகிகள்.

## புகைப்படங்களை சி.டியில் பதிந்து பாதுகாக்க....

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் நடைபெறும் நிகழ்வுகளில் ஒரு சில மறக்க முடியாத, வாழ்க்கையில் எப்போதும் நினைத்துப் பார்க்கக்கூடியனவாக அமைந்து விடுகின்றன. இந்த நிகழ்வுகளை புகைப்படங்களாக்கி வைத்து பார்த்து மகிழ்கிறோம். தொழில் நுட்பவளர்ச்சி நவீன முறையில் மேலும் உதவி செய்கின்றது.

இவ்வாறான புகைப்படங்களை சி.டியில் பதிந்து பாதுகாத்து வைத்துக்கொள்ளலாம். புகைப்படங்கள் போன்று சி.டிக்கள் அவ்வளவு எளிதில் களையிழந்து போவதில்லை. இடத்தையும் பிடிப்பதில்லை. புகைப்படங்களை இமேஜ் பைல்களாக மாற்றி இந்த பைல்களை சிடிக்களில் பதிந்து வைத்துக்கொள்ளும் முறையை டிஜிட்டல் தொழில்நுட்பம் நமக்கு வழங்கியிருக்கின்றது. அதே நேரம் புகைப்படங்களை நிகழ்வுகளாகவோ அல்லது திகதி வாரியாகவோ வகைப்படுத்தி பதிந்து கொள்ளவும் முடியும். இவ்வாறான புகைப்படங்களைக் கையாள்வதற்கெனவே ஜல்பம், பிகாஸா, எ.ப்.எல். போட்டோ போன்ற மென்பொருள்கள் உள்ளன.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகமாக வளர்ந்து வரும் '3G' தொழில்நுட்பம்

'ஜெனரேஷன் 3' அல்லது '3ஜி' என்ற புதிய நிலை இணைப்பு தொழில்நுட்பம் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. அதி வேகமான கையடக்கத்தொலைபேசி இயக்கத்தையும் வெப்தளத்தில் இருக்கும் பல வகையான மல்டிமீடியா சேவைகளையும் இணைக்கும் ஒரு தந்தியில்லா தொழில்நுட்பமே இந்த 'ஜெனரேஷன் 3'. இன்று புழக்கத்தில் இருக்கும் ஜி.எஸ்.எம். மற்றும் சி.டி.எம்.ஏ. கையடக்கத்தொலைபேசி தொழில்நுட்பங்களும் '3 ஜி'யில் அடங்கும்.

ஐரோப்பாவில் இந்த மூன்றாவது ஜெனரேஷன் மொபைல் நிலை 'யுனிவர்சல் மொபைல் ரெலிகொமியூனிகேசன் சிஸ்டம்' என்று அழைக்கப்படுகின்றது. ஆனாலும் இந்த தொழில் நுட்பத்தில் முன்னணி வகிப்பது ஜப்பானியர்களும் கொரியர்களுமே.



இலங்கை இந்த '3 ஜி' நிலையை அடையவேண்டுமானால் ஜி.எஸ்.எம். மற்றும் சி.டி.எம்.ஏ. ஆகியவற்றின் உள்கட்டமைப்பை முன்னேற்ற வேண்டும்.

அதிக இன்ரென்சிற்றி அடங்கிய கிரபிக்ஸ் தகவல்கள் மற்றும் மல்டிமீடியா தகவல்களை நெருக்கடியின்றி சுலபமாக பரிமாற்றிக்கொள்ள இந்த முன்னேற்றம் தேவை.

தமிழ் உலகம் London நடாத்தும்

## சுனாமி துயர் வெளிப்பாட்டு பரிசுப்போட்டிகள்

இலண்டனை தளமாக கொண்டியங்கும் அனைத்துலக தமிழ் சஞ்சிகை 'தமிழ் உலகம்'உலகளாவிய ரீதியில் பரிசுப்போட்டிகளை நடத்தத்தீர்மானித்துள்ளது. போட்டிகள் இரண்டு தலைப்புகளில் நடாத்தப்படும்.

1) சிறுகதை 2) நிழற்படம்

சிறுகதைப்போட்டிக்கான நிபந்தனைகள்

* உலகின் எப்பகுதியில் இருப்பவரும் இப்போட்டியில் பங்கேற்கலாம்.
* போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதை ஏற்கனவே எங்கும் பிரசுரிக்கப்படாததாக இருக்கவேண்டும்
* நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
* கதைகள் 1000 சொற்களுக்கு மேற்படாததாக இருத்தல்வேண்டும்
* இரண்டு தசாப்தங்களுக்கு அதிகமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீளவும் நிர்க்கதியாக்கியுள்ள சுனாமியின் அனர்த்தத்தை கருப்பொருளாகக்கொண்டு சிறுகதை புனையப்படவேண்டும்.
* போட்டியில் பங்கேற்கும் எழுத்தாளர்கள் தமது சுய விவரங்களையும் இணைத்து அனுப்ப வேண்டும்.
* முடிவுத்திகதி -யூன் 30. 2005
* 1 ஆம் பரிசு ரூ 10,000
* 2 ஆம் பரிசு ரூ 5,000
* 3 ஆம் பரிசு ரூ 2,500

### நிழற்படப்போட்டிக்கான நிபந்தனைகள்


* போட்டியாளரால் 2004 டிசெம்பர் 26- 2005 ஜனவரி 26 ஆம் திகதிக்குள் பிடிக்கப்பட்ட படங்களாக இருத்தல் வேண்டும்
* இலங்கையில் சிறுபான்மையினங்களின் பாரம்பரிய பகுதிகளில் ஏற்பட்ட சுனாமி பேரலையின் கோரத்தை பிரதிபலிப்பதாக இருத்தல் வேண்டும்.
* படங்கள் எடுக்கப்பட்ட இடம், சூழல் என்பன தெளிவாகவும், விளக்கமாகவும் எழுதப்படவேண்டும்.
* கறுப்பு, வெள்ளை வர்ணப்படங்களை அனுப்பி வைக்கலாம்.
* நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
* முடிவுத்திகதி யூன் 30.2005

*மிகச்சிறந்ததாக தெரிவு செய்யப்படும் நிழற்படம் ஒன்றிற்கு ரூ. 5,000 பரிசாக வழங்கப்படும்.*

தமிழ் உலகம் - London சஞ்சிகையில் தொடர்ச்சியாக பிரசுரமாகி வரும் பழைய சினிமாப்படங்கள் தொடர்பாக 'திரை வலம்' பகுதியில் தரப்பட்டுள்ள கேள்விகளுக்கு சஞ்சிகையிலிருந்து பதில்களை எடுத்து சரியாக எழுதும் ஐவருக்கு தலா 1000ரூபா வீதம் பரிசுகள் வழங்கப்படும். பரிசுக்குரியவர் சந்தாதாரராக இருக்கும் பட்சத்தில் பரிசுத்தொகை இரட்டிப்பாக வழங்கப்படும்.

-ஆசிரியர்குழு

## செவ்வாய்க்கோளில் கடல்



செவ்வாய்க்கோளில் தண்ணீர் இருக்கின்றது என்ற ஆய்வுகள் தொடர்ந்த வண்ணமிருக்கின்றன. இதே வேளையில் செவ்வாய்க்கோளின் மேற்பரப்புக்கு சற்று கீழே பனிக்கட்டியாக ஒரு கடல் உள்ளது என ஐரோப்பாவின் மார்ஸ் எக்ஸ் பிரஸ் விண்கலத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த விண்கலத்தில் அமைந்துள்ள மிக துல்லியமான புகைப் பட கருவிகள் மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இதற்கு மேலும் சான்று பகர்கின்றன. இது பூமியின் துருவங்களில் உள்ள பனிப்படலம் போலவே உள்ளது. இந்த தட்டுக்கள் 50 இலட்சம் ஆண்டுகள் பழைமையானதாக இருக்கக் கூடும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு கிழக்கு கல்வி நிலையை பின் நகர்த்தியுள்ள

# சுனாமி அனர்த்தம்



இலங்கைத்தீவின் கல்வியமைப்பிலும், கல்வித்தர நிலையிலும் யுத்த சூழ்நிலை காரணமாக கடந்த இரு தசாப்தகாலமாக வடக்கு கிழக்கு பிரதேச கல்வி நிலை பின் தங்கியிருக்கிறது. அதாவது நாட்டினது தேசிய அளவிலான கல்விபெறுபேற்று வீதத்தில் தமிழர் பிரதேச கல்வி தர நிலை அடைவு மட்டம் ஒப்பீட்டு ரீதியில் பின் தங்கிய நிலையிலேயே காணப்பட்டு வந்தது. வீழ்ச்சியுற்றிருந்த கல்வி நிலையை நடைமுறையில் இருக்கின்ற சமாதான காலப்பகுதியில் மேம்படுத்தும் வழிமுறைகளை பெருமளவுக்கு அரசின் உதவியுடன் அரச சார்பற்ற நிறுவனங்களும் மற்றும் தமிழீழ கல்விக்கழகமும், பிரதேச கல்வியியலாளர்களும் ஒருங்கிணைந்த வகையிலான திட்டமிடல் ஊடாக நிவர்த்தி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்ற வேளையில் சுனாமி அனர்த்தமும் முழுக்கல்விக்கட்டுமாணத்தையும் சிதைவுக்குள்ளாக்கி விட்டது என்றே கூறலாம். குறிப்பாக கல்வி நிர்வாக அடிப்படையிலான கஷ்டப்பிரதேச இடங்கள் அதிகளவு பாதிப்படைந்து மேலும் அதிக கஷ்டப்பிரதேச வரையறைக்குள் உட்படுத்தப்பட்டு விட்டது என்றே கூறலாம்.

இந்து சமுத்திர பகுதியில் ஏற்பட்ட சுனாமி பேரலையினால் இந்து சமுத்திர வலய நாடுகள் பௌதீக வளம், பொருளாதாரம், ஆளணி வளம், தொழில் முயற்சியாண்மை, சுற்றுலாத் துறை, கடல்வள இழப்பு என்ற அமைப்பில் பாதிப்படைந்து இருப்பதோடு கணிசமான அளவு கல்வித்துறையிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை மறுக்க முடியாது. குறிப்பாக இலங்கையின் வடகிழக்கு பிரதேச தமிழர் கல்வியையும் பாதிப்படைய செய்தமையை பல்வேறு தரவுகள் ஆதாரப்படுத்துகின்றன. கல்விக்கட்டமைப்பை பொறுத்த மட்டில் பௌதீக வள அழிவு, ஆளணி வள இழப்பு, ஆசிரியர், மாணவர்களின் உள ரீதியான நீண்டகாலபாதிப்பு மற்றும் பொருளாதார இழப்பு என்பன கல்வி மீது நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிப்பை உடனடியாகவும், கால ஓட்டத்திலும் ஏற்படுத்த வாய்ப்புள்ளது. இதற்கு பரிகார செயற்றிட்டங்களை ஒருங்கிணைந்த ஓர் அமைப்பின் ஊடாக முன்னெடுக்கப்படுதல் உடனடி தேவையாக உள்ளது.

வடக்கு கிழக்கு கரையோரப்பகுதியை தாக்கிய சுனாமியினால் கல்வியில் பின் தங்கிய பிரதேசங்களான வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு, நாகர்கோவில் பகுதி, திருமலை, மூதூர், அம்பாறை, மட்டக்களப்பு கரையோரப் பகதிகள் அதிகளவில் பல்வேறு அடிப்படையில் பாதிப்பை சந்தித்துள்ளதை காண முடிகிறது.

தமிழர் தாயகத்தை பொறுத்த மட்டில் இவ் ஆண்டில் பல்வேறு பாடசாலைகள் இயங்கத் தொடங்கினாலும் 33 சதவீதமான பாடசாலைகள் திறக்கப்படவில்லை. இதற்கு பாடசாலைகள் முற்றாகவோ அல்லது பகுதியாகவோ அழிவடைந்துள்ளமையும், பாடசாலைகள் நலன்புரி நிலையங்களாகவும், அகதி முகாம்களாகவும் இயங்கி வருகின்றமையே பிரதான காரணமாகும். அம்பாறை மாவட்டத்தில் 540 பாடசாலைகளில் 178 பாடசாலைகள் திறக்கப்படாதிருந்தன. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 326 பாடசாலைகளில் அகதி முகாமாக இயங்கும் 58 பாடசாலைகளும், பகுதியாக சேதமடைந்துள்ள 25 பாடசாலைகளும், முற்றாக சேதமடைந்துள்ள 13 பாடசாலைகளும் இயங்க முடியாதிருந்தன. 25 ஆயிரம் மாணவர்கள் பாதிப்படைந்துள்ளதுடன் 172 மாணவர்களும், 10 ஆசிரியர்களும் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அம்பாறையில் 17 ஆசிரியர்கள் உயிரிழந்துள்ளதாகவும், 214 பாடசாலைகளில் 87 பாடசாலைகள் இயங்கவில்லை எனவும் கல்வித்திணைக்கள ஆய்வு அறிக்கைகள் ஆதாரப்படுத்தியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தை பொறுத்த மட்டில் 06 பாடசாலைகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன், 11 பாடசாலைகள் பகுதியாகவும் அழிவடைந்துள்ளதுடன் 113 மாணவர்கள் இறந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் மட்டும் 360 மாணவர்கள் இறந்துள்ளனர் எனவும் அஞ்சப்படுகின்றது. திருக்குடும்ப கன்னியர் மடத்தில் உள்ள மாணவர் விடுதி முற்றாக அழிந்து 40 மாணவிகள் இறந்துள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

வடமராட்சி கிழக்கு பகுதியை பொறுத்த மட்டில் 06 பாடசாலைகள் முற்றாகவும், 06 பாடசாலைகள் பகுதியாகவும் அழிவடைந்துள்ளதுடன் சில பாடசாலைகள் அகதி முகாம்களாகவும் இயங்கிவருகின்றன. திருமலையை பொறுத்த மட்டில் 07 பாடசாலை முற்றாகவும், 20 பாடசாலைகள் பகுதியாகவும் அழிவடைந்து இருப்பதுடன், 80 மாணவர்கள் இறந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் காரைதீவில் விபுலானந்தர் மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட மாடிக்கட்டடத்தொகுதி 8 தரைமட்டமாகியுள்ளதுடன், 5 ஆசிரியர்களும் இறந்துள்ளமை வலய கல்விப்பணியகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட கல்வித்துறை கட்டட இழப்பு 4 கோடி 89 இலட்சம், தளபாடத்துக்கு 2 கோடி 35 இலட்சம், உபகரணங்களுக்கு 1 கோடி 39 இலட்சத்து 10 ஆயிரம் என யாழ். செயலகம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை கல்வி வலயத்தில் 1176 மாணவர்கள் உயிரிழந்ததுடன், பாடசாலைகளுக்கு 241.11 மில்லியன் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 57 பாடசாலைகளில் 15 பாடசாலைகள் முற்றாக அழிந்துள்ளதுடன், 24 பாடசாலைகள் அகதி முகாம்களாக உள்ளன. 10 ஆசிரியர்கள், 2 சிற்றூழியர்கள், 1 தொண்டர் ஆசிரியர் உயிரிழந்துள்ளதுடன், 1815 மாணவர்கள் காயமடைந்துள்ளதாக வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.ரி.நிஸாம் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு கிழக்கு பிரதேசத்தில் முற்றாக 46 பாடசாலைகள் சேதமடைந்து இருப்பதுடன், 79 பாடசாலைகள் பகுதியாக சேதமடைந்துள்ளது. 3200 சிறுவர்கள் தாயார் அல்லது தந்தையை இழந்துள்ளனர் என யுனிசெவ் நிறுவனம் உறுதிகப்படுத்தியுள்ளது.

இவற்றின் ஊடாக வடகிழக்கு தமிழர் பிரதேச கல்விக்கட்டமைப்பு எந்தளவுக்கு பாதிப்படைந்துள்ளது என்பதை உணர முடிவதுடன் இவற்றினை மீள் கட்டுமாணம் செய்வது உடனடித்தேவையாக உள்ளது.

கல்வியமைப்பில் உடடினத்தேவையை நிறைவு செய்யும் அதே வேளை நீண்ட கால பாதிப்பை உண்டு பண்ணும் உள மேம்பாட்டு திட்டங்களை வழிவகுப்பதும் தேவையானதாகும். உள அடிப்படையில் பாதிப்படைந்துள்ள மாணவர்களின் நலன்கருதி ஆற்றுப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்தல் அவசியமாகிறது. அந்த வகையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம், மற்றும் ஆற்றுப்படுத்தும் அரங்க செயற்பாட்டுக்குழு, ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், உள நால சமூக அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்படத்தொடங்கியுள்ளன. இருந்தாலும் இவற்றுக்கு இடையிலான ஒரு ஒருங்கிணைந்த வகையிலான செயற்றிட்டம் நடைமுறைப்படுத்துவது கூடிய பயன்பாட்டைத்தரும் என்பது பலரது எதிர்பார்ப்பாகும்.

பாதிப்படைந்த கல்வியமைப்பை ஒழுங்கமைப்பது உடனடித்தேவையாக உள்ளதுடன், பாடசாலை பௌதீக வள கட்டமைப்பு, இலவச பாடநூல் பெறுதல் என்பனவும், சீருடை பெறுதல், உணவு பெறுதல் என்பனவும் நிவர்த்தி செய்யப்படவேண்டியுள்ளது. மேலும் கற்றல், கற்பித்தலுக்கான பாடசாலை உபகரணங்களை பெறுவதற்கும், போஷாக்குணவை வழங்குவதற்கும், பாதுகாப்பு, அன்பு, அரவணைப்பை வழங்குவதற்கும் ஒழுங்கு முறைகள் வகுக்கப்படல் அவசியமாகிறது. இதற்கு ஏற்ற ஒழுங்கு முறைத்திட்டமிடல்கள் வகுக்கப்படும் பொழுது தான் இழந்த கல்வியை மீட்கமுடியும் என்பது உறுதியாகும்.

*-ப. இராஜேஸ்வரன், ஆசிரியர்-யாழ்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக விநோதங்கள்

-ஷாம்



இம்மாதம் புத்தர்பெருமானின் பிறந்த நாள் வருகிறது அல்லவா? அதையொட்டி தென்கொரிய தலைநகர் சியோலில் நிறுவப்பட்டுள்ள மிகப்பெரியுவிளக்கு இது.




உலகெங்கிலுமுள்ள கத்தோலிக்கர்களை வழிநடத்தவென கடந்த மாதம் புதிதாகப் பதவியேற்ற பாப்பரசர் 16 ஆம் பெனடிக்ட் முதன் முறையாக வத்திக்கான் செயின்ட் பீற்றர்ஸ் தேவாலயத்தில் உள்ள பல்கனியில் இருந்து மக்களை ஆசிர்வதித்த போது.........



இரண்டாம் உலகப்போரில் வெற்றி பெற்ற 60 ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாட ரஷ்யா தயாராகி வருகிறது.



வரவர எதற்குத்தான் போட்டி நடத்துவதென்ற விவஸ்தையே இல்லாமல் போய் விட்டது. ஜப்பானில் குழந்தைகளிடையே அழும் சுமோ போட்டி நடத்தப்பட்டு வருகிறது.



ஊனம் கல்வி கற்க தடையேயல்ல. இதை நிரூபிக்கும் வகையில் கைகளை இழந்த வியட்நாம் சிறுமி ஒருத்தி கால்களால் தனது வீட்டுப்பாடங்களை செய்கிறாள்.

விலங்குகள் அட்டகாசம் செய்ய நினைத்தால் அது அமெரிக்காவாக இருந்தால் என்ன அது அந்தாட்டிக்காவாக இருந்தால் என்ன அவை அது பற்றி அலட்டிக் கொள்வதில்லை.இது போன்ற ஒரு நிகழ்வு சமீபத்தில் அமெரிக்காவில் நடைபெற்றிருக்கின்றது. அந்நாட்டின் நியூஜெர்ஸி மாநிலத்தின் மக்கள் வசிக்கும் பகுதிக்குள் திடீரென புகுந்து அட்டகாசம் செய்து விட்டு சமர்த்தாக மரத்தில் ஒளிந்து கொண்ட இந்தக் கரடியை மயக்க மருந்து கொண்ட துப்பாக்கியால் சுட்டு பிடித்து வெளியேற்றினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்த்தன் சஞ்சீவ் 01

கதை - தாரா
சித்திரம் - ஆனந்த்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரேனின் அடுத்த இலக்கு


நரேன்

போர்முலா-1 கார் பந்தயங்களில் ஜோர்டான் அணி சார்பில் பங்கேற்றவர். தமிழகம் கோவையைச்சேர்ந்த நரேன் கார்த்திகேயன். போர்முலா-1 போட்டிகளில் பங்கேற்ற முதல் இந்தியரும் இவரே. அவுஸ்திரேலியன் கிராண்ட் பிரிக்ஸ், மலேசியன் கிராண்ட் பிரிக்ஸ் மற்றும் பஹ்ரெயின் கிராண்ட் பிரிக்ஸ் போட்டிகளை நிறைவு செய்த இவர் முதலிரு போட்டிகளிலும் சிறப்பாக செயற்பட்ட புதுமுக வீரர் என்ற பெயரும் பெற்றவர். தற்போது சென் மரினோ கிராண்ட் பிரிக்ஸ் போட்டிக்கு மும்முரமாக தயாராகிறார் நரேன் கார்த்திகேயன். போர்முலா-1 தொடரின் அடுத்த போட்டியாக சென் மரினோ கிராண்ட் பிரிக்ஸ் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 24 ஆம் திகதி இத்தாலியில் இமோலா நகரில் நடைபெறவுள்ளது. இதற்காக கடுமையான பயிற்சியில் நரேன் ஈடுபடுகின்றார்.

கடுமையாக பயிற்சிகளை மேற்கொள்கிறேன். எனது பயிற்சிகள் திருப்தி அளிக்கின்றன. உடற் தகுதியும் இருக்கின்றது. சென் மரினோ களத்தில் நான் புதிதாக பங்கேற்கவுள்ளேன். ஆனாலும் இந்த போட்டியில் சிறப்பாக செயற்படுவேன் என தன்னம்பிக்கையோடு கூறுகிறார் நரேன்.

# இந்திய மண்ணில் சாதனைகள் படைத்து தாயகம் திரும்பியது பாகிஸ்தான்


இன்சமாம்


யூனிஸ் கான்


சாகித் அப்ரிதி

கிரிக்கெட் போட்டிகள் என்றால் ரசிகர்களுக்கு ஒரே கொண்டாட்டம். அதுவும் இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டிகள் பல நாட்டு கிரிக்கெட் ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்படும் போட்டியாகும். உலகக்கிண்ண போட்டிகளுக்கு அடுத்தபடியாக விறுவிறுப்பான போட்டியாக இந்திய பாகிஸ்தான் போட்டிகள் அமைவது வழமை.

6 ஆண்டுகளின் பின்பு இந்திய மண்ணில் 3 ரெஸ்ட் போட்டிகள் 6 ஒரு நாள் சர்வதேச போட்டிகள் என முழுமையான ஒரு தொடரில் பாகிஸ்தான் பங்கேற்று வெற்றியோடு தாயகம் திரும்பியது. அனுபவமற்ற இளம் வீரர்களுடன் களமிறங்கும் பாகிஸ்தான் அணி இந்திய அணியை எவ்வாறு எதிர்கொள்ளும் என கேள்விகள் தொடுத்தவர்களை வாய்மூட வைத்துவிட்டது.

ரெஸ்ற் கிரிக்கெட் போட்டியினை 1-1 என சமப்படுத்திய பாகிஸ்தான் அணி ஒரு நாள் சர்வதேச போட்டியில் முதலிரு போட்டிகளில் தோற்றாலும் மிகுதி 4 போட்டிகளிலும் சிறப்பாக விளையாடி 4 இலும் வெற்றி பெற்று 4-2 என ஒரு நாள் தொடரை கைப்பற்றியது. அண்மைக்காலமாக இந்திய வீரர்கள் சிறப்பாக பிரகாசிக்கவில்லை. இந்தப்போட்டி தொடரில் ட்ராவிட் 308 ஓட்டங்களைப்பெற்றார். பாகிஸ்தான் பந்து வீச்சாளர் உல் ஹசன் ரானா 15 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இவரது பந்து வீச்சு இந்திய முன்னணி வீரர்களையே அச்சுறுத்தியது. இறுதிப் போட்டி புது டில்லியில் நடைபெற்றது. இந்த போட்டியினை காண பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப், இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் உட்பட பல பிரமுகர்கள் வந்திருந்தனர்.

### கங்குலியின் எதிர்காலம்

இந்திய அணியின் தலைவர் சௌரவ் கங்குலியின் கிரிக்கெட் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது. அண்மைக்காலமாக சௌரவ் கங்குலியின் துடுப்பாட்டம் சிறப்பாக இல்லை. குறிப்பாக பாகிஸ்தான் அணிக்கெதிராக நடைபெற்ற ரெஸ்ற் கிரிக்கெட் போட்டிகளிலும் ஒரு நாள் சர்வதேச போட்டிகளிலும் குறைந்த ஓட்டங்களுடன் ஆடுகளம் வரும் வேகத்தை விட மிக வேகமாக ஆடுகளம் விட்டு அகல்வார். இதனால் ரசிகர்கள் மத்தியில் அதிருப்தி சௌரவ் கங்குலியை அணித் தலைமையிலிருந்து நீக்க வேண்டும் என்ற கருத்துக் களும் எழுந்துள்ளன. பாகிஸ்தானுடனான ஒரு நாள் போட்டித்தொடரின் 4 ஆவது போட்டியில் குறிப்பிட்ட நேரத்திற்குள் பந்து வீசி முடிக்காத காரணத்தால் போட்டி நடுவர் கங் குலிக்கு 6 போட்டிகளில் விளையாட சர்வதேச கிரிக் கெட் பேரவை (ICC) தடை விதித்தது. இதை எதிர்த்து கங்குலி முறைப்பாடு செய்தார். ஆனா

சீ.கே.மயூரன்

லும் கங்குலி கூறிய விளக்கங்கள் ஏற்கத் தக்கதாக இல்லாத காரணத்தால் இவரின் முறைப்பாடு நிராகரிக்கப்பட்டது. சௌரவ் கங்குலி அடிக்கடி இப்படியான சர்ச்சையில் சிக்கித்தவிப்பது வழமை. இலங்கையில் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள மும்முனை ஒரு நாள் போட்டியில் இந்திய அணியும் கலந்து கொள்ள வுள்ளது. இதனால் இந்தப்போட்டித் தொடரில் 4 போட்டிகளில் விளையாட முடியாத நிலை. பாகிஸ்தானுடன் கடந்த 2 போட்டிகளிலும் விளையாடவில்லை கங்குலி. 6 போட்டிகளில் தடைக்கு பின்னர் இந்திய அணிக்கு சௌரவ் கங்குலியே நியமிக்கப்படுவாரென தேர்வுக் குழுவின் தலைவர் கிரண்மோரே கூறியுள்ளார். கங்குலி மிகச் சிறந்த வீரர் ரெஸ்ட், மற்றும் ஒரு நாள் போட் டிகளில் அதிக ஓட்டங்களை குவித்துள்ளார். மிக விரைவில் தனது திறமைகளை நிரூபிப்பார் என கிரண் மோரே மேலும் கூறியுள்ளார். பார்ப்போம் சௌரவ் ஜெயிப்பாரா என்று. இது இவ்வாறிருக்க, பாகிஸ்தான் இந்திய கிரிக்கெட் வீரர்கள் பயன்படுத்திய துடுப்பு (Bat) உடை கள், கையுறை (Glouse) என்பன ஏலம் விடப்பட்டன. ஒவ்வொரு வீரரும் தாம் பயன்படுத்திய பொருட்களில் தமது கையொப்பமிட்டிருந்தனர். இதில் என்ன ஆச் சரியமென்றால் சௌரவ் கங்குலியின் துடுப்பு (Bat) மட்டுமே அதிக விலைக்கு விலை போயுள்ளது. 1 இலட்சம் ரூபாவுக்கு (இந்தியப்பணத்தில்) ஏலம் போயுள்ளது. ஷேவாக் பயன்படுத்திய துடுப்பும் ஏலம் போனது.

# விடை பெற்றார் ஜோன் ரைட்

இந்திய கிரிக்கெட் அணிக்கு அடுத்த பயிற்சியாளராக வரப்போகின்றவர் இந்திய மைந்தரா அல்லது அன்னியரா என்பதுதான் தற்போது கிரிக்கெட் ரசிகர்களின் கேள்வி. நடைபெற்று முடிந்த பாகிஸ்தான் தொடருடன் இந்திய பயிற்சியாளர் பதவியிலிருந்து விலகி விட்டார் ஜோன் ரைட். இந்திய அணியின் பயிற்சியாளர் பதவிக்கு பலர் போட்டிபோடுகின்றனர். அவுஸ்திரேலியாவின் கிரேக் செப்பல், ரொம் மூடி, டேவ் வட்மோர் ஆகியோரது பெயர்கள் அடிபட்டது. ஆனால் வட்மோர் மீண்டும் பங்களாதேஷ் அணியின் பயிற்சியாளராக செயற்படவுள்ளார். இந்திய அணியின் முன்னாள் வீரரான சுனில் கவாஸ்கரை பயிற்சியாளராக நியமிக்குமாறும் கருத்து நிலவுகிறது.

2000 ஆம் ஆண்டு இந்திய அணியின் முதலாவது அன்னிய பயிற்சியாளராக கடமையேற்றவர் ஜோன் ரைட். இவரது பயிற்சியின் பின் இந்திய அணியின் வெற்றிகள் அதிகமாகின. அவுஸ்திரேலிய, பாகிஸ்தான் மண்ணிலும் இந்திய அணி வெற்றி வாகை சூடியது. 2003 ஆம் ஆண்டு உலகக்கிண்ண தொடரில் சிறப்பாக விளையாடியது இந்திய அணி. மிகவும் அமைதியான சுபாவமிக்க ஜோன் ரைட் அணியின் திறமைகளை ஒன்றிணைத்தவர். வீரர்களிடையே ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தி வெற்றிகளை பெறும் வழிகளை எடுத்துக் கூறியவர். இளைய வீரர்களின் திறமைகளை வெளிக் கொணர்வதில் முன்னின்றவர்.


ஜோன் ரைட்.

அடுத்தபயிற்சியாளராக அவுஸ்திரேலியாவின் முன்னாள் வீரரான கிரேக் செப்பல் வருவதையே விரும்புகின்றார் சௌரவ் கங்குலி. இவரோடு போட்டி போடும் மற்றொருவர் அவுஸ்திரேலிய முன்னாள் வீரரான ரொம் மூடி. இந்தியாவைப் பொறுத்தமட்டில் கவாஸ்கர் ஏற்கனவே இந்திய அணிக்கு துடுப்பாட்ட பயிற்சிகளை வழங்கியவர். மிகச்சிறந்த அனுபவங்களைக்கொண்டுள்ளவர். ரெஸ்ட் கிரிக்கெட்டில் 10,000 ஓட்டங்களை கடந்துள்ள முன்னாள் வீரராக இருந்தாலும் கவாஸ்கரை பயிற்சியாளராக ஏற்குமா இந்திய கிரிக்கெட் சபை? அல்லது வெளிநாட்டவரை பயிற்சியாளராக்குமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணமக்கள் தேடல்

## மணமகன் தேவை

அவுஸ்திரேலியாவில் கணக்காளராக தொழில்புரியும் 29 வயதுடைய பெண்ணுக்கு ஐரோப்பா /U.K விசாவுடன் கூடிய மணமகன் தேவை. நட்சத்திரம்- ரேவதி (முதலாம் பாதம்), உயரம் - 5'5" REF: UKM 269

பிரித்தானியக்குடியுரிமை பெற்ற சட்டத்தரணியாக வேலை பார்க்கும் 28 வயதுடைய பெண்ணுக்கு நன்றாக ஆங்கிலம் பேசத்தெரிந்த பிரித்தானியாவில் பிறந்த இலங்கை மணமகன் தேவை. நட்சத்திரம் - மகம், உயரம்- 5'5"

REF.UKF 268

கொழும்பில் வசிக்கும் 28 வயதுடைய CIMA படித்து முடித்த பெண்ணுக்கு UK, கனடா அல்லது ஐரோப்பாவில் இருக்கும் மணமகன் தேவை. இராசி : விருச்சிகம், உயரம்: 5'4"

REF:SLF267

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 24வயதுடைய பெண்ணுக்கு UK, கனடா அல்லது ஐரோப்பாவில் இருக்கும் மணமகன் தேவை. நட்சத்திரம்: மிருகசீரிடம், உயரம்: 5'4"

REF:SLF263

சாவகச்சேரியைச் சேர்ந்த 33வயதுடைய அழகிய பெண்ணுக்கு UK அல்லது ஐரோப்பாவில் விசாவுடன் இருக்கும் மணமகன் தேவை. நட்சத்திரம்: பூரட்டாதி, உயரம்: 5'4"

REF:SLF262

யாழ்-சாவகச்சேரியைச் சேர்ந்த தற்போது சுவிற்சர்லாந்து விசாவுடன் இருக்கும் பெண்ணுக்கு UK அல்லது ஐரோப்பாவில் இருக்கும் மணமகன் தேவை. நட்சத்திரம்: சித்திரை, உயரம்: 5'4"

REF:CHF259

இலங்கை வங்கியில் வேலைபார்க்கும் 25 வயதுடைய MBA பட்டதாரிக்கு UK விசாவுடன் கூடிய படித்த மணமகன் தேவை. உயரம்: 5'2"

REF:SLF254

யாழ்-கச்சேரியடியைச்சேர்ந்த தற்போது இலண்டன் பல்கலைக் கழகத்தில் மருத்துவத்துறையில் படித்துக் கொண்டிருக்கும் பெண்ணுக்கு இலங்கை, இங்கிலாந்து, ஐரோப்பாவில் இருக்கும் படித்த மணமகன் தேவை. நட்சத்திரம்: சுவாதி, உயரம்: 5'1"

REF:UKF253

யாழ்-சாவகச்சேரியைச்சேர்ந்த பட்டதாரிப்படிப்பு முடித்த பெண்ணுக்கு UK விசாவுடன் கூடிய மணமகன் தேவை. 7இல் செவ்வாய். உயரம்: 5'6"

REF:SLF252

கொழும்பு - தையல் துறையில் தேர்ச்சிபெற்ற படித்த 44 வயதுடைய பெண்ணுக்கு மணமகன் தேவை. இலங்கை அல்லது வெளிநாடும் விருப்பத்தக்கது. நட்சத்திரம்: திருவோணம், உயரம்: 5'3"

REF:SLF250

யாழ் - Accounts Management துறையில் படித்து முடித்த 28 வயதுடைய பட்டதாரிப் பெண்ணுக்கு UK விசாவுடன் கூடிய மணமகன் தேவை. நட்சத்திரம்: மகம், உயரம்: 5'4"

REF:SLF249

மட்டக்களப்பை சேர்ந்த 26 வயதுடைய, வெளிவாரிப்பட்டதாரிப் பெண்ணுக்கு UK, ஐரோப்பா, கனடாவில் விசாவுடன் இருக்கும் மணமகன் தேவை. (தாரம் இழந்தோரும் விரும்பத்தக்கது). நட்சத்திரம்: பூசம் (கடகம்), உயரம்: 5'2"

REF:SLF238

பிரித்தானியா நிரந்தர விசா பெற்ற 33 வயதுடைய வைத்தியத்துறையில் தேர்ச்சி பெற்ற பெண்ணுக்கு UK அல்லது ஐரோப்பாவில் படித்த மணமகன் தேவை. நட்சத்திரம்: அச்சுவினி, உயரம்: 5'3"

REF:UKF222

பிரித்தானியாவில் ஒரு வருடமாக விசாவுடன் (Student) படித்துக்கொண்டிருக்கும் 29 வயதுடைய பெண்ணுக்கு UK அல்லது ஐரோப்பாவில் விசாவுடன்கூடிய மணமகன் தேவை. நட்சத்திரம்: சுவாதி, உயரம்: 5'3"

REF:UKF219

இலங்கையில் இருக்கும் 30 வயதுடைய BA பட்டதாரிப் பெண்ணுக்கு UK அல்லது ஐரோப்பாவில் விசாவுடன்கூடிய மணமகன் தேவை. நட்சத்திரம்: புனர்பூசம், உயரம்: 5'4"

REF:SLF217

பிரித்தானியாவில் பிறந்த வங்கித்துறையில் உத்தியோகம் பார்க்கும் 30 வயதுடைய பெண்ணுக்கு படித்த உத்தியோகத் தில் இருக்கும் ஆங்கில மொழி நன்றாகப்பேசத் தெரிந்த மணமகன் தேவை. நட்சத்திரம்: ரேவதி, உயரம்: 5'3"

REF:UKF112

பிரித்தானியாவில் 6 வருடங்களாக இருக்கும் 44 வயதுடைய ஆசிரியப்பெண்ணுக்கு இலண்டனில், ஐரோப்பாவில் இருக்கும் மணமகன் தேவை. நட்சத்திரம்: உத்தரட்டாதி, உயரம்: 5'5"

REF:UKF204

சுவீடன் நாட்டு பிரஜா உரிமைபெற்று மருத்துவமனையில் பணிபுரியும் விவாகரத்துப் பெற்ற 42 வயதுடைய கிறிஸ்தவப் பெண்ணுக்கு இலங்கை, இலண்டன், கனடா அல்லது ஐரோப் பிய நாடுகளில் நிரந்தர விசாவுடன் இருக்கும் மணமகன் தேவை. உயரம்: 5'6"

REF:SWF196

யாழ்-கைதடியைச் சேர்ந்த, 21வயதுப் பெண்ணுக்கு இலண்டன், கனடா அல்லது ஐரோப்பிய நாடுகளில் நிரந்தர விசாவுடன் இருக்கும் மணமகன் தேவை. பெண்ணுக்கு 7இல் செவ்வாய். உயரம் 5'6"

REF:SLF195

மட்டக்களப்பை சேர்ந்த 34வயது பெண்ணுக்கு இலண்டன் அல்லது கனடா, ஐரோப்பாவில் விசாவுடன் இருக்கும் மணமகன் தேவை. உயரம்: 5'4"

REF:SLF149

யாழ்-கந்தர்மடம், இந்தியாவில் 13 வருடங்களாக இருக்கும் மின்னியல் பட்டதாரி தேர்ச்சி பெற்ற 25 வயதுடைய பெண்ணுக்கு UK அல்லது ஐரோப்பாவில் விசாவுடன் கூடிய மணமகன் தேவை. நட்சத்திரம் - அனுசம், உயரம்: 5'5"

REF:INF137

## மணமகள் தேவை

யாழ்-நல்லூரைச் சேர்ந்த பிரித்தானியாவில் 8 வருடங்களாக வேலை பார்த்துக்கொண்டிருக்கும் 29 வயதுடைய ஆணுக்கு UK, ஐரோப்பா அல்லது கனடாவில் இருக்கும் மணமகள் தேவை. நட்சத்திரம்: மகம், உயரம்: 5'2"

REF:UKM266

யாழ்-பலாலியைச் சேர்ந்த தற்போது பிரித்தானியாவில் வேலைபார்த்துக்கொண்டிருக்கும் 28வயதுடைய ஆணுக்கு UK இல் இருக்கும் மணமகள் தேவை. நட்சத்திரம் : மகம், உயரம்: 5'7"

REF:UKM265

யாழ்-தெல்லிப்பளையைச் சேர்ந்த தற்போது நெதர்லாந்து குடி யுரிமை பெற்ற ஆணுக்கு UK இல் இருக்கும் மணமகள் தேவை. நட்சத்திரம்: பூரம், உயரம்: 5'8"

REF:NEM261

பிரித்தானியாவில் 3 வருடங்களாக இருக்கும் 27 வயதுடைய வேலைபார்க்கும் ஆணுக்கு UK, ஐரோப்பாவில் விசாவுடன் இருக்கும் மணமகள் தேவை. நட்சத்திரம்: திருவோணம், உயரம்: 5'5"

REF:UKM258

ஐக்கிய அமெரிக்காவில் குடியுரிமை பெற்ற, இலத்திரனியல் பொறியியலாளராக வேலை பார்க்கும் 32 வயதுடைய கணினிப்பட்டதாரிக்கு, A/L அல்லது அதற்கு மேல் படித்த மணமகள் தேவை. நட்சத்திரம்: பூசம், உயரம்: 5'7"

REF:USM257

இந்தியா மதுரையைச்சேர்ந்த, தற்போது பிரித்தானியாவில் 3 வருடங்களாக Work permit Visaவுடன் வேலை பார்க்கும் 35 வயதுடைய ஆணுக்கு மணமகள் தேவை. நட்சத்திரம்: உத்தரட்டாதி, உயரம்: 5'7"

REF:UKM255

கிளிநொச்சியைச் சேர்ந்த தற்போது சுவிட்சர்லாந்தில் இருக் கும் 25 வயதுடைய Factory இல் வேலைபார்க்கும் ஆணுக்கு மணமகள் தேவை. நட்சத்திரம்: புனர்பூசம், 7இல் செவ்வாய், உயரம்: 5'5"

REF:CHM251

பிரித்தானியாவில் 7 வருடங்களாக இருக்கும் 30 வயதுடைய கணினிப்பட்டதாரிக்கு, குறைந்த பட்சம் A/L படித்த மணமகள் தேவை. நட்சத்திரம்: அத்தம், உயரம்: 5'5"

REF:UKM248

பிரான்சில் ஒரு வருடமாக இருக்கும் 42 வயதுடைய ஆணுக்கு, விசாவுடன் இருக்கும் மணமகள் தேவை. நட்சத்திரம்: மூலம், உயரம்: 5'5"

REF:FRM246

யாழ் - கொக்குவிலைச் சேர்ந்த தற்போது கனடா பிரஜா உரிமை பெற்ற 32 வயதுடைய ஆணுக்கு இலங்கை, இந்தியாவில் இருக்கும் மணமகள் தேவை. நட்சத்திரம்: பூரட்டாதி, உயரம்: 5'8"

REF:CAM245

யாழ்-ஏழாலையைச் சேர்ந்த தற்போது பிரித்தானியாவில் 7 வருடங்களாக வேலை செய்து கொண்டிருக்கும் 33 வயது டைய ஆணுக்கு UK, கனடா, அவுஸ்திரேலியா அல்லது ஐரோப்பாவில் விசாவுடன் கூடிய மணமகள் தேவை. உயரம்: 5'8"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REF:UKM242

பிரித்தானியாவில் 6 வருடங்களாக வேலைபார்க்கும் 29 வயது டைய ஆணுக்கு UK, கனடா, அவுஸ்திரேலியா அல்லது ஐரோப்பாவில் விசாவுடன் கூடிய மணமகள் தேவை. நட்சத்திரம்: மிருகசீரிடம், உயரம்: 5'11"

REF:UKM240

பிரித்தானிய பிரஜா உரிமை பெற்ற பொறியியலாளராக வேலைபார்க்கும் 34 வயதுடைய ஆணுக்கு இலங்கை, UK, கனடா, அவுஸ்திரேலியா அல்லது ஐரோப்பாவில் மணமகள் தேவை. நட்சத்திரம்: பூரம், உயரம்: 5'4"

REF:UKM239

சுவிட்சர்லாந்தில் நிரந்தர விசா பெற்ற 38 வயதுடைய ஆணுக்கு இலங்கை, UK, கனடா, அவுஸ்திரேலியா அல் லது ஐரோப்பாவில் மணமகள் தேவை. நட்சத்திரம்: ரேவதி, உயரம்: 5'6"

REF:CHM235

யாழ்-பருத்தித்துறையைச் சேர்ந்த, இங்கிலாந்தில் 8 வருடமாக இருக்கும் 26 வயதுடைய ஆணுக்கு UK, கனடா, அவுஸ்திரேலியா அல்லது ஐரோப்பாவில் விசாவுடன்கூடிய மணமகள் தேவை. நட்சத்திரம்: பூராடம், உயரம்: 5'9"

REF:UKM221

யாழ்-உடுப்பிட்டியைச்சேர்ந்த, இங்கிலாந்தில் இருக்கும் 27 வயதுடைய வேலைபார்க்கும் ஆணுக்கு UK அல்லது ஐரோப்பாவில் விசாவுடன்கூடிய மணமகள் தேவை. நட்சத்திரம்: சுவாதி, உயரம்: 5'5"

REF:UKM218

யாழ்-திக்கத்தைச்சேர்ந்த, பிரான்சில் இருக்கும் 34 வயது டைய ஆணுக்கு UK அல்லது ஐரோப்பாவில் விசாவுடன்கூடிய மணமகள் தேவை. நட்சத்திரம்: பூரம், உயரம்: 5'6"

REF:FRM216

யாழ்-கொடிகாமத்தைச் சேர்ந்த, பிரித்தானியாவில் 4 வருடங் களாக இருக்கும் 30 வயதுடைய ஆணுக்கு UK அல்லது ஐரோப்பாவில் விசாவுடன்கூடிய மணமகள் தேவை. நட்சத்திரம்: உத்தரம், உயரம்: 5'5"

REF:UKM215

பிரித்தானியாவில் வேலைசெய்துகொண்டிருக்கும் 28 வயதுடைய ஆணுக்கு, UK விசாவுடன் கூடிய படித்த சராசரி அழகுடைய மணமகள் தேவை. நட்சத்திரம்: பரணி, (உதயத்துச் செவ்வாய்) உயரம்: 168cm

REF:UKM208

பிரித்தானிய பிரஜாஉரிமை பெற்ற 32 வயதுடைய ஆணுக்கு அழகிய மணமகள் தேவை. நட்சத்திரம்: ரோகிணி, உயரம்: 5'8"

REF:UKM206

யாழ்-உடுப்பிட்டியைச் சேர்ந்த தற்போது பிரித்தானியாவில் 4வருடங்களாக இருக்கும் 23 வயதுடைய வேலை பார்க்கும் ஆணுக்கு UK விசாவுடன் கூடிய மணமகள் தேவை. நட்சத்திரம்: அத்தம், உயரம்: 5'9"

REF:UKM202

பிரித்தானியாவில் 5வருடங்களாக இருக்கும் 32 வயதுடைய B.Sc (இலங்கை) முடித்து. தற்பொழுது கணினிப்பொறியியல்த்துறையில் படிக்கும் ஆணுக்கு UK விசாவுடன் கூடிய மணமகள் தேவை. நட்சத்திரம்: பரணி, உயரம்: 5'7"

REF:UKM201

அவுஸ்திரேலிய குடியுரிமை பெற்ற 33 வயதுடைய B.com படித்த விவாகரத்துப்பெற்ற ஆணுக்கு UK அல்லது ஐரோப்பாவில் இருக்கும் மணமகள் தேவை. நட்சத்திரம்: அத்தம், உயரம்: 5'5"

REF:UKM199

UK இல் சொந்த Business செய்யும் 24 வயதுடைய ஆணுக்கு UK, ஐரோப்பா அல்லது கனடாவில் விசாவுடன் இருக்கும் மணமகள் தேவை. நட்சத்திரம்: மிருகசீரிடம், 7இல் செவ்வாய், உயரம்: 5'8"

REF:UKM145

11 வருடங்களாக பிரித்தானியாவில் வசிக்கும் சாவகச்சேரியை சேர்ந்த முகாமையாளராகப் பணிபுரியும் 35 வயதுடைய ஆணுக்கு பிரித்தானியா, ஐரோப்பாவில் இருக்கும் மணமகள் தேவை

REF: UKM119

**நீங்கள் விரைவில் திருமணமண்டபத்தை பார்ப்பதற்கு:-**
**தமிழ்உலகத்தில் உங்கள் பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்களின் தகவல்களை தந்து பொருத்தமான மணமகனை அல்லது மணமகளை தேர்ந்தெடுங்கள். மணமக்களை இணைத்து மகிழ்வோம்.**

**மேலதிக தகவல்களுக்கு: தமிழ்உலகம் - இலண்டன்.**
**தொலைபேசி: 0044 20 8455 9001**
**மின்னஞ்சல்: tu@globallanka.co.uk**













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Net Try
SUPERMARKET
புதிய நிர்வாகத்தின் கீழ்

சகல விதமான இலங்கை, இந்திய, தாய்லாந்து மரக்கறி வகைகள்
மளிகைப்பொருட்கள்
அனைத்து மீன்வகைகள்
தமிழ், ஹிந்தித் திரைப்படங்கள்
OFF - LICENCE

உலகின் சகல நாடுகளுக்குமான பணமாற்றுச்சேவையுடன்
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

Net Try Supermarket
27 WATLING AVENUE
BURNT OAK, EDGWARE
MIDDX HA8 0LF, ENGLAND

TEL: 020 8952 5959

# GANAPATHY
Cash & Carry
*For All Your Groceries & Seafood*

உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள், பழ வகைகள், சகல விதமான உடன் மரக்கறி வகைகள், கடலுணவுப்பொருட்கள், அனைத்து விதமான மளிகைப்பொருட்கள் ஆகிய அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள உங்கள் நினைவில் இருக்கவேண்டிய ஒரே இடம்

# WINE MART
Incorporated in the Ganapathy chain

உங்களுக்குத் தேவையான அனைத்து விதமான உள்நாட்டு, வெளிநாட்டு, மதுபானங்கள் மற்றும் குளிர்பானங்கள் கிடைக்கும்

34,-38 Ealing Road, Wembley
Middx HAO 4 TL

TEL : 020 8795 4627 FAX: 020 8903 3185




PHOTOGRAPHY
VIDEOGRAPHY
DIGITAL IMAGING
GRAPHIC WORKS
MODELING STUDEO
CINE ALBUM

இலண்டனில் முன்னணி
Video படப்பிடிப்பாளர்கள்

020 82702426
079 0412 5826
077 8212 7962

ILFORD- ESSEX
LONDON - U.K






வட இந்திய, தென் இந்திய, சீன, சைவ, அசைவ உணவுகளையும் வட, தென் இந்திய ஸ்வீட் வகைகள் மற்றும் கார வகைகளையும் குறித்த நேரத்தில் தரமானதும் சுவையானதாகவும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்.....!



# CHETTINAD
## RESTAURANT

ஐரோப்பிய, அவுஸ்திரேலிய நாடுகளுக்கு ஸ்வீட் வகைகள் விஷேடமாக தயாரித்து தரப்படும்

No.: 293, Sea Street, Colombo-11,
Sri Lanka.
Tel: 0094 11 2432863,
0094 11 2472167
Fax: 0094 11 2448126

Branch:
No.: 22, 37th Lane, Colombo - 06.
Tel: 0094 11 2588271, 0094 11 2362035


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J R Universal Exchange

All major & exotic currencies and Travellers cheques

**The best in West**

மத்திய இலண்டனில் பணமாற்று சேவையில்
முன்னணியில் திகழ்பவர்கள்

J R Universal Exchange

வெளிநாடுகளில் இருந்து இலண்டனுக்கு விஜயம் செய்யும்
நீங்கள் உங்கள் பணத்தை கூடிய பெறுமதியாக்க நாடுங்கள்

J R Universal Exchange
52 Queensway,
London W2 3RY, England

Tel/Fax: 020 7229 5169

# AAUM CAR RENTAL

இலண்டனில் இருந்து விசேட Bus சேவை!

Wales கந்தவேல் முருகன் கோவிலுக்கு செல்ல விரும்பும்
பக்தர்களுக்கான பிரயாண ஒழுங்குகளை செய்து தருகிறார்கள்
AAUM CAR RENTAL நிறுவனத்தினர்கள்.

நபருக்கு £29.50 மட்டுமே (சுற்றுப்பயணம்)




உங்கள் பதிவுகளுக்கு தொலைபேசி

**020 8749 3900** (Mr.Raja)

மேலும் Cars, Vans, Minibus MPV களை
குறைந்த கட்டணத்துடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

AAUM
CAR RENTAL
281 The Vale Acton
London W3 1QA

உங்கள் சொந்தங்களின்
திருமணம், பிறந்தநாள் வாழ்த்துக்கள்,
நீத்தார் நினைவுகள் போன்றவற்றை
'தமிழ் உலக'த்தில்
விளம்பரம் செய்து பயன்பெறுங்கள்




உங்களுக்குத்தேவையான சகல மளிகைப்பொருட்கள்
இலங்கை, இந்திய, தாய்லாந்து நாடுகளில் இருந்து இறக்குமதி
செய்யப்பட்ட கடலுணவு வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

மளிகைப்பொருட்கள், மரக்கறிகள்,
கடல் உணவுப்பொருட்கள், சஞ்சிகைகள்

# தமிழ் உலகம்
## – London
## வழங்கும் பரிசு மழை

# 25,000/=

## பெறுமதி மிக்க பரிசுகள்

* உலகெங்கிலுமுள்ள வாசகர்கள் பங்குபற்றலாம்
* போட்டி பற்றிய மேலதிக விபரங்கள் 25, 35 ஆம் பக்கங்களில்

நீங்களும் இணைந்து
பரிசுகளை வெல்லுங்கள்

உலகின் சகல நாடுகளுக்கும் துரித கெதியில்
பணமாற்றுச்சேவையா? உடன் நாடுங்கள்

**020 8905 7765**

VIDEO
AUDIO
CD, VCD,
DVD

MARUTHI VIDEO

MARUTHI CASH & CARRY
15 - 17 Queensbury Station Parade, Queensbury, Middlesex HA8 5NR, England.
Tel: 020 8952 6655 www.maruthi.co.uk




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கடந்த பல வருடங்களாக கிழக்கு
இலண்டன் மக்களின் தேவையினை
பூர்த்தி செய்து ஆதரவைப்பெற்ற
பிரபாஸ் தமிழ்க்கடை இப்பொழுது
மேற்கு இலண்டனில் உள்ள Rayners
Lane இல் வாகன தரிப்பிட வசதி மற்றும்
குளிரூட்டப்பட்ட வசதியுடன் தமது புதிய
வியாபாரத்தை ஆரம்பித்துள்ளார்கள்



இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்,
புதிதாக மரக்கறி வகைகளுக்கென
குளிரூட்டப்பட்ட முறையில்
உடன் மரக்கறி, பழவகைகள்,
கடல் உணவுப்பொருட்கள்,
உடன் இறைச்சி வகைகள்,
குளிர்பான வகைகள், மதுபான வகைகள்,
தொலைபேசி அட்டைகள், இலங்கை, இந்திய
வாராந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள்
மற்றும் புதிய, பழைய திரைப்பட
Audio CD, VCD, DVD
என்பனவற்றை தரமானதாகவும்
மலிவாகவும் மேற்கு இலண்டனில்
ஒரே இடத்தில் பெற நீங்கள்
விரைய வேண்டிய இடம்






## 'பிரபாஸ் தமிழ்க்கடை'

415, Alexandra Avenue
Rayners Lane,Harrow
HA2 9SG

Tel: 020 8866 0977





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*Value for Money*

**SOBIA REAL ESTATE**

**KIRIJA TOUR SERVICE**

Dual A/C, Passenger Vans (Dolphin) Wedding Cars & Lorries **for Hire**

Office : No. 57, W. A. Silva Mawatha, Wellawatte, Colombo-06.
Mobile : 0777-599314, 0777-599354, 077-3013424
OFFICE : Tel / Fax : 4 203092
E-mail : thiyagu_sobia@hotmail.com
Web : sobia.thiyagu.com

# Commercial Lending solutions

CLS

Specialising in commercial finance, mortgages and banking

புதிதாக **Business** ஆரம்பிக்கப்போகிறீர்களா? அல்லது நடந்துகொண்டு இருக்கும் உங்கள் வியாபாரத்திற்கு மேலதிக கடன் வசதிகள் தேவையா?

உங்கள் சொந்த வியாபார நிதிப்பிரச்சனைகளை சீர்படுத்தி செப்பனிட காத்திருக்கிறோம்.

கடைகள், வீடுகள் வாங்குவதற்கான **Loan** களை குறைந்த வட்டி விகிதத்தில் பெற நாடுங்கள்

**Commercial Lending solutions**
899-901 Finchley Road
London
NW11 7PE

**Tel: 0845 226 8035**
Fax: 020 8731 7870
Email: jtscls@hotmail.com

# SATHIY STORES & JEWELLERS

Basel



உலகின் சகல நாடுகளுக்கும் துரித கதியில் பணமாற்றுச்சேவை! அவசர தேவைகளை முன்னிட்டு சில மணி நேர சேவை

நம்பகமான - பாதுகாப்பான - விரைவான

துரித சேவைக்கு நாடுங்கள் சக்தி தமிழ்க்கடை

**Fast cash - Send today - Collect with in 1 hour**



## Indian Bazaar

சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நகைகள் தரமாகவும் மலிவாகவும் இங்கு கிடைக்கும்



SATHIY STORES
&
JEWELLERS
K.SATHIY
ELISABETHEN ANLAGE-11
4051 BASEL
SWITZERLAND

**TEL : 061 383 8686**
**FAX : 061 383 8688**
**H.P : 079 669 4207**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Time Travel and Tours

CALL NOW

| | |
|---|---|
| To Colombo | from £340+taxes |
| To Madras | from £390+taxes |
| To Hyderabad | from £350+taxes |
| To Trivandrum | from £345+taxes |
| To Cochin | from £345+taxes |
| To Bangalore | from £345+taxes |
| To Calcutta | from £345+taxes |
| To Toronto | from £249+taxes |

BEST DEALS

| | |
|---|---|
| To Johannesburg | from £335+taxes |
| To Bangkok | from £320+taxes |
| To Singapore | from £320+taxes |
| To Kula Lumpur | from £345+taxes |
| To Manila | from £340+taxes |
| To Dubai | from £185+taxes |
| To Amsterdam | from £45+taxes |
| To Frankfurt | from £70+taxes |
| To Zurich | from £90+taxes |

Call now for the best fares to **COLOMBO& WORLD WIDE**

Destinations

SriLankan Airlines · QATAR AIRWAYS القطرية · malaysia AIRLINES · KUWAIT AIRWAYS · CSA CZECH AIRLINES

Contact us for free brochures or visit our web site for online reservations www.ucanfly.co.uk
(T) 020 8868 8687 (F) 020 8429 3444 (E)info@ucanfly.co.uk

Our address and working hours are as follows:

Time Travel & Tours136 Kenton Road,Harrow MiddlesexHA3 8AZ . Tel: 020 8907 6969 Fax: 020 8907 8383

Time Travel & Tours208/210 Tooting High StreetTooting, LondonSW17 0SG.Tel:- 0208 767 0000 Fax:- 0208 767 7679

Time Travel & Tours432, Alexandra avenue, HarrowHA2 9TW. Tel: 020 8429 8333, Fax: 020 8429 3444

Mon - Fri: 09.30 - 18.00Sat 10.00 - 15.00 Sun Closed

IATA ABTA ATOL 4585



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெள்ளவத்தையில்

காலி வீதிக்கு அருகில்

சொகுசு தொடர் மாடி மனைகள்

## PROVISIX City







- 3 bed rooms, 2 toilets - 1100 & 1200 Sq .ft
- 2 bed rooms, 2 toilets - 920 & 870 Sq .ft
- 1 bed room, 1 toilet - 500 Sq .ft

***Ready for occupation on January 2006***

Enjoyable and a relaxing life with a walking distance from galle road , with basic facilities such as hospital,schools,Super market, banks,religious place and main bus halt

UK Office:
**PROVISIX LTD.**
458 Alexandra Avenue,Harrow, Middlesex,
HA2 9TL, United Kingdom
Tel: (0044) 2088683646 Fax: (0044) 2088683666
Mobile: (0044) 7715323010
E - mail : provisix@provisix.com,
p.somasundaram@provisix.com
Web site : Provisix.com



முழுத் தொகையையும் செலுத்துபவர்களுக்கு விலைக் கழிவு உண்டு.

**PROVISIX INTERNATIONAL (PVT) LTD**
*(A BOI approved company)*
*6, I.B.C. Road, Colombo -06 Sri Lanka*
*Tel: +94 071 452 8484*
*UK tel: +44 208 868 3646*
*E-mail: m.somasundaram@provisix.com*




## உங்கள் நோக்கம் எங்கள் சிந்தனையுடன் இணைந்து சர்வதேசம் எங்கும் பரவிட...

## 'தமிழ் உலகத்தில்' விளம்பரம் செய்யுங்கள்






## Jeya Cakes




அழகான வர்ண வடிவமைப்பில் குறித்த நேரத்தில் தரமான கேக் வகைகளை பெற அழையுங்கள்

Mrs.Jeja David Tel: 079 40459521


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GLOBAL TOWERS
## HOTEL

COLOMBO - SRI LANKA

**உங்கள் விடுமுறை நாட்களின்**
**உல்லாச சுகத்தைத் தருவது**
**Global Tower Hotel மட்டுமே**



Marine Drive , Colombo- 06







* நீச்சல் தடாகம்
* உணவகம் (சிற்றுண்டிச்சாலை)
* 24 மணிநேர அறை பராமரிப்பு
* நீராவிக்குளியலறைகள்
* 24 மணிநேர பாதுகாப்பு
* உடற்பயிற்சி நிலையம்
* மதுபானசாலைகள்
* 3 படுக்கையறைகளுடன் சமையல் அறை
* முழுமையான சேவை வசதிகள்
* மத்திய குளிரூட்டி வசதிகள்
* பளிங்குக்கல் கொண்ட நிலம்



* Double Room from US $ 45/day
* 4 Star Hotel

For all the facilities of a prestige hotel with the privacy and comfort of your own high specification apartment, rent an apartment at Global Towers for any period of time . . .
From a short overnight stay to a year-long lease, the apartments can cater for up to 8 people and also offers single occupancy rates

Each fully furnished apartment consists of 3 double bedrooms and 3 bathrooms en-suite.

**பதிவுகளுக்கு அழையுங்கள்**

0044 20 8455 9001 (UK)
0094 11 259 1000 (Sri Lanka)

www.globallanka.com
E-mail: info@globallanka.co.uk

A Project by Global Lanka

Global Investment Lanka Holdings Limited Finchely Road - London NW11 7PE.UK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Global Towers Hotel
Colombo, Sri Lanka



Your holiday suite in Sri lanka with all our hotel facilities at your disposal

- Swimming pool
- Restaurant
- 24 hour room service
- Sauna & Jacuzzi
- 24 hour security
- Gym
- Pool & Sports Bar

3Bed Suites feature

- Fully fitted kitchen
- 3 double bedrooms
- 3 bathrooms en-suite
- Fully serviced
- Central air conditioning
- Fully furnished
- Marble flooring



Suites & Room Rates

| | |
|---|---|
| Single Rooms | US$ 45 |
| Double Rooms | US$ 55 |
| 2Bed 2 Bath Suites From | US$ 90 |
| 3Bed 3 Bath Suites From | US$ 110 |

30% Discount for booking of one month or more

www.globallanka.com





CALL NOW FOR BOOKINGS
T: 0044 20 8455 9001
E: info@globallanka.co.uk

# Global Travel Express

## MOST COMPETITIVE PRICES TO SRI LANKA / INDIA

Flight + Stay in 4* Hotel in Colombo

ONLY

**£575 - 7 Nights** **£715 - 14 Nights**

Price include flights + Accommodation on twin sharing room + Breakfast + Return Airport Transfers in Colombo

Valid for

* 08 APRIL '05 – 15 JULY '05 * 20 AUGUST '05 - 09 DECEMBER '05 * 25 DECEMBER '05 – 31 DECEMBER '05

-Conditions Apply-

**Tickets to any other Destination at Competitive Prices

Open on Saturdays till 2

PROTECTED

IATA

## Global Travel Express
899 – 901, Finchley Road
London NW11 7PE
United Kingdom

Tel 0208 455 9001

travel@globallanka.co.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org